CEYLON GOVT. S. S. C. TAMIL TEXT 1956—'5

ஸ்ரீ வில்லி பாரதம்

# புட்ப யாத்திரைச் சருக்கம்.

மூலமும் உரைக் குறிப்புக்களும்.

பண்டிதர் க. தம்பையா.

ஸ்ரீ பாரதி புத்தகசாலை,
சாவகச்சேரி.
(CEYLON.)

அர்ச். பிலோமினு அச்சியந்திரசாலை,
102, பெரியதெரு, யாழ்ப்பாணம்.

Copyright. 1948

## 1. பாரதம்

பூர்வ காலத்தில் துஷ்யந்த மன்னனுக்குச் சகுந்தலை வயிற்றிற் றோன்றிச் சிறந்து விளங்கியவன் பரத மகாராசன். அவன் ஆண்ட நாடு பாரத நாடு என்றும், அவனுடைய சந்ததியார் பாரதர் என்றும் சொல்லப்படுவர். பாரதருட் பிரசித்தி பெற்றவன் குரு என்னும் மன்னன்; அதனால் அவனுக்குப் பின்னுளோர் குருகுலத்தவர், கௌரவர் எனப்படுவர்; நாடு, குரு நாடு எனப்படும். குருகுலத்தில் பின் நாளிற் சிறந்து விளங்கியவர்கள் திருதராட்டிரமன்னன் புதல்வரான துரியோதனன் முதலிய நூற்றுவரும் பாண்டு மன்னன் புத்திரரான தருமன் முதலிய ஐவருமாவர். இப் பாரதர்களுடைய சரித்திரத்தைக் கூறும் நூல் பாரதமாகும்.

இதனை ஆரிய மொழியிற் செய்தவர், வேதங்களை அவை நுதலும் பொருள் பற்றி நான்காக வகுத்துப் பெருமை பெற்ற வியாசமுனிவர். அவர் இந் நூற்கும் ஏனை இதிகாச புராண நூல்களுக்கும் தாரதம்மியம் அறியக் கருதி, பாரதத்திற்கு ஒரு மணியும், மற்றவற்றிற்கு ஒரு மணியுமாகத் தராசின் தட்டில் வைத்து நிறுத்தபோது பாரதமணித்தட்டுப் பாரமுடைத்தாய்க் கீழே இறங்கியமையின் பாரம் (=மகிமை) உடைமை பற்றிப் பாரதம் எனப் பெயர் கூறினர் என்றும் கூறுவர். மகாபாரதம் என்ற பெயரும் சிறப்பியல் பற்றி வந்த பெயராகும். இப் பாரத இதிகாசம் பல லௌகிக வைதிக தர்மங்களைக் கூறுவதாய் இடையிடையே பல கிளைக்கதைகளைக் கொண்டு உத்தம சரித்திரத்தைக் கூறும்.

பாரதத்தைத் தமிழிலே, சங்க காலத்தில் இருந்த பெருந்தேவனார் என்னும் புலவர், இடையே உரை நடை செறித்து வெண்பாப் பாக்களினாற் பாடினார். (அதனால் அவர் பாரதம் பாடிய பெருந்தேவனார் எனப்படுவர்.) அந் நூல் இப்போது முற்றுங் கிடைத்தல் இல்லை.

அவருக்குப் பின் வில்லிபுத்தூராழ்வார் என்னும் புலவர் விருத்தப் பாக்களாற் பாடினர். அது வில்லி பாரதம் என வழங்கும். சுருங்கிய முறையிற் சிறந்த நூலாக அது மதிக்கப்படுகிறது.

அவருக்குப் பின் நல்லாப்பிள்ளை என்பவர் வில்லிபுத்தூரார் செய்த பாவுடன் தாமும் பாடிச் சேர்த்து விரிவுபடச் செய்தனர். அது நல்லாப்பிள்ளை பாரதம் என வழங்கும்.

இந் நூற்குக் கதா நாயகன் தருமனென்றும், துரியோதனனென்றும், கன்னனென்றும், கண்ணனென்றுங் கூறிப் பலர் தம்முள் மாறுபடுவர்.

பாண்டவருடைய சிறப்புக்களைப் பொருத கௌரவர் (துரியோதனனாதியர்) சகுனி மாமனின் புத்திப்படி, தருமனுடன் சூதாடி வென்று, அவர் நாடும் உரிமையும் கவர்ந்து, பாண்டவர்க்குப் பன்னீராண்டு வனவாசமும் ஓராண்டு அஞ்ஞாதவாசமும் நேர்ந்தனர். அவ் வண்ணமே ஐவர் மீண்டுவந்து கண்ணனைத் தூதனுப்பித் தங்காடும் உரிமையும் கேட்டனர் துரியோதனன் அதற்கு உடம்படாமையின் இரு திறத்தாரும் யுத்த சந்நத்தராய், குருக்ஷேத்திரம் எனனும் யுத்தபூமியில் பதினெட்டுநாள் யுத்தம் பண்ணினர்; அதன் பயனாகத் தருமன் முதலிய ஐவ ரொழிய ஏனையோர் மாண்டொழிந்தனர். பின் தருமன் முடிசூடிப் பெரியோர் ஆசிபெற்றுத் தருமநெறியில் ராச்சிய பரிபாலனம் பண்ணினன்.

## 2. புட்ப யாத்திரைச் சருக்கம்.

வியாசமுனிவர் சொற்படி அருச்சுனன் பாசுபதாஸ்திரம் பெறத் தவமேற் சென்று, பெற்ற பின், இந்திரன் வேண்ட அவனூர் சென்று அவன் செய்த சிறப்பெல்லாம் பெற்று, நிவாதகவசர் முதலிய அசுரர்களைக் கன்னிப் போரில் வெற்றி பெற்றான். பின் அருச்சுனன் வருகையை முன் உணர்த்த இந்திரனால் அனுப்பப்பட்ட உரோமச முனிவர், தருமன் முதலியோரை யடைந்து அருச்சு

னன் வரலாறு கூறி, அவர்களோடே பல தீர்த்தமாடிக்
காந்தர்ப்பம் என்னும் மலைச்சாரலில் வசித்தனர்.

ஒரு நாள் திரௌபதி முன் வானிலிருந்து ஒரு மலர்
வீழ, அவள் அதனைக் கண்டு விரும்பி, அதுபோல் மலர்
தேடித்தரும்படி வீமனை வேண்டினள். வீமன் முனிவ
ரிடம் அம்மலர் பற்றி வினவி, அவர் சொற்படி குபேர
புரிக்கு அப்புட்பம் பெற யாத்திரை போயினன்.

புட்ப யாத்திரை சென்ற வீமன், வழியிற் கதலி
வனத்துக் காவலரை யழித்து, அப்பால் தன் அண்ண
னை அநுமானைக் கண்டு, பின் நிகழும் போரில் அநு
மக்கொடி பார்த்தற்காக்கி, விசுவரூபங் கண்டு அவனருள்
பெற்று, இயக்கனூர்ச் சோலையை யடைந்தான். அங்கே
காவல் செய்தோர் பலரையும், குபேரனால் அனுப்பப்பட்டோர்
பலரையும் அதம் செய்து, குபேரனுடைய மகனாற் சமாதா
னப் படுத்தப்பட்டு விரும்பிய மலரைத் தருவுடன் பெற்று
தன்னைத் தேடிவந்த தருமனுடனும் கடோற்கசனுடனும்
மீண்டும் வந்து பாஞ்சாலி மகிழ மலர் நல்கி இருந்தான்.

---

# வில்லி புத்தூராழ்வார்.1.

பெண்ணை நதி பாயும் நடுநாடாகிய திருமுனைப்பாடி நாட்டிலே சனியூரிலே ஏறக்குறைய ஐந்நூறு வருஷங்களுக்கு முன்பு வீரராகவாசாரியர்2 என்பவரின் புத்திரராய் அவதரித்தவர் இவர். இளமையில் நல்லாசிரியர் பால் வடமொழி தென்மொழிகளைக் கற்று, நால்வகைக் கவியும் பாடும் வன்மை பெற்று, தமிழ் நாட்டு மூவேந்தராலும் தக்க வரிசை செய்யப் பெற்று வாழ்ந்தார்.

அக்காலத்தில் வக்கபாகை என்னும் நகரத்தில் கொங்கர் குலாதிபதியாய் அரசு செய்து, கல்வி செல்வம் கொடை வீரம் முதலியவற்றிற் சிறந்து, தமிழபிவிருத்தி செய்து, கண்டன் என்னும் சோழமகாராசனுக்குத் திருமுடி சூட்டி, அவன் பகைவரை வென்று எங்கும் அவன் புலிக்கொடியை நிலை நாட்டி வாழ்ந்த வரபதியாட் கொண்டான்3 என்பவன் வில்லி புத்தூராரைச் சன்மானித்து, லோகோபகாரமாக மகாபாரதக் கதையைத் தமிழிற் பாடவேண்டுமென்றான்; அதற்கிசைந்து பாரதம் பாடி அவனவைக்களத்து அரங்கேற்றினர். இது பாரதத்துக்கு வரந்தருவார் தந்த சிறப்புப் பாயிரத்தா லறியப்படும்.

இனி, இவர் தமது தம்பியாருடன் தாயபாகத்தில் மாறுபட்டு ஆட் கொண்டானிடம் முறையிட, அவன் இவர் புலமை யறிந்தானாதலின் "நீர் பாரதம் பாடி முடித்துத் தந்தபின் உமது வழக்கைத் தீர்த்து வைப்பேன்" என்றானாக, இவர் பாரதம் பாடினார் என்றும், பாண்டவர் கௌரவரும் தாயபாகம் காரணமாகப் பொருதிறந்தமையின் தம் பங்கைத் தம்பியாருக்கே கொடுத்து விட்டார் என்றும் சிலர் கூறுவர்.

1. இப் பெயர் வைணவமதப் பற்றும் பேரொழுக்கமும் பற்றி, பன்னிராழ்வாருள் ஒருவரான பெரியாழ்வார் என்னும் வில்லிபுத்தூராழ்வார் பெயரை இட்டு வழங்கிய தென்றும், வில்லிபுத்தூர் என்னும் ஊரிலே பலகாலம் வாழ்ந்தமையின் வந்த பெயரென்றும் கூறுவர்.

2. இவரை வில்லிபுத்தூரர் குரு வென்றும் கூறுவர்.

3. இவன் கொங்கர் கோன் என்றும், ஆட்கொண்டான் என்றும் வழங்கப்படுவன்.

மற்று, இவர் சந்தக் கவி பாடுவதில் தம்மிடம் தோற்ற புலவர்களின் காதைத் துறட்டாலே தோண்டி யறுத்திடுபவ ரென்றும், இவ்வாறு பலரை வென்று, திருவண்ணுமலையில் முருகக் கடவுளின் வரப்பிரசாதியாய் விளங்கிய அருண கிரிநாதருடன் வாதிட்டு, அவர் கந்தரந்தாதியிற் கூறிய ஒரு செய்யுளுக்குப் பொருள் கூற மாட்டாமற் ருேற்று நின்று, அவர் சொற்படி காதறுத்தல் ஒழிந்து செல்லுகையில், எதிர்ப்பட்ட சிவாலயத்துக்குத் திரையிட்டுச் சென்று, அதனல் கண்ணிரண்டுங் கெட்டு*நின்று, பின் அருண கிரியார் சொன்னபடி இடையிடையே சிவப்பெருமை தோன்ற மகாபாரதம் பாடினுர் என்றும் சிலர் கூறுவர்.

இவ் விரு வரலாறும் கர்ணபரம்பரைக் கதை;"......... குறும்பி அளவாக் காதைக் குடைந்து தோண்டி, எட்டின மட்டறுப்பதற்கோ வில்லியில்லை......" என ஒரு செய்யுள் தனிப்பாடலில் வருகிறது.

இவர் வைணவர் என்பது இவர் பெயரானும், பார தத்து ஒவ்வொரு சருக்க முகத்தும் கண்ணன் வாழ்த்துக் கூறுவதானும், "மருவிய பெரிய கோவில் மதிட்டிரு வரங்க மென்ணுக்., கருவிலே திருவிலாதீர் காலத்தைக் கழிக்கின்றீரே" எனத் திவ்வியப் பிரபந்தத்திற் கூறிய ஆழ்வார் கருத்தை "கரிய பைம் புயலைக் கைதொழும வரே கருவிலே திருவுடையவரே" எனத் தழுவிக் கூறு தல் முதலிய வற்ருனும் துணியப்படும். பாரதத்துள் சிவப் பெருமை கூறிவரும் செய்யுள்கள், தருமபுராவாதீனத்தைச் சேர்ந்த, கவிபாடுவதிற் பெருவல்லபம் படைத்த வெள்ளி யம்பலத் தம்பிரான் என்பவராற் சந்தர்ப்பத்துக்குப் பொருந்து மாறு பாடிப் புகுத்தப்பட்டன வென்பது சிலர் கொள்கை.

இவர் காலமும் அருணகிரிநாதர் இருந்த காலமும் இரட்டையர் இருந்த காலமும் ஒன்ருகும். வக்கபாகை நகராதிபதி அசனமளித்தபோது இரட்டையர் ஆட்கொண் டானைக் குறிப்பிட்டுள்ளனர்.

* இது அருணகிரிநாதர் சபித்தமையான் வந்ததென்றும் கூறுவர்.

இனி இவர் தம்மைப் புறந்தந்த ஆட்கொண்டானைத் தாம்பாடிய பாரதத்துப் பல விடங்களிற் சிறப்பித்துப் பாடியிருக்கின்றார். "......நாவலர்க்குப் பொன்மழை பொழியுங் கொங்கர் பூபதி......"(காண்டவதகனம் 50): "கொடிமதிற் பாகை வேந்தன் கொங்கர் கோன் புரவிக்காலால், வடதிசை யரசர் தங்கள் மாமமணி மகுடம்போல" (நிரைமீட்சி104); '......பாகையாட் கொண்டான் செங்கைப் பரிசு பெற்றவர்கள்போல.' (16-ம. போர் 90)"......பாகை வேந்தன், பாவலர் மானங் காத்தான் பங்கயச் செங்கை என்ன" 17-ம்போர்.33).

உவமைகள் (எண்: செய்யுள்).

1. விசயனைப் பிரிந்த தருமன்Xசிறகிழந்த பறவை. 3
2. வீமன் செலவுXஎக்காற்றுமுடன்றெழுந்த உகாந்த காலம். 16.
3. வீமன் செல்ல வனஞ் சிதைதல்Xஇராமதூதன் அரக்கன் சோலை யிறுத்தது. 17.
4. அநுமன் வழி நடுவே கிடந்ததுX'விம்பமால்வரை மீதொரு மேருவை யொக்கும் அம்பொன் மால்வரை யிருந்தது. 23.
5. கௌரவராலரசிழந்த வீமன் X சீயத்தாலரசிழந்திடும் சிம்புளேறு. 39
6. விசுவரூபத்தில் அநுமனுடலைச் சுற்றிய வால்Xமந்தரவெற்பை வளைத்த வாசுகி. 52.
7. வால் சுற்ற நின்ற அநுமன்Xநாளொடு......கோளணி சூழ்வரும் குன்றம். 53.
8. புண்டரிகன் மெய்Xஅஞ்சன மேகமோடாலமளாவி வஞ்சனை கொண்டு வகுத்தது. 68.
9. புண்டரிகன் வீழ்தல்Xவாயுவினால் மேரு கடலில் வீழ்தல். 80.
10. அரக்கரைக்கண்ட வீமன் Xஉழுவை கண்டவாளுகிர் மடங்கல். 96.
11. அரக்கரை வென்ற வீமன்Xசெப்படிப்பவர். 105.
12. சேனை கலக்கிய வீமன்Xவாவி கலக்கிய உம்பல். 107.

13. அரக்கர் சூழ நின்ற வீமன்Xயானை இனங்கள் வளைக்கும் யாளி. 112.
14. தண்டடிபட்ட சங்கோடணன்Xமெய்யிற் புண்புக உட்கியுளைக்கும் வேழம். 117.
15. தருமனுக்கு விசயன் பிரிவின்பின் வீமன் பிரிவுXமருமத்து வேல்தைத்த புண்மீது கனலுற்றது. 127.
16. தருமனும் கடோற்கசனும்Xபுண்ணியமும் பாவமும்; பரஞ்சோதியும் மாயையும். 131.

---

## கதைகள்

1. அகலிகை சாபம் தீர்ந்தது. 2.
2. அருச்சுனன் தவம் புரிந்தது. 5.
3. அருச்சுனனுக்கு இந்திரன் மகுடம் சூட்டியது. 5.
4. நிவாத கவச காலகேயர் வதம். 5.
5 பந்தரம் மத்தானமை. 9.
6. அநுமன் இலங்கையிற் சோலையிறுத்தது. 17.
7. அநுமன் இலங்கை எரியூட்டியது. 22.
8. வாமனன். 50.
9. இடிம்பன் வதம். 74.
10. மேருச் சிகரம் கடலுள் வீழ்ந்தது. 80.
11. மன்மதன் எரிந்தது. 92.
12. கோவிந்தன் குன்றெடுத்தது. 94.
13. கரதூஷணாதியர் வதம். 103.
14. கண்ணன் மருதூடு தவழ்ந்தது. 121.

மலர் பற்றி வந்த இடங்கள் : வனசமலர், 11. ஈது ஒக்கும் மணிமலர், 13. இத் துணைமலர், 40. தருமலர்ப் பெருஞ் சோலையிற் றங்குமம் மலர், 42. காவின் மேற் பயில் கடிமலர், 46. மன்றல் மலர்ப் பொழில் - அப்பொழில் காவல்.........தொலைத்தால்......மலர் பெறலாகும், 61; 62. மல்லல் மலர் தருவோடு வழங்கும், 63. அந்தக் கந்தவான் பொழில், 83. பொழிலில் வாசப் புதுமலர் கொய்ய வந்தேன், 93. பூ இந்த வனத்தில் நீயோ பறித்தி, 94. அந்தண் பொற்றரு நண்பின் வழங்கி, 123. அண்ணற்றரு, 124. இம் மலர்போல் மலர், 126. ஒரு வாசமலர், 129. நறை வாசமலர், 134. வாவிச் செழுந்தாம மலர், 137.

56-ஆவது செய்யுளின் பின், சில மூலப்பிரதிகளில் இச் செய்யுள் காணப்படுகிறது. வீமன் வேண்டியபடி அநுமன் விசுவரூப மொடுக்கியமை கூறப்படுகிறது.

அந்தமு மாதியு மற்றவ ருக்கஞ்
செந்தமிழ் செய்து திரட்டின ரைப்போ
லந்தர வானு மகண்டமு மொன்றூ
உந்திய மேனி ஒடுக்கின னம்மா.

உரை : அந்தமுமாதியுமில்லாத கடவுளுக்கு, அவர் பரந்த புகழை யெல்லாம் செந்தமிழ்ப் பாட்டைச் செய்து அதனுள் அடக்கிய பக்தர்களைப்போல, இடமற்ற ஆகாயமும் எல்லா உலகங்களும் ஒன்றுகும்படி வியாபித்திருந்த தன் மேனியை அநுமன் சுருக்கினன்.

12-ஆம் செய். உரைக் குறிப்பில் உவமைத்தொகை என்றிருப்பதை அன்மொழித்தொகை எனத் திருத்துக.

ஓம்

ஸ்ரீ வில்லி பாரதம்,

# புட்ப யாத்திரைச் சருக்கம்.

## வணக்கம்.

1. மற்கொண்டு வருத்தனைய சிகரத் திண்டோள்
வாளரக்கன் குலத்தோடு மடிய முன்னம்
விற்கொண்டு சரந்தொடுத்துப் புரையில் கேள்வி
விண்ணவர்தம் துயர்தீர்த்த வீர ராமன்
கற்கொண்ட வகலியைதன் உருவ மீளக்
கவின்கொள்ளக் கொடுத்ததிருக் கமல பாதம்
சொற்கொண்டு துதித்தெழுந்து துள்ளி நாளும்
தொழுமவரே யெழுபிறவித் துவக்கற் றாரே.

2. இப்பால்வெஞ் சிலைவிசயன் துறக்க மீதில்
இந்திரன்றன் னருகிருப்ப விமையோ ரூரில்
அப்பால்நற் றவம்புரிந்து தழல்கூர் வேள்வி
அந்தணர்தம் குழாஞ்சூழ அழகார் மண்ணில்
ஒப்பாரும் இலாதமட மயிலி னோடும்
உயர்வனத்தி னிடைநாளும் ஒருநாள் போலத்
தப்பாமல் அறம் வளர்க்கும் நீதி வேந்தும்
தம்பியரும் புரிந்ததினிச் சாற்று கிற்பாம்.

## உரோமச முனிவர் வரவு.

3. விறல்விசயன் தனைப்பிரிந்த வருத்த மேன்மேல்
விஞ்சவொரு தஞ்சமற வெம்பி யம்பொற்
சிறகிழந்த பறவையெனத் துணைவ ரோடும்
திறல்வேந்தன் சிந்தனையுற் றிருந்த காலைப்
பொறையறிவு நிறைதரும முடைய வாய்மைப்
போர்வேந்தே யஞ்சலெனப் புகழ்ந்து வாழ்த்தி
மறையொருபொன் வடிவுகொடு வந்த தென்ன
மாமுனியு மிமைப்பினுடன் வந்துற் றானே.

4. வந்தபெருங் கடவுள்முனி வரவு நோக்கி
வாள்வேந்துந் தம்பியரு மகிழ்ச்சி கூர்ந்து
சிந்தைவிழி மலரொடுபே ருவகை பொங்கச்
சென்றெதிர்போய் வணங்குதலுஞ் சிதைவி லாத
வந்தமுனி வரனுமவர்க் கன்பாற் றுன்பம்
அணுகாத அந்தமிலா வாசி கூறிப்
புந்தியுடன் அளித்தசெழும் புனித கோலப்
புலித்தவிசி னிருந்தடைவே புகன்று னெல்லாம்.

5. வாள்விசயன் புரவிசயன் தன்னை நோக்கி
மன்னுதவம் புரிந்ததுவு மகிழ்ச்சி கூர்ந்தவ்
வேள்விசயம் தவிர்த்தபிரான் அருளால் வேண்டும்
விறற்படைக ளளித்ததுவும் விபுதர் கோமான்
நாள்விசயம் பெறக்கொடுபோ யும்ப ரூரில்
நளிர்மகுடம் புனைந்ததுவும நாளும் தன்பொற்
றோள்விசயம் தொலைத்ததிற லவுணர் சேனை
சுடுசரத்தாற் றொலைத்ததுவுஞ் சூழ்ந்த யாவும்.

6. தன்னருகே அமரரெல்லா மினிது போற்றத்
தனஞ்சயனங் கிருந்ததற்பின் தயங்கும் சோதி
மன்னுமெழிற் காந்தர்ப்ப மென்னு நாம
வரைவழியே வருவதுவு மருவு காதல்
உன்னுடைய பெருந்துயரம் தணியு மாறும்
உரைத்தருள்க எனவும்பர் கோமா னுன்பால்
என்னைவிடுத் தனன்வந்தே னென்று னெல்லா
உலகமுடிந் திடுநாளு மீறி லாதான்.

## இந்திர நீலம் சார்தல்.

7. மாமுனிதன் மொழிகேட்டுப் புரையில் கேள்வி
மன்னவனும் தம்பியரும் வருத்த மாறிக்
காமியமென் றுரைபெறுசீர் வனத்தை நீங்கி
கடவுள்முனி தன்னோடுங் கணத்தி னேகி
நாமமது ஈரதீர்த்த முதலா வுள்ள
நற்றீர்த்த மெவற்றினும்போய் நான மாடித்
தாமமதி தவழ்சிகரத் திந்திர நீல
சயிலத்தின் சுனைகெழுதண் சாரல் சார்ந்தார்.

8\. அக்கிரியின் புதுமையெலா மடைவே நோக்கி
அங்குள்ள அருவிநறும் புனலு மாடித்
தக்கபுகழ் விசயனருந் தவம்பு ரிந்த
சாரலிது வென்றுதவ முனிவன் சாற்ற
மிக்ககளி உவகைநிகழ் நெஞ்ச ராகி
விசயனைக்கண் டனர்போல விரும்பிக் கண்டு
தொக்கமுனி கணத்தொடும்போய்த் தசாங்க னென்னும்
தொல்லைமுனி தபோவனத்தின் சூழல் சார்ந்தார்.

தசாங்கன் தபோவனத்தில்.

9\. அங்குள்ள தபோதனர்தம் பாதம் போற்றி
அவருரைக்கு மாசியும்பெற் றப்பா லேகி
எங்குள்ள கடவுள்நெடும் புனலும் யாறும்
எப்புனலுந் தப்பாம லினிதி னாடி
வங்கமெறி கடல்கடைந்து வானோர்க் கெல்லா
மருந்துவிருந் தருளியமந் தரமுங் காட்டிக்
கங்கைநதி குதிபாயும் சிகரச் சாரற்
காந்தர்ப்ப மெனும்வரையும் காட்டி னானே.

காந்தர்ப்ப மலைச்சாரலில்.

10\. அந்தவுயர் கிரியினெடுஞ் சாரல் தோறும்
அருந்தவஞ்செய் முனிவரரை அடைவே காட்டி
இந்தவனம் தனக்கெமையா ளுடையான் குன்றம்
ஈரைம்ப தியோசனையென் றெடுத்துக் காட்டிக்
கந்தனென எக்கலையும் வல்ல ஞானக்
கடவுள்முனி விசாலயனு லயமுங் காட்டி
உந்துநெறிச் செங்கோலா யிதனி லோரா(ண்டு)
இருத்தியென உரோமசனு முரைத்திட் டானே.

மயில்முன் மலர்.

11\. அம்முனிவன் மொழிப்படியே வரம்பில் கேள்வி
அறன்மகனும் தம்பியரும் அரிவை யோடும
எம்முகமும் தம்முகமா இலையும் காயும்
இனியகனி யுடனருந்தி இருக்கும் நாளில்
மைம்முகில்வா கனன்கனக முடிமே லம்பொன்
வனசமல ரொன்றுதமல் மயில்முன் வீழச்
செம்மலரைச் செங்கண்மலர் தன்னால் நோக்கிச்
செய்யமலர்க் கரத்தேந்திச் சிந்தித் தாளே.

12. இந்தமலர் உலகனைத்தும் ஈன்ற கோல
எழில்மலரோ இரவிதிருக் கரத்தில் வைகும்
அந்தமல ரோவமுதிற் பிறந்த பாவை
அமர்ந்துறையு மணிமலரோ அவனி தன்னில்
எந்தமல ருங்கருக்க் கமழா நின்ற (து)
எங்கெங்கு மிதன்மணமே யென்று போற்றிக்
கந்தவகன் மைந்தனுக்குக் கனலோ னல்கும்
கனங்குழைசென் றுவகையுடன் காட்டிச் சொல்வாள்.

வீமனும் மலரும்.

13. இம்மலருக் கொருமலரு மவனி தன்னில்
எதிரில்லை யென்றிதழா யிரத்தின் மிக்க
அம்மலரைக் கைம்மலரிற் கொடுத்தீ தொக்கும்
அணிமலர்நீ யெனக்கருள வேண்டு மென்னச்
செம்மலையிற் றிகழ்சிகரத் திண்டோள் வீமன்
தெய்வமுனிப் புங்கவன்தன் திருத்தாள் போற்றி
மெய்ம்மலரைத் திருமுன்பு வைத்து நின்று
வினவினா னவனுமெதிர் விளம்பு வானே.

மலரின் வரலாறு.

14. என்பலவு மியாமுரைப்ப திந்தப் பூவின்
இயல்பினையும் பெருமையையும் இயக்கர் தங்கள்
மன்பதியி லுளதன்றி வரம்பி லாத
வானுலகி னுளதென்னின் மற்று முண்டோ
உன்பிறருக் கிதுகோடற் கெளிதோ மாயன்
உம்பர்பதி புகுந்தொருபைந் தோகைக் கீந்த
பின்பிதனைக் கண்டறிவா ரில்லை யென்று
பேசினான் யாவரொடும் பேச்சி லாதான்.

வீமனின் புஷ்ப யாத்திரை.

15. இயக்கர்பதி தனிலுளதென் றிசைத்த மாற்றம்
இன்புறக்கேட் டொருகாலு மீறி லாத
வயக்கொடுவெஞ் சராசனமும் வன்போர் வாகை
மறத்தண்டும் கரத்தேந்தி மடந்தை நெஞ்சில்
துயக்கமற விக்கணத்திற் றெய்வ போக
சுரபிமல ரளித்திடுவ னென்று சொல்லிச்
சயக்கரட முறுதறுகட் சயில மன்ன
சதாகதிமைந் தனுமிமைப்பிற் றனிசென் றானே.

இயக்கர் — யக்ஷர்.
உம்பர்பதி — தேவலோகம்.

16. கைக்காற்றுந் தொடைக்காற்றும் மூச்சுக் காற்றும்
கனகமணி வரைபோலக் கவின்கொள் சோதி
மெய்க்காற்றும் பரந்தெழுந்து வனத்தி லுள்ள
வெற்புநெடுந் தருவனைத்தும் ஒடிந்து வீழ
வெக்காற்று முடன்றெழுந்த வுகாந்த காலம்
எனச்சென்றான் இனவனைகள் எண்ணில் கோடி
செய்க்காற்றுஞ் செழுந்தாள நிலவு வீசச்
சேதாம்பல் பகல்மலரும் செல்வ நாடன்.

17. இலங்கைநகர் தன்னில்விற லிராம தூதன்
இகலரக்கன் சோலையெலாம் இறுத்த வாபோல்
நிலங்குலுங்க வரைகுலுங்க வனத்தி லுள்ள
நெடுந்தருக்க ளியாவையும்வே ருடனே ராக்கி
விலங்கினொடு புள்ளினமு மடையத் தாக்கி
மெய்ந்நடுங்கித் தடுமாறி வெம்பி உள்ளம்
கலங்கிவிழக் கனமதிர்வ போல ஆர்த்துக்
காஞ்சனப்பே ரெழில்வனமுங் கடந்திட் டானே.

18. அவ்வனத்தை யிகந்தநந்த காத மேகி
அங்கிடைவிட் டுத்தரத்தி னப்பா லேகி
மெய்வனப்பு மடல்வலியு மிகுந்த வாகை
வீமனெனும் பேர்திசையின் விளக்கும் வீரன்
மைவனப்பி னுடன்படியும் சினைக்கை வாச
மலர்ப்பொழிலி னொருமருங்கே மத்த மாவின்
கைவனப்பும் தழைசெவியு மருப்புஞ் சேரக்
கவினளிக்கும் குலைக்கதலிக் காடு கண்டான்.

19. அக்கதலி வனந்தனக்குக் காவ லாகும்
அடலரக்க ரநேகருடன் அடுபோர் செய்து
மிக்கதலம் குருதியினால் வெள்ள மாக்கி
வெகுண்டவர்தம் மாவியையும் விண்ணி லேற்றித்
திக்கதல முதலாமெவ் வுலகு மேங்கச்
சிங்கநாத முஞ்செய்தான் செய்த காலை
உக்கதலை மணியுரக ராசர்க் கென்றால்
உம்பர்படுந் துயரமெம்மா லுரைக்க லாமோ.

20. வரைகலங்க வனங்கலங்கக் கலங்கு ருத
மண்கலங்க விண்கலங்க மகர முந்நீர்த்
திரைகலங்கத் திசைகலங்க வீறி லாத
செக்கலங்க வுகங்கலங்கச் சிந்தை தூயோர்
உரைகலங்க உளங்கலங்கத் துளங்கி மெய்யில்
ஊன்கலங்க விலங்கொடுபுள் ளினங்கள் யாவும்
நிரைகலங்க உலகினுயிர் படைத்த தம்மில்
நிலைகலங்கா தனவுண்டோ நிகழ்த்தி னம்மா.

வேறு.

அநுமான் எதிர்கோடல்.

21. அந்த ஓதையப் பொழிலிடைத் தவம்புரிந் தருளு
மந்த ராசல மனையதோள் மாருதி கேட்டு
விந்த மன்னதிண் புயாசல வீமனுக் கெதிர்போய்
முந்த மற்றவன் வருநெறி யதனிடை முன்னி.

22. வெற்பி ரண்டினில் வேலைமுன் கடந்ததாள் நீட்டிப்
பொற்பு யாசல மிரண்டையு மிருவரை போக்கி
அற்ப வாழ்வுடை அரக்கன்மா நகரழ லூட்டும்
சிற்ப வாலதி திசையெலாம் சென்றுநின் றோங்க.

23. எம்பி ரான்தனக் கொழியவே றியாவர்க்குந் தெரியாச்
செம்பொன் மாமணிக் குண்டல மிருபுறந் திகழ
விம்ப மால்வரை மீதொரு மேருவே யொக்கும்
அம்பொன் மால்வரை யிருந்தென விருந்தன னனுமான்.

அநுமன்முன் வீமன்.

24 குகைத்தடங் கிரியனைய தோள்கொட்டி யார்த்து ரப்பி
நகைத்து நாகமு நடுங்கிட நடந்தன னடந்து
மிகைத்த வாளரி போல்வரும் வீமன்முன் கண்டு
திகைத்து நின்றனன் மறமையும் திறமையு முடையான்.

அநுமன் கூற்று.

25. அண்டர் தானவ ராக்கரு மனுகுரு வனத்தில்
எண்டி சாமுக மெங்கணும் இரிந்திட வார்த்து
மண்டி மேல்வரு மானுட னாடா வென்றுன
சண்ட வாயுவின் தனயனை மற்றவன் தமையன்.

### வீமன் கூற்று

26. தம்மு னாகிய வானரஞ் சாற்றிய உரைகேட்
டெம்மு னாகிவந் திருந்தநீ யார்கொலென் றிசைத்தான்
தெம்மு னாயினுஞ் செவ்வியென் போகமா மகளிர்
தம்மு னாயினும் நாத்தவ றுவடல் வீமன்.

### அநுமன் ஆணை.

27. துன்னும் வெஞ்சிலை வலிகொலோ தோளிணை வலியோ
என்னை நீ புகல் ஆரடா என்பதிங் கெவனோ
உன்னை நீயறி யாநெறி யுணர்விலா மனிதா
மன்னும் வால்தனைக் கடந்துபோ வல்லையே யென்றான்.

### வீமன் பதில்.

28. உரங்கொள் வீமனம் மாருதி யுரைத்தசொற் கேளா
வரங்கொள் வார்சிலை யிராகவன் மாபெருந் தூதன்
தரங்க வாரிதி தாவுமென் தம்முன்வா லன்றிக்
குரங்கின் வாலிது கடப்பதிங் கரியதோ கூறாய்.

### அநுமன் சோதனை.

29. என்று தன்திருத் துணைவனின் றிசைத்தது கேட்டு
நன்று நன்றுநீ நவின்றது நன்றென நகையாத்
துன்று வார்சிலை மனிதனைச் சுமந்துதோள் வருந்தும்
புன்றொ ழிற்சிறு குரங்கையோ என்னொடும் புகல்வாய்

### வீமன் பதில்.

30. குரக்கு நாயக னவ்வுரை கூறலுங் கேட்டுத்
தரைக்கு நாயகன் தடம்புயம் குலுங்கிட நகையா
அரக்கர் நாயகன் ஊரழ லூட்டியிவ் வகிலம்
புரக்கு நாயகன் தன்னையோ விழித்துநீ புகல்வாய்.

### அநுமன் வினவும் வீமன் விடையும்.

31. பின்னும் வார்சிலை யிராகவன் பெருமையு மனுமான்
மன்னு தோளிணை வலிமையு மாருதி சாற்ற
அன்ன போழ்தினி லகமகிழ்ந் தருளுட னோக்கி
என்ன காரியம் வந்ததிங் கியார்சொனீ யென்றான்.

32. தாம மாருதி உரைத்தசொற் றம்பியும் கேட்டு
நேமி மாநிலம் புரக்குநல் நீதிவேற் றரும
நாம நாயகற் கிளையவன் நரனுக்கு மூத்தோன்
வீமன் வாயுவின் புதல்வன்யா னென்றனன் விறலோன்.

33. அன்ன வாசகம் அவனுரைத் தலுமிகல் அநுமான்
கன்ன பாகமுஞ் சிந்தையு முந்துறக் களித்து
மின்னு வார்சிலை யிராகவன் மெய்ப்பெருஞ் சீர்த்தி
சொன்ன வாறுநன் றுனக்கிதார் சொற்றவ ரென்றான்.

34. வாத்தி னலரு மறையினல் வார்சிலை பயிற்றும்
பாத்து வாசன்முன் பகர்தரக் கேட்டனன் பலகாற்
றிரத்தி னுலுபர் இராகவன் சிலைவலி என்றான்
உரத்தி னலொரு வீரரு மொப்பிலா உரவோன்.

அநுமன் தன்னைக் கூறல்.

35. குந்தி கான்முளை கூறிய வாசகம் கேட்டுப்
புந்தி யாலுயர் அஞ்சனை புதல்வனும் புகல்வான்
சிந்து சீகரச் சிந்துமுன் கடந்து செந்தீயால்
உந்து வாள்வலி நிருதரூர் ஒருங்குசுட் டவனும்.

36. அந்த வார்சிலை இராமனுக் கடிமையாய் என்றும்
சிந்தை யாலவன் திருப்பதம் சிந்தை செய்பவனும்
உந்தை யாகிய வாயுவுக் குறபவித் தவனும்
இந்த வாழ்வுடை அநுமனே என்றனன் இகலோன்.

அண்ணனும் தம்பியும்.

37. என்ற வாசக மிருசெவிக் கமுதெனக் கேட்டுத்
துன்று நெஞ்சினி லுவகையன் துதித்தனன் துள்ளி
என்றும் யாமுயல் தவப்பய னிருந்தவா வென்னச்
சென்றி றைஞ்சினன் திரைக்கடல் கடந்தசே வடிமேல்.

38. தம்பி யைத்துணைத் தாழ்தடக் கைகளா லெடுத்து
வம்பு சேர்மணி மால்வரை மார்புற வணைத்துப்
பம்பு செந்தழற் கானிடைப் பதமலர் சிவப்ப
வெம்பி நீதனி நடந்தவா றென்கொலென் றிசைத்தான்.

39. தாயத் தாரும்வெவ் வஞ்சனைச் சகுனியும் கூடி
மாயத் தாலொரு கவறுகொண் டெங்கள்மண் கொண்டு
நேயத் தானெடுங் கானக நேர்ந்தன ரென்றான்;
சீயத் தாலரச சிழந்திடும் சிம்புளே றனையான்.

40. திகந்த மெட்டினுந் தன்மண மொல்லெனச் செல்லச்
சுகந்த புட்பமொன் றியாமுறை வனத்தினிற் றோன்றத்
தகைந்த அப்புது மலர்தனைத் தழல்மகள் காணு
வகைந்த இத்துணை மலரெனக் கருளுதி யென்றாள்.

41. ஆத லாலிவன் யானுமின் றணுகின னென்று
நீதி யாலுயர் தம்முனை நெடுந்தகை போற்றக்
கோதி லாதவக் குரிசிலுங் குமரனை நோக்கித்
தீதி லாயிது கேட்கெனச் செப்புவன் மாதோ.

மலரின் இடமும் அது பெறல் அருமையும் கூறல்.

42. அருநி திக்கிழ வன்றன தளகைமா நகரின்
மருமி குத்தநீள் மஞ்சன வாவியின் கரையின்
தருமலர்ப்பெருஞ் சோலையிற் றங்குமம் மலர்சென்
றுரிமை யுற்றது கோடல்மற் றும்பாக்கு மரிதால்.

43. ஈறி லாவிகல் அரக்கரோ டியக்கர்தங் காவல்
கூறும் வாசகம் பொய்ப்பவர் கூர்தவ முயலும்
பேறி லாதவர் பேரரு ளிலாதவர் பிறிதும்
ஆறி லாதவர் தமக்குமங் கணுகுத லரிதால்.

44. அறிவும் வாய்மையும் தூய்மையு மன்புமின் னருளும்
பொறையும் ஞானமும் கல்வியும் புரிபெருந் தவமும்
நெறியும் மானமும் வீரமும் நின்னவா தலினுற்
பெறவு னக்கரி தாயதே தென்றனன் பெரியோன்.

வீமன் மலர் பெறுந் திறங் கூறல்.

45. முன்ன வன்புகல் உறுதிகூர் மொழியெலாங் கேட்டுப்
பின்ன வன்றொழு திவையிவை பேசினன் பின்னும்
மன்னர் மன்னவ னறமுண்டு மறமுண்டு வழக்கே
யுன்னில் உன்னருள் உண்டுதிண் டோளுர முண்டால்.

46. தேவர் காக்கினும் தயித்தியர் காக்கினும் சிறந்த
மூவர் காக்கினும் முறைமுறை மொழிந்தமூ வுலகில்
யாவர் காக்கினும் இக்கணத் தியக்கரு ரெய்திக்
காவின் மேற்பயில் கடிமலர் கவருவே னென்றான்.

அநுமன் அக மகிழ்வு.

47. ஆண்ட வன்புகல் உறுதியு மாண்மையுங் கேட்டு
நீண்ட தோள்வய மாருதி நெடுதுவந் தருளிப்
பாண்ட வன்றனைப் பண்புறப் பரிவினு னோக்கி
வேண்டு நல்வரம் வேண்டுக வீண்டைநீ என்றான்.

வீமன் .வேண்டிய வரம்.

48. நெடிய கானக நீங்கியா நெறியினே ரலரைக்
கடிய வெஞ்செருப் புரிபெருங் குருதிவெங் களத்தில்
அடிகள் ஆங்கெழுந் தருளிவந் தருச்சுனன் தடந்தேர்க்
கொடியின் மீதுநின் றுவந்துகூத் தாடுதிர் என்றான்.

49. நீட்டு மவ்வர மவனுக்கு நேர்ந்தன னனுமான்
மீட்டு நல்வர மொன்றுமுன் வேண்டினன் வீமன்
ஈட்டு மாநிதி இலங்கைதீ யிட்டநா ளிசைந்த
மோட்டுருத்தனைக்காட்டுகென்றிறைஞ்சினன்முதல்வன்,

வேறு

இலங்கை தீயிட்டநாள் இசைந்த உருக்காட்டல்.

50. என்றல் வீமன் இசைத்திடு முன்னம்
ஒன்றியிவ் வேழுல கங்களு மொன்று
மன்றுள தாழ்புனை வாமன னைப்போல்
நின்றுநி மிர்ந்தனன் நித்தமும் உள்ளான்.

51. படியின தெல்லை பதத்தின தெல்லை
மடியின தெல்லையவ் வானின தெல்லை
அடியின தெல்லை யளப்பரி தென்றால்
முடியின தெல்லை மொழிந்திட லாமோ.

52. அந்தர மெங்கு மடக்கிய மெய்யில்
சுந்தர வாலதி சுற்றிய தோற்றம்
முந்திய நீளுடல் வாசுகி முன்னாள்
மந்தர வெற்பை வளைத்தது மானும்.

53. நீளகல் வான நெருங்க மருங்கே
தோள்புற வாலதி சூழ்தர நிற்போன்
நாளொடு தாரகை ஞாயிறு முதலாம்
கோளணி சூழ்வரு குன்றமு மொத்தான்.

54. இவ்வகை முன்னம் இலங்கை எரித்தான்
பைவரு நாகர் பணஞ்சுளி யத்திண்
மெய்வகை கொண்டது கண்டு வியந்தார்
மைவகை சேரகல் வானவர் எல்லாம்.

55. மேலள வாது விளங்கிய சொல்மெய்ந்
நூலள வாகிய நுண்ணறி வோர்போல்
மாலள வன்றி வணங்குத வில்லான்
காலள வல்லது கண்டிலன் வீமன்.

56. அருக்கனின் மும்மடி யாரொளி வீசும்
உருக்கிளர் மேனியை யூடுற நோக்கா
வெருக்கொடு தாண்மிசை வீழ்ந்தனன் மீண்டு
சுருக்குக வென்று துதித்தனன் வீமன்.

57. இந்திர சால மியற்றின ரைப்போல்
மைந்தொடு தொல்லையில் வடிவுகொள் பொழுதத் (து)
அந்தமி லாயடி யேன்பிழை யெல்லாம்
புந்தியு ளுத பொறுத்தரு ளென்றான்.

58. திருவடி தன்னிரு சேவடி யிற்போய்
மருவடி தார்புனை மாருதி தொழவே
அருவடி வாகிய கண்டமு மெங்கும்
ஒருவடி வானவன் உற்றுரை செய்வான்.

## அநுமன் ஆசி.

59. உன்னரு கேபயில் உம்பிய ரோடும்
மின்னரு கேபயில் வேங்கொடும் வாழ்வுற் (று)
என்னரு மேவரு கென்றன னென்றுந்
தன்னரு கேதமு றுத தவத்தோன்.

## இயக்கர் பதி எய்து நெறி இயம்பல்.

60. அங்கவ னம்மொழி கூறலு மையா
எங்கணு நின்னுய ரின்னரு ளுண்டே
பங்கய மாநிதி வாழ்பதி யெய்தச்
சங்கையி னன்னெறி சாற்றுக வென்றான்.

61. என்றலு மிந்த வனத்தின தெல்லை
ஒன்றிய யோசனை ஓரிரு நூறு
சென்றபின் யோசனை சிற்சில சென்றால்
முன்றல் மலர்ப்பொழில் வாவியில் மன்னும்,

62. அப்பொழில் காவ லரக்க ரநேகர்
எப்பொழு தூந்திறை கொள்ளு மெயிற்றோர்
துப்புட னேயவ ராவி தொலைத்தாற்
செப்பிய மாமலர் சென்றுற லாகும்.

63. அல்லது நீடள காபதி தானும்
மெல்லிய வப்பொழில் மேவிய போது
நல்லுற வாகி நயத்தொடு சென்றால்
மல்லல் மலர்தரு வோடு வழங்கும்.

## சென்று வருகென்றல்.

64. உறுதியு மொன்னல ருக்கமு மேகும்
நெறியின தெல்லையி னீர்மையு நெறியிற்
குறிகளும் யாவையும் அன்பொடு கூறி
அறிவுடை யான்விடை அன்பொ டளித்தான்.

### வீமன் செலவு.

65. மொய்ம்புடை மாருதி தாளிணை முன்னு
வெம்பிய கானிடை மேவிய பயணிங் (கு)
எம்பெரு மானுனை யெய்தின னென்னு
நம்பிபு நாழிகை ஒன்றில் நடந்தான்.

66. அக்கண மாசுவி ஞசுகன் மைந்தன்
மிக்குயர் விஞ்சையர் நாட்டிடை விட்டுத்
திக்குறை நாகர் திரண்டு துதிக்கும்
சக்கர நாக மதன்புடை சார்ந்தான்.

67. தவாமறை வாணர் தவம்புரி யுந்தண்
கவானுடை நீள்குக ரத்துயர் கலைசேர்
உவாமதி சூழ்வரு மோங்கலொ டொக்கும்
திவாகர மால்வரை சேர்ந்திடு மெல்லை.

### புண்டரிகனின் பொங்கிய சீற்றம்.

68. அஞ்சன மேகமொ டால மளாவி
வஞ்சனை கொண்டு வகுத்தன மெய்யான்
குஞ்சிகள் வானி னிடைக்கொடி யோடிச்
செஞ்சுடர் கால்தரு கின்ற சிரத்தான்.

69. குளிர்வரை ஒன்றிய நீள்குக ரம்போல்
அளவில் பெரும்பகு வாயதன் மதியின்
பிளவென லாவளை யும்பிற ழுந்தண்
ணிளநில வென்ன விலங்கு மெயிற்றான்.

70. ஆறிரு காத மகன்றிடு தோளான்
நூறிரு காத நெடிக்கு ணடப்பான்
ஏறுடை யான்முத லானவ ரேனும்
மாறொடு காதி மலைந்திட வல்லான்.

71. எண்டிசை யுந்திறை கொண்டிக லோடும்
புண்டரி கப்பெயர் நாடு பொறித்தோன்
திண்டிறல் மாருதி செய்வரு வானைக்
கண்டன னங்கழல் கான்றிடு கண்ணன்

72. உருத்து முகிற்குல முட்குடன் மட்கச்
சிரித்தி தழ்கவ்வி யெயிற்றிணை தின்றுங் (கு)
அரித்து வசந்தனை நோக்கி யரக்கன்
கருத்துட னின்றிவை கட்டுரை செய்வான்.

புண்டரிகனின் கட்டுரை.

73. யானுறை கானக மென்றிமை யோரும்
தானவர் தாமும் இதற்கிடை சாரார்
மானுட னீயிவண் வந்தது சுவையாம்
ஊனிட வோவிஃ துரைத்திடு கென்றான்.

உன்னுவி உண்ண வந்தே னென்றல்.

74. வென்றி யரக்கன் விளம்புதல் கேளாக்
குன்றன தோள்கள் குலுங்க நகைத்தாங் (கு)
உன்றன தாவியும் முண்டிட வந்தேன்
என்றனன் முன்ன மிடிம்பனை வென்றோன்.

வீமன் வெம்போர்.

75. மற்றது கூற மறத்தொ டரக்கன்
உற்றெதி ரோடி யுறுக்கிய போதக்
கொற்றவ னுங்கதை கொண்டுடன் மண்டிப்
பற்றினன் வந்தனன் ஆவி பறிப்பான்.

76. குன்றொடு குன்றமர் கூருவ தேபோல்
நின்றுநெ டும்பொழு தாகம லைந்தும்
வன்றிற லுந்தம வாகுவின் வலியும்
ஒன்றுமி ளைத்தில ரொத்தவு ரத்தார்.

77. எல்லையி லாவம ரிங்கிவ ரிவ்வா (று)
ஒல்லையின் மோதி உடன்றிடு போழ்தில்
தொல்லையி லோர்முனி சொல்லிய சாப
மல்லல ரூபி வழங்கிய தன்றே.

அசரீரி கூற்றும் பயனும்.

78. ஒன்றினு மாவி யுனக்கிவ ணெல்கான்
துன்றிடு தோள்மிசை தோமர மேவிக்
கொன்றிடு வாயினி வாயுகு மாரா
என்றது வானி னிடத்தச ரீரி.

79. அங்கச ரீரி யாற்றிய சாபம்
சங்கையு றுது சமீரணி கேட்டுப்
பங்கய நாம நிசாசர பதிதன்
துங்கவ யப்புய மேற்கதை தொட்டான்.

80. தொட்டகொ டுங்கதை தோளுறு முன்னர்ப்
பட்டுள நொந்து பதைத்தடல் வஞ்சன்
வட்டநெ டுங்கட லூடும ருத்தன் (று)
இட்டபெ ருங்கிரி என்னவி ழுந்தான்.

வேறு

வீமன் கொற்றம்.

81. ஏற்றத்தே ரடிகலி யிவ்வா
றிடைவழி யதனில் வந்து
சீற்றத்தோ டெதிர்ந்த வெம்போர்த்
திண்டிற லரக்கன் தன்னைப்
பாற்றுக்கும் பகுவாய்ப் பேய்க்கும்
பருந்துக்கும் வருந்து கின்ற
கூற்றுக்கும் விருந்து செய்தக்
கொற்றவேற் குரிசில் போனான்.

அழகாபுரி கண்டது.

82. எண்டிசை யமரர் போற்று
மிந்துமால் வரைசென் றெய்திப்
புண்டரீ கன்றன் நாடு
பொருக்கென நெருக்கி யப்பாற்
றெண்டிரை யளித்த தெய்வச்
செல்வமா நிதிக ளோங்கும்
அண்டர்மா நகரு மொவ்வா
அளகைமா நகரங் கண்டான்.

பொழிலுந் தடமும் கண்டது.

83. அந்தமா நகரின் தென்பால்
அகல்விசும் புறநின் றோங்கும்
விந்தமா மென்ன நின்று
விளங்குதோள் வீம சேனன்

முந்தைமா றுதிநண் போடு
மொழிவழி யெய்தி அந்தக்
கந்தவான் பொழிலு நன்னீர்க்
கடிமலர்த் தடமுங் கண்டான்.

பொழில் காப்போர்.

84. ஆயிடைக் குறுகு மெல்லை
அப்பொழில் றப்பிற் காப்போர்
சேயிடைப் பரந்த மார்பர்
சேணிடை கடந்த தோளர்
வாயிடைப் பிறைக ளென்ன
வளைந்தவா ளெயிற்றர் வஞ்சத்
தீயிடைச் சோரி தோய்ந்து
திரண்டெனச் சுழல்செங் கண்ணர்.

85. சூழிருட் பிழம்பு நஞ்சு
தோய்ந்தன்ன துவக்க ணுன்னில்
நாழிசை யொன்றி னெல்லா
உலகையு நலியு மீட்டார்
[illegible]ழிமந் தரமத் தாக
வாசுகி கயிறு மாயோன்
ஆழிநீர் கடைந்த நாளும்
அழுதெழக் கடைந்த வீரர்.

86. மறத்தொடு வஞ்ச மீன
நண்பென வளர்த்து நாளும்
அறத்தொடு பகைக்கும் நெஞ்சர்
பிலத்தினு மகன்ற வாயர்
புறத்தினின் முகத்தர் மார்பிற்
புழைமுழை மூக்க ரின்ன
திறத்தினர் குஞ்சிச் செந்தீச்
சிரத்தினர் வாதத்தின் மிக்கோர்.

87. கரங்களா யிரத்தர் நண்ணுங்
கால்களா யிரத்தர் குஞ்சிச்
சிரங்களா யிரத்தர் பூழைச்
செவிகளா யிரத்தர் வென்றி

உரங்களா யிரத்தர்; ஊழி
தவமுயன் றுரிமை பெற்ற
வரங்களா யிரத்தர்; மிக்க
மறைகளா யிரத்தர்; மன்னே.

88. வைத்தாரை வாளம் வில்வேல்
மழுவெழுத் திகிரி சூலம்
கைத்தாரை படக்கொண் டென்றுங்
கண்ணிமை யாது காப்போர்
மைத்தாரை மாரி யொப்பார்
மானுட நாற்றங் கேட்டு
மொய்த்தாரக் கடவுள் வாச
மொய்ம்மலர்ச் சோலை யெல்லாம்.

89. மண்டியெங் கெங்கு மேன்மேல்
முறிகடல் முகக்கு நீலக்
கொண்டலிற் குழுறி யார்த்துக்
குறுகிய கொடிய நீசர்
சண்டவே கத்தி னெய்துஞ்
சதாகதி தனயன் தன்னைக்
கண்டனர் சூலபாச காலனைக்
கண்ட தன்னார்.






வீமனைக் கண்ட காவலர் கூற்று.



90. எற்றவென் பாருஞ்; சூலத்
தெறியவென் பாரும்; வெய்திப்
பற்றவென் பாரும்; ஆவி
பறிக்கவென் பாரும்; யாக்கை
சுற்றவென் பாரும்; சென்னி
துணிக்கவென் பாரும்; ஆகி
உற்றனர் நூறா
யிரருந் துரைக்க லுற்றார்.

91. இந்திரன் முதலா வுள்ள
இமையவர் தாமும் இந்தக்
கந்தவரின் சோலை கண்ணால்
நோக்கவும் கருதி னைவார்

வந்ததென் மதியி லாத
மானுடா வுன்ற னாவி
சிந்துமுன் செப்பு கென்னத்
தெளித்தனர் தீயோ ரெல்லாம்.

வீமன் நகையால் விடை தந்தது.

92. அருளிலா விரக்கர் நிவ்வா
றதங்கரித் தாற்று மிந்தப்
பொருளிலா உரைகட் கெல்லாம்
உத்தரம் புகலா னாகி
இருளிலா முத்த மன்ன
எயிற்றரும் பிலங்க நக்கான்
தெருளிலா மதனை முன்னம்
எரித்திடும் சிவனைப் போல்வான்.

வீமன் வாசமலர் கொய்யவந்தேன் எனல்.

93. தனிதமே கம்போ லார்க்கும்
நமதுயிர் சரத்திற் சாய்த்திப்
புனிதவான் பொழிலில் வாசப்
புதுமலர் கொய்ய வந்தேன்
குனிதவர் கொண்டு முன்னுங்
குலங்கரி சறுத்த வீரன்
மனிதனே வானு ளானே
மறந்திரோ வஞ்சர் என்றான்.

காவலர் கதுமென எழுதல்.

94. மாவிந்த மனைய போற்றாள்
மாருதி வாய்மை கேட்டுப்
பூவிந்த வனத்தி னீயோ
பறித்தியென் றழன்று பொங்கி
நாவிந்த உரைதந் தின்னு
மிருப்பதோ நானுக் கென்னக்
கோவிந்தன் தடுத்த குன்றிற்
கொண்டலின் குழாத்திற் சூழ்ந்தார்.

## வீமன் கதைப் போர்.

95\. வானக மறைய வீசி
வான்படைக் கலங்கள் வால
சேனனே முதலா வுள்ள
சேனையின் தலைவர் ஆர்த்தார்
கானுடைத் தொடைய லானும்
காலனுக் காவி யன்ன
தானுடைத் தண்ட மேந்திப்
புகுந்தனன் சலிப்பி லாதான்.

96\. தண்டினா லவர்கள் விட்ட
படையெலாம் தகர்த்து மீள
மண்டினா னுழுவை கண்ட
வாளுகிர் மடங்க லொப்பான்
மிண்டினா ருடலம் யாவும்
மெய்தலை தம்மி னொன்றக்
கிண்டினான் மூளைச் சேற்றிற்
கிடத்தினான் படுத்து மன்னோ.

97\. தாக்கினான் சிலரைத் தண்டாற்
றடக்கையாற் சிலரை வானிற்
றூக்கினான் கறங்கி னின்று
சுழற்றினான் சிலரை யெற்றி
நூக்கினான் சிலரைத் தாளால்
நொறுக்கினான் சிலரை வாளால்
வீக்கினான் சிலரை யாவி
வேறிட்டான் சிலரை வீமன்.

98\. பிடித்தனன் சிலரை அள்ளிப்
பிசைந்தனன் சிலரை மண்ணில்
அடித்தனன் சிலரை அங்கம்
அசைத்தனன் சிலரை எண்ணம்
முடித்தனன் சிலரைப் போக
முகிழ்த்தனன் சிலரைக் கண்டம்
ஒடித்தனன் சிலரை ; அஞ்ச
உறுக்கினன் சிலரை மன்னோ.

99. கரக்கழுந் ததனி னானுங்
கனவரைத் தோளி னானும்
வரக்கொடுங் கதையி னானும்
மராமரப் பணியி னானும்
உரக்கடுங் காலி னானு
மொருக்கினா னுரைப்ப தென்னோ
அரக்கரை யென்றுற் பின்னை
விடுங்கொலோ வருமன் பின்னோன்

வீமன் விற் போர்.

100. இப்படிக் கெதிர்ந்த சேனை
யாவையும் இமைக்கு முன்னம்
துப்புடன் தொலைத்து வாயு
சுதனின்ற உறுதி நோக்கி
மைப்படி வரைகள் போல்வார்
வாளெயிற் றரக்கர் பின்னும்
கைப்படை கொண்டு நூறு
யிரரொரு கணத்திற் சூழ்ந்தார்.

101. அவர்வெகுண் டழன்று மேன்மேல்
அலைகடல் போல வார்த்துப்
பவர்கொண்ட பனக மென்னச்
சூழ்வரும் பரிசு பாரக்
கவர்கொண்ட தொடைய லானும்
கதையெழிங் கிலங்கு செங்கைத்
தவர்கொண்டு நெடுநாண் அண்டம்
தகர்தரத் தழங்க வார்த்தான்.

102. அன்னநா ணோதை யெங்கும்
அண்டமும் பொதுளத் தாக்க
மன்னுநா கங்க ளெட்டும்
மதம்புலர்ந் தயங்கி வீழ்த்
துன்னும்வாய் நஞ்சு கக்கிச்
சுழன் றுண் சுமக்குங் கொற்றப்
பன்னகா திபனு முள்ளம்
பதைத்துவெம் படங்கள் சோர்ந்தான்.

### இயக்கர் சேனை ஈடழிந்தது.

103. உரம்படச் சரங்கள் மேன்மேல்
உறுக்கிவேல் வீமன் உந்தச்
சிரங்களிற் றோளின் மார்பிற்
கண்களிற் செருகச் சென்று
கரன் படைக் குழாத்து முன்னங்
காகுத்தன் கதிர்கொள் கூர்வாய்ச்
சரம்பட்டுத் தளர்ந்த தென்னத்
தளர்ந்தது தளர்வில் சேனை.

104. சக்கரம் சூலம் பாசம்
தண்டம்வேல் கப்பணம்வாள்
முற்கரங் கணையம் வீட்டே
றெழுக்கொழு முசுண்டி குந்தம்
எக்கரங் களினு மேந்தி
யாவரும் இவன்மே லேவி
அக்கணம் தன்னில் மீண்டும்
அகங்கரித் தார்த்த காலை.

105. அப்படைத் தொகைக ளெல்லா
மறுத்தறுத் தவர்கள் தத்தம்
மெய்ப்படச் சரங்கள் சிந்திச்
சிரங்கள்வெவ் வேற தாக்கி
இப்படிக் (கு) வாக்கர் சேனை
புரவையும் துணித்து மீண்டும்
செப்படிப் பவரி னின்று
சிரித்தனன் சிங்கம் போல்வான்.

### வேறு

### பொழில் காவலர் நிலை.

106. அந்த வயப்படை யவ்வா றுதல் கண்டு
கந்த மலர்ப்பொழில் காக்குங் காவ லாளர்
புந்தி மயக்குற நொந்து புகுந்த வெல்லா
முந்தி யியக்கர் பிரானுக் கோடி மொழிந்தார்.

### இயக்கர் பிரானிடம் இட்ட முறையீடு.

107. எம்பெரு மானிது கேட்டி யென்றி றைஞ்சி
வம்பவிழ் சோலை யிடத்தோர் மனிதன் வந்து
பம்பிய சேனை யிடதமேதழ் மதமும் பாயும்
உம்பலின் வாவி புகுந்து ழக்கு கின்றான்.

108. என்றவர் வாய்கை பு[illegible]தத்தி சைத்தல் கேட்டுக்
குன்றுட னென்று புயங்கு லுங்க நக்குக்
கன்றிய சிந்தை ய[illegible]ங்கி கால்செங் கண்ணன்
ஒன்றிய பங்கு வினீடு ருத்து ரைத்தான்.

### அழகேசன் ஆணை.

109. தன்றுணை நின்ற சங்கோ டணனை நோக்கி
வன்றிறல் கூடல் வேக மனிதன் தன்னைச்
சென்றவ னாவி செகுத்தல் செய்யா தின்னே
துன்றுபு யங்க டுவக்கி யெய்தச் சொன்னான்.

110. அந்த வியக்கர் பிரானு மக்க ணத்தில்
வந்து நிதிக்கிழ வன்றன் பாத மன்னித்
துந்துபி கொட்ட வளப்பில் சேனை சூழ
உந்தி யிமைப்பின் மலர்த்தண் சோலை யுற்றான்.

### இயக்கர் படைக்கடல் நடுவே வீமன்.

111. மன்னு குருகு லத்து மன்னர் மன்னன்
தன்னை யியக்கர் குலத்தி லெண்ணுந் தலைவர்
துன்னு படைக்கட லோடும் பொங்கிச் சூழ்ந்தார்
மின்னி முழக்கி இடிக்கு மேகம் போல்வார்.

112. மான வரக்கர் குலத்தை வானி லேற்றி
யூனொ டிரத்த முருக்குஞ் சோலை யூடே
தானை வளைத்திட நின்ற சாப வீரன்
யானை யினங்கள் வளைக்கும் யாளி போன்றான்.

வாயு மைந்தன் வடிச்சரம் தொட்டது.

113. விண்ணி லியக்கர் படைக்க லங்கள் வீசி
யெண்ணி லர்சூற்றும் வளைத்தெ திர்ந்த போதில்
வண்ண வரிச்சிலை கோலி வாயு மைந்தன்
துண்ணென வுட்க வடிச்ச சரங்க டொட்டான்.

114. தொட்ட சரங்க டுளைத்து மார்புந் தோளு
முட்ட விசும்பி னதெல்லை யெங்கு மூடப்
பட்ட தொழிந்து படாத சேனை யெல்லாம்
கெட்ட னபட்ட துரைக்க வுண்டோ கேட்கின்.

115. மன்னள காபதி சேனை நாதன் மார்பிற்
றன்னடை யாள முறத்தண் டாலே தாக்க
மின்னிடை நாகம் வெருக்கொண் டென்ன மீண்டான்
தன்னெதிர் வீர ரிலாத சங்கோட ணன்றான்.

சங்கோடணன் செப்பியன.

116. கருத்தொடு சென்றள கேசன் பாத கமலம்
சிரத்தினில் வைத்திவை நின்று செப்ப லுற்றான்
உருத்திரன் மானுட வுருவங் கொண்ட தன்றேல்
வரத்திவன் மானுட னல்லன் மன்ன வென்றே.

117. பண்புட னிக்கணம் வேண்டு நிதிகள் பலவும்
நண்பொட வற்கெதிர் சென்று நல்கா யென்னில்
விண்புகு மிப்புரம் வேந்த வென்றான் மெய்யிற்
புண்புக வுட்கியு ழைக்கும் வேழம் போல்வான்.

உருத்திர சேனனைச் சந்துசெய விட்டது.

118. கோதி லியக்க னியாவும் கூறக் கேட்டுத்
தாதை யுருத்திர சேனன் தன்னை நோக்கி
மாதர் மலர்ப்பொழி லூடு வந்த மனித்த
னேதி லருத்திய னென்னக் கேட்டி யென்றான்.

119. தந்தை யுரைத்தருள் வாய்மை தலைமேற் கொள்ளா
மைந்த னுமப்பொழி லூடு சென்று மன்னிச்
சிந்தி யரக்கர் சிரங்கள் குன்றஞ் செய்து
கந்த னினிற்கு மறத்தி னைக் கண்டான்.

120. கண்டு மருத்தருள் காளை தன்னை நோக்கி
வண்டு மிடைப்பயி லாத காவில் வந்து
மிண்டு மரக்கர் குலத்தை வீணே யாவி
கொண்டு படுத்தனை யார்நீ கூறு கென்றான்.

121. தின்னளா காபதி மைந்தர் சாப நீக்க
முன்மரு தாடு தவழ்ந்த வாகை மொய்ம்பற்
கின்னருள் மைத்துனன் மண்ணில் யாரும் போற்று
மன்னவன் வீமன் மருத்தின் மைந்த னென்றான்.

122. மாயவ னற்புத னதன் கண்ணன் வையந்
தாயவன் மைத்துன னாகி னைய தனிநீ
யேயவ னத்தினில் வந்த தென்கொ லென்றான்
தூயவ னுற்றன யாவும் தோன்றச் சொன்னான்.

மலர்தரு பொற்றரு நண்பின் வழங்கியது.

123. மற்றவ னவ்வுரை கூற மகிழ்வோ டந்தண்
பொற்றரு நண்பின் வழங்கிப் போகென் றருளி
வெற்றியு ருத்திர சேனன் மீண்டு வந்தாங்
குற்றது தாதை தனக்கு ரைத்தி ருந்தான்.

வேறு

124. அண்ணற் றருப்பெற்ற பின்னந் தவய மீளியக் காவினிற்
றண்ணித் திலப்பொய்கை படிவுற் றின்னமு தன்ன தண் ணீர்குடித்
தெண்ணற் றகழுதா டலது கண்டிருந் தங்கிளைப் பாறினன்
மண்ணுக் கும்விண் ணுக் குமறலிக்குமுற வானவடி வாளினன்.

தருமன் மடப்பாவையிடம் கதைக் காளையைக் கேட்டது.

125. இவ்வா றிவன்செய் கையிவன் வந்த தறியாமலெழில் கூர்வனத்
தவ்வா று பயில்கின்ற வருள்வாரி தானுற்றவது கூறுவாம்

ணைகவர் கதைக் காளையைக் கண்ணுறச் சூழல் காணுதுமுன்
செவ்வாய் மடப்பாவை நின்றுனை நீகூறெனச் செப்பினன்.

அவன் செலவு அவள் உரைத்தது.

126. வானின்று மலரொன்று தன்முன்பு மின்போல வந்துற்றதும்
தானின் றிம்மலர் போல மலர்தேடி நீயின்று தருகென்றதும்
தேனின்ற தொடையானு மழகேசனகர்மீது தனிசென்றதும்
கானின்ற குழலாளு மன்னற்குமுன் கட்டுரைத் தாளரோ.

தருமன் துயர்.

127. கருமத்தின் வடிவான மடமங்கையிவ்வாறு கழறுதமுன்
உருமுத் துவசன் மைந்தன் முன்போகவன்போடுமுளநொந்துளான்
மருமத்து வேலுறைத்த புண்மீது கனலுற்றதென மாழ்கினன்
தருமத்தி னுருவாகி யெழுபாரு நிலையிட்ட தனியாண்மையான்.

வீமன் தருங்காளை தாதையடி மன்னியது.

128. வாளிப்பரித் தேர்மனிவ்வாறு துயரெய்தி மனனஞ் செயக்
கூளிக்குழாம் வானின்மிசையுய்த்ததென்னக் கொடித்தேரின்மேற்
காளக்கருங் கொண்டல் போல் வந்து வீமன் தருங்காளைமுன்
ளுளிப் பெருங்கொற்ற வெற்றித் திருத்தாதையடி மன்னினன்.

கடோற்கசனுக்குத் தருமன் கூறுவன.

129. மின்றுரைபட வெண்ணிலா வீசு மேகங்கொலெனவந்துமுன்
நின்றனை முகநோக்கி நீதிக்கொர் வடிவா நிருபன் கூறுவான்
உன்றுணை தமியேனொடுயவாமலொருவாச மலர் கொண்டிடச்
சென்றனனெனச் சிந்தை நொந்தன்புடன் பின்னுமின்ன செப்புவான்.

130. எம்பிக் கொரிடையூறு வந்தெய்துமுன் யாமியக் கேசனூர்
வம்புற்ற மலர்வாவி சென்றெய்தி விரைவோடு வருவோமென
வெம்புற்ற பைங்கானி னிடைமின்னு மிளையோருமுடன் மேவவே
கம்பிக்கு நெஞ்சோடவன் தேரின் மிதக்கணத் தேறினன்.

அவன் தேரில் இயக்கர் பொழில் அடைந்தது.

131. கரக்கும்ப கம்பக் கடாயானை மன்னன் கருத்தோடுசென்
றரக்கன்தடந் தேரிலவனோடு நீடந்தரத் தேகினன்
பரக்கும் பெரும் புண்யமும் பாவமும் தாவில் பகிரண்டமும்
புரக்கும் பரஞ்சோதியும் பொங்குமா மாயையும் போலவே.

132. *கானெல்லை செல்லாது கதிரோனெடுந் தேரெனக் கங்கைசேர்
வானெல்லை யுறவோடி யொருநாலு கடிகைக்குள் வயமன்னுதே
ருனெல்லை யில்லாது புகமண்டி மிகமண்டு முதிரத்துடன்
தேனெல்லை யில்லா துதுக்கும் பெருஞ் சூழல் சென்றுற்றதே.

தருமன் தளர்வகன்று கூறியது.

133. ஆனைக்குழா நூறுமரியேறெனப் பொங்கி யளகேசன்வெஞ்
சேனைக் குழாநூறிய தனுடுபயில் வாயுசிறு வன்றனைத்
தனைப் பெருங் கொற்றமன்கண்டு தானுற்ற தளர்வாறினன்
எனைத் திருத்தாதையைக் கண்டு தேர் நின்றிழிந் தின்புறு.

134. மைக்காள முகிலன்ன மகனுந் தன்னடி மன்னவய வீமனும்
கைக்கானி னறைவாச மலர்கொண் டறன்காளை கழனல்கியே
முக்காலும் வலம் வந்து முறையோடு தொழுவானை முகநோக்கிநின்
றெக்காலு நாவந்த திசையாத விசையோனுமிவை கூறுவான்.

135. என்னேவ லாலன்றி யிமையோரு மெய்தாத விக்காவினீ
மின்னேவலால் வந்து விரகாக வினைசெய்தவி து மேன்மையோ
உன்னேவல் புரிவாருமுள ரும்பி மாரென்றுரைத் தானரோ
தன்னேவ லாலிந்த வுலகேழும் வலம்வந்த தனியாழியான்.

தம்பியொடும் தனயனொடும் மீண்டது.

136. என்றிந்த வுரைகூறி முனிவாறியிறை யோனுமிசலோனுடன்
சென்றந்தண் மலர்வாவி படிவுற்று வாசத்திருத் தார்புனைந்
தன்றந்தவிடம் விட்டிமைப் போதிலத் தேரின்மிசை யேறியே
மின்றந்த விடையாளு மிளையோருமுறை கானினிடை மேவினன்.

மடப் பாவை மகிழ மலர் அளித்தது.

137. மேவிப்பெருந் தெய்வமுனி பாதமலர்சென்னிமிசை வைத்துமென்
காவிக்கயற் கண்ணிணைச் சேயிதழ்ப் பாவைகளி கூரவே
வாவிச் செழுந்தாம மலர் நல்கி யொல்காதுவலி கூருநல்
லாவிக் கின்னமுதான நிருதற்கு விடையன்றளித் தானரோ.

வேறு

138. மின்புரை மருங்குல் மின்னும் வேந்தரு மந்தக் கானில்
அன்பு டை முனிவன் கூற வவன்மலர்ப் பாதம் போற்றித்
தின்பமுந் துனியு மாறி நாடொறுந் தோகை பாகன்
தன்பெருங் கதையும் கேட்டுத் தங்கின ரென்ப மாதோ.

ஸ்ரீ : வில்லி பாரதம்,

## புட்ப யாத்திரைச் சருக்கம் :

### பதவுரையும் விசேட குறிப்புக்களும்.

1. "மற்கொண்டு..............' ப-ரை : முன்னம்-முன்னாளில், மல் கொண்டு வகுத்தனைய சிகர திண்தோள் வாள் அரக்கன்-வலிமையைக் கொண்டு அமைத்தால் அன்ன உயர்ந்த திண்ணிய தோள்களையுடைய (சிவபெருமானால் அருளப்பெற்ற) வாளையுடையவனாகிய இராவணன், குலத்தொடும் மடிய-தன் (அரக்கர்) குலத்தோடும் அழியும்படி, சரம் கொண்டு வில்தொடுத்து-அம்பை எடுத்துக் கொண்டு தன் வில்லிலே தொடுத்து, புரை இல் கேள்வி விண்ணவர்தம் துயர் தீர்த்த வீர ராமன்—குற்றமில்லாத அறிவினையுடைய தேவர்களின் துன்பத்தை நீக்கியருளிய வீரனாகிய இராமபிரானுடைய, கல்கொண்ட அகலிகை தன் உருவம் கவின் கொள்ள மீளக்கொடுத்த-கல்லின் வடிவத்தைக் கொண்ட அகலிகையினது (பழைய) உருவத்தை அழகுபொருந்த மீண்டும் கொடுத்தருளிய, கமல திருப் பாதம்-தாமரை மலர்போலும் அழகிய பாதங்களை, நாளும் சொல் கொண்டு துதித்து—தினந்தோறும் (அவன் புகழ் பொருந்திய) பாடல்களாற் றுதிசெய்து, எழுந்து துள்ளி-ஆநந்தக் கூத்தாடி, தொழும் அவரே—வணங்குகின்ற அவர்களே, எழு பிறவித் துவக்கு அற்றார்-ஏழு வகைத்தாய் வரும் பிறவிகளின் பந்தத்தினின்றும் நீங்கியவராவர். (என்றவாறு).

விசேட குறிப்புக்கள் : இராவணனைக் குலத்தோடழித்துத் தேவர் துயர் தீர்த்த ஸ்ரீ இராமனது பாதங்களைத் தொழுமடியார்களின் பிறவித் தளை நீங்கும் என்பது கருத்து. திண்தோள் வலிமை இராமனுக்குக் கொண்டு கூட்டின் அவன் பகை மெலிதாய் விண்ணவர் துயர் சிறிதாய் அவன் வீரத்துக்கே இழுக்காகும். எழு பிறவி என்பதற்கு மேல் வரும் (—தோன்றும்) பிறவி என்றும், ஏழேழாக வினை தொடர்ந்து வரும் பிறவி என்றும் உரைகொள்ளலாம்.

துவக்கு பந்தம் பாசம் கட்டு என்பன ஒரு பொருள. எழுவாய்: தொழுமவர்; பயனிலை: அற்றார். தொழுமவர்-வினையாலணையும் பெயர். அற்றார் என்தில் அறு என்னும் பகுதி இரட்டித்து இறந்த காலம் காட்டிற்று; பலர்பால் வினைமுற்று.

அகலிகை சாபந்தீர்ந்த வரலாறு : முற்சல முனிவரின் மகளான இவள் பேரழகுடையவள். அதனால் பலர் மணக்க முயன்றும், நியதி தவறாத தவத்தின் மேம்பட்ட கௌதம முனிவருக்கே பத்தினியானாள். இவளை மணக்க விரும்பிய இந்திரன், அது பெறாமையால், வஞ்சம் புரிந்து இச்சை தீர்த்தலை எண்ணி, ஒரு நாள் நடுயாமத்தே கௌதமர் ஆசிரமத்தருகில் சேவலாய் நின்று கூவினன். அதனைக் கேட்டெழுந்த முனிவர் நித்திய கர்மம் முடிக்கக் கங்கைக்கரைக்கேகினர். அப்பொழுது இந்திரன் கௌதமர் வேடந்தாங்கி அகலியை பாற்சென்று அவளைத் தழுவினன். கங்கையில் மலர்கள் மலராமையின் அகாலமெனத் திரும்பிய முனிவர், சீற்றங் கொண்டு, இந்திரனுக்கு அவன் மேனிமுழுவதும் அவன் இச்சித்த யோனிகள் ஆயிரம் உண்டாகவும், அகலிகைக்குக் கல்வடிவுண்டாகவும் சாபந் தந்தார். பின் அவர் அளித்த சாப விமோசனத்தின்படி, சீதையை மணக்க விசுவாமித்திரருடன் மிதிலைக்குச் சென்ற இராமனுடைய பாதத்தூளிபட்டு அகலிகை தன் பழைய உருவடைந்து கௌதமர் ஆச்சிரமத்தை அடைந்தாள்.

2. "இப்பால் வெஞ்சிலை............' ப-ரை : இப்பால்-இங்கே, துறக்கம் மீதில் இமையோர் ஊரில்-சுவர்க்க லோகத்தில் உள்ள தேவர் பதியாகிய அமராவதி நகரிலே, இந்திரன் தன் அருகு-இந்திரனுக்குப் பக்கத்திலே, வெம் சிலை விசயன் இருப்ப-கொடிய வில்லையுடையவனான அருச்சுனன் பெருமை பெற்றிருக்க, அப்பால்-அங்கே, அழகு ஆர் மண்ணில்-அழகு நிறைந்த பூலோகத்தில், உயர் வனத்தின் இடை-உயர்ச்சி பெற்ற காட்டிலே, நல் தவம் புரிந்து-நல்ல தவத்தைச் செய்து, கூர்தழல் வேள்வி அந்தணர் தம் குழாம் சூழ-மேம்பட்ட அக்கினியாகத்தை ஓம்புகின்ற அழகிய தண்ணளியை உடைய முனிவர் கூட்டம் சூழ, ஒரு நாள் போல நாளும் தப்பாமல்-ஒரு நாட் செய்தல் போலவே எந்நாளும் தவறாமல், அறம் வளர்க்கும் நீதி வேந்தும் தம்பியரும்-தருமத்தை வளர்க்கின்ற நீதிதவறாத தருமராசனும் அவன் தம்பியர் மூவரும், ஆரும் ஒப்பு இலாத மடமயிலினோடும்-உலகில் யாரும் சமானம் இல்லாத இளமை

பொருந்திய மயிலின் சாலையுடைய திரௌபதியினோடும், புரிந்தது-செய்த செயல்களை, இனி-, சாற்றுகிற்பாம்-சொல்லுவோம். (எ-று.)

வி-கு : கொடுமை, விருப்பம் என்னும் பொருள்தரும் வெம்மை என்பது பண்புப்பெயர்; உரிச்சொல். சிலைக்குக் கொடுமை பகைவரை யழித்தலாலும், விருப்பு நச்சினரைக் காத்தலாலும், வீரங் கண்டாரால் விழையப் படுதலாலும் ஆவன. சிவனிடம் பாசுபதாஸ்திரம் பெற்று, இந்திரன் வேண்ட அவனூர் சென்று, தேவரை நாளும் வருத்திய நிவாதகவசர் காலகேயர் முதலிய அசுரர் குழுவை மாயமோ மனிதன் வில்லின் வன்மையோ எனத் தெரியா வகை பொருது தொலைத்து, அமரர் யாரும் தனித்தனி சுருதியோடும் வென்றிடுபடையுமற்றும் வேண்டுவ பலவு மீயப் பெற்று, மனமகிழ் தந்தை பின்னும் சின்னாட் டங்குக வெனப் பணித்து மாதரொடு மாளிகையீய, விசயன் அவன் அருங்கிருந்தனன், என வரும் முன் நிகழ்ச்சியனைத்துக் குயர்ச்சி தவத்தினர் பயில்வதாலும் தருக்களின் உயர்ச்சியாலும் ஆவது. கூர் : மிகுதிப் பொருள் தரும் உரிச்சொல் சாற்றுகிற்பாம்-தன்மைப் பன்மை எதிர்கால வினைமுற்று; கில் என்பது ஆற்றலிடைநிலை.

3. "விறல் விசயன்..............' ப-ரை : திறல் வேந்தன்-வலிமையை உடைய தருமராசன், விறல் விசயன் தனை பிரிந்த வருத்தம் மேன்மேல் விஞ்ச-வெற்றியையுடைய அருச்சுனனைப் பிரிந்தமையால் உண்டான துன்பம் மேலும் மேலும் அதிகரிக்க, அம்பொன் சிறகு இழந்த பறவை என-அழகிய பொன்போன்ற சிறகினை இழந்த பறவையைப்போல, ஒரு தஞ்சம் அற வெம்பி-ஒரு பற்றுக்கோடுமில்லாமல் வருந்தி, துணைவரோடும் சிந்தனை உற்று இருந்தகாலை-எனைத்தம்பிமாரோடும் சிந்தித்துக் கொண்டிருந்தபொழுது, மறை ஒரு பொன் வடிவு கொடு வந்தது என்ன மாமுனியும்-வேதங்களை ஒப்பற்ற அழகிய (மனித) வடிவினைக் கொண்டு வந்தாலன்ன தோற்றத்யுடைய மகாமுனிவரான உரோமசரும், பொறை அறிவு நிறை தருமம் வாய்மை உடைய போர்வேந்தே-பொறுமையும் அறிவும் நிறையும் அறமும் சத்தியமும் ஆகிய குணங்களை உடைய போரில்

வல்ல தருமராசனே, அஞ்சல் என புகழ்ந்து வாழ்த்தி-அஞ்சாதே என்று சொல்லி அவனைப்புகழ்ந்து துதித்து, இமைப்பின் உடன் வந்து உற்றான்-இமைப் பொழுதி னுள்ளே வந்தடைந்தான். எ-று.

வி-கு : வியாச முனிவர் ஏவலால் அரனிடம் பாசுபதாஸ்திரம் பெறத் தவமேற் சென்ற அருச்சுனனுக்கு யாது தீங்கு நேர்ந்ததோ வென்றும், தவக்கனல் வருத்திற்றோ வென்றும், காடுறை பிராணிகளால் துன்பம் உண்டாயிற்றோ வென்றும் தருமன் வெம்பினன். மறைபொரு வடிவென்றது நிறைந்த அறிவைக் குறிப்பித்தவாறு. வேந்தன் இருந்த காலை மாமுனி வாழ்த்தி வந்துற்றான் எனப் பொருள் முடிபு செய்க.

4. "வந்த பெருங்கடவுள் முனி..............' ப-ரை : வாள் வேந்தும் தம்பியரும்—வாட்போரில் வல்ல தருமராசனும் தம்பியர் மூவரும், வந்த-தம்மிடத்தே வந்த, கடவுள் பெரு முனி வரவு நோக்கி-தெய்வத்தன்மை பொருந்திய மகா முனிவரான உரோமசரின் வருகைகண்டு, மகிழ்ச்சி கூர்ந்து—சந்தோஷம் மிக்கு, சிந்தை விழி மலரோடு மீபர் உவகை பொங்க-மனத்திலும் மலர்போன்ற கண்களிலும் மிக்க மகிழ்ச்சி அதிகரிக்க, எதிர் சென்று போய் வணங்குதலும்-அவரெதிரே சென்றடைந்து வணங்கிய அளவில், வந்த-அங்கே வந்த, சிதைவு இலாத முனிவரனும்-தவத்திற் குறைதல் இல்லாதவரான உரோமசரும், அன்பால்-அவரிடத்தே கொண்ட அன்பினலே, அவர்க்குத் துன்பம் அணுகாத அந்தம் இலா ஆசி கூறி-தருமன் முதலினோர்க்குத் துன்பம் வந்தடையாத அளவில்லாத ஆசீர்வாதஞ் சொல்லி, புந்தியுடன் அளித்த-மனவிருப்போடு அவர்கள் கொடுத்த, செழும் புனித கோல புலித் தவிசின் இருந்து-வளமும் புனிதமும் அழகும் உடைய புலித் தோலாகிய ஆசனத்தில் இருந்து, அடைவே எல்லாம் புகன்றான்-ஒழுங்காக எல்லாவற்றையும் சொன்னான். எ று.

வி-கு : புகழோடு வாழ்த்தி அபயமளித்து வந்த வரவாதலின் முனிவர் வரவு அவர்க்கு மகிழ்ச்சி தந்தது;

அது மனத்தின் நிகழ்ந்து கண் வழியாகப் புலப்படக் காட்டிற்று. துன்பம் அணுகாத ஆசி என்றது பொய்த்தலின்றிச் சொன்னது பயந்தே விடும் தவத்தின் போற்றலை உணர்த்திற்று. தவத்திற் சிதைவு, விருப்பும் வெகுளியு மென்றிவற்றின் செயல்களால் உண்டாவது. 'அந்தமுனி' எனச் சுட்டுப்பெயராகவும் உரைக்க. நோக்கி, கூர்ந்து, பொங்க, போய், வணங்க, முனிவன் கூறி, இருந்து புகன்றான்.

5. "வாள் விசயன்..........—' ப—ரை : வாள் விசயன்-வாளில் வல்ல அருச்சுனன், புர விசயன் தன்னை நோக்கி-முப்புரங்களை வென்றவராகிய சிவபெருமானைக் குறித்து, மன்னு தவம் புரிந்ததுவும்—நிலைபெற்ற தவத்தைச் செய்தமையையும், அவ் வேள் விசயம் தவிர்த்த பிரான்—அந்த அருச்சுனனுடைய (பன்றியை கொன்று எய்திய) வெற்றியை (வேடன் வடிவம் தாங்கி வந்து) இல்லாமற் செய்த அச் சிவபெருமான், மகிழ்ச்சி கூர்ந்து — அருச்சுனன் செயலில் மிக மகிழ்ச்சியடைந்து, அருளால்-அவனிடத்துக் கொண்ட அருளினாலே, வேண்டும் விறல் படைகள் அளித்ததுவும் - விரும்பத்தக்க வெற்றியைத் தரும் படைக்கலங்கள் ஈந்தமையையும், விபுதர் கோமான் - தேவர்களின் தலைவனான இந்திரன், நாள் விசயம் பெற — முதல் வெற்றியை யடைவதற்காக, உம்பர் ஊரில் கொடு போய் — தேவர் உலகத்தில் அருச்சுனனை அழைத்துச் சென்று, நளிர் மகுடம் புனைந்ததுவும் — பெருமை பொருந்திய முடியை அணிந்தமையையும், நாளும் — எப்பொழுதும், தன் பொன் தோள் விசயம் தொலைத்த திறல் அவுணர் சேனை — தன் அழகிய தோள் வலியைப் போக்கும் வலிமையையுடைய (நிவாதகவசர் காலகேயர் முதலிய) அசுரர் சேனைகளை, சுடு சரத்தால் தொலைத்ததுவும் - கொடிய அம்பினால் கொன்றொழிப்பித்தமையையும், சூழ்ந்த யாவும் — பின் நிகழ்ந்த யாவற்றையும் எ—று.

வி—கு : மகிழ்ச்சி, அருச்சுனனுடைய தவத்தின் போற்றலையும் புயத்தின் பெருவலியையும் ஊத்தின் திண்மையையும் கண்டு கொண்டது. நாள் விசயம் என்பது கன்னிப்போர் வெற்றி. சரத்திற்குச் சுடுதல் சேர்ந்தாரைக்

கொல்லுதல் இச் செய்யுள் குளகம்; இதில் வரும் புரிந்தது வும் முதலிய உம்மைகள் அடுத்த செய்யுளில் வரும் அருள்க என்பதனோடு முடியும்.

1. **திரிபுர விஜய வரலாறு** : சூரன் தம்பி தாரகனுக்கு தாரகாக்கன் கமலாக்கன், வித்தியுன்மாலி என மக்கள் மூவர் உளர். அவர் அருந்தவஞ் செய்து, முறையே பொன், வெள்ளி இரும்பினாலாய மதில்களையுடைய அந்தரத்தியங்கும் நகரங்களைப் பெற்று, தாம்விரும்பும் இடங்களுக்கு அவற்றுடன் சென்று தங்குவர்; அவற்றின் கீழ் அகப்பட்ட நாடு நகரங்கள் நாசம் அடைந்தன, அதனால் வருந்திய இந்திராதி தேவர்களின் விண்ணப்பத்ததுக் கிரங்கிய சிவபெருமான் அத்தேவர்களைத் துணையாகக் கொண்டு திரிபுரத்தை அடைந்தார். அப்போது பிரமன் முதலியோர் தம்மாலேயே திரிபுர வெற்றி கிட்டுவதாகத் தனித் தனி தம்முள் தருக்கினர். சிவபெருமான் அவர் தருக்கடக்கத் தமது புன் சிரிப்பினாலே திரிபுரங்களைத் தகனஞ் செய்து, அவற்றில வசித்த மூவரையும் அவர் தவப் பயனாகக் காத்தருளினார்.

2. **அருச்சுனன் தவம்புரிந்தது** : பாண்டவர் வனவாசம் செய்த காலத்தில் தமது பகைவராகிய கௌரவரை மேல் வரும் போரில் வெல்ல வேண்டி ஆலோசித்தனர். அப்போது வியாசமுனிவர் தோன்றி, போரில் வெல்லுதற்கு வேண்டிய பாசுபதாஸ்திரத்தை நீவிர் தவம் செய்து சிவபெருமானிடம் பெறுதல் வேண்டுமெனவும், தவஞ் செய்தற்கு அருச்சுனனே தக்கவனெனவும் உபாயம் கூறினர். அவ்வண்ணம் அர்ச்சுனன், சிவபெருமானைக் குறித்துக் கடுந்தவம் புரிகையில் அருள் கொண்டு வேடுவ வடிவந் தாங்கி, தன்னை வஞ்சனையாற் கொல்ல வந்த பன்றியை அம் பெய்து வீழ்த்திய சிவபெருமானோடு வாதிட்டுப் போர புரிந்து, அவர் அநுக்கிரகத்தால் தான் வேண்டிய பாசுபதாஸ்திரமும் பிறவும் பெற்றான்.

3. **உம்பர் ஊரில் மகுடம் புனைந்தது** : அர்ச்சுனனுடைய தவ வலிமையையும் போராண்மையையும் அவன் தவநிலையிலும் கிராதார்ச்சுன யுத்தத்திலும் நேரிற் கண்ட இந்திரன் மிக மகிழ்ந்து, மைந்தனான அவனைத் தன்னூர்க்கு அழைத்துச் சென்று உபசரித்தான். பின்னும் மகிழ்ச்சி கூர்ந்து பிரமதேவன் தனக்கு நல்கிய இரத்தின கிரீடத்தை அவனுக்குச் சூட்டித் தன்னருகிருத்திக் கூட உண்டு தேவரினும் மேலோன் எனச் சிறப்புச் செய்தான். அங்கே

தேவரை வருத்திய நிவாத க்வசர் காலகேயர் என்னும் அசுரர்களை அருச்சுனன் இந்திரனேவலாற் கொன்றொழித்தான்.

6. "தன்னருகே............' ப-ரை: அமரர் எல்லாம் போற்ற-தேவர்கள் எல்லாரும் புகழ் சொல்லிப் போற்றுதல் செய்ய, அங்கு - சுவர்க்க லோகத்தில், தன் அருகு தனஞ்சயன் இருந்ததன் பின் - (இந்திரனாகிய) தன் பக்கத்தில் அருச்சுனன் சிலநாள் இருந்த பின்பு, சோதி தயங்கும் — ஒளி விளங்குகின்ற, எழில் மன்னும் காந்தர்ப்பம் என்னும் நாம வரை வழியே வருவதுவும் — அழகு நிலைபெற்ற காந்தர்ப்பம் என்னும் பெயரையுடைய மலையின் சாரல் வழியாக வருதலையும், காதல் மருவு உன்னுடைய பெரும் துயரம் தணியுமாறும், (அதனால்) அன்பு பொருந்திய உன்னுடைய பெரிய துன்பம் நீங்குதலையும், உரைத்து அருள்க என, உங்களுக்குச் சொல்லியருளுக என்று, என்னை உம்பர் கோமான் உன்பால் விடுத்தனன் - அடியேனைத் தேவர் தலைவனாகிய இந்திரன் உன்னிடம் அனுப்பினான்; வந்தேன் - அதனால் யான் வந்தேன்; எல்லா உலகம் முடிந்திடும் நாளும் ஈறு இலாதான் - எல்லா உலகங்களும் அழிந்தொடுங்கும் உகாந்த நாளினும் முடிதல் (- அழிதல்) இல்லாதவனான உரோமசமுனிவன், என்றான் - என்றிவ்வாறு தன் வரலாற்றைக் கூறினான். எ-று.

வி-கு: துயரந் தணிதல் அர்ச்சுனனுடைய வெற்றி முதலியவற்றை முனிவர் கூற அறிதலாலும், அவன் வரவு உணர்தலாலும், முனிவர் கூறும் நல்லுரையினாலும் ஆகும். ஈறிலாதான் என்றது அவன் தெய்வத் தன்மையை உணர்த்திய கூற்று.

7. "மாமுனிதன்............' ப-ரை: புரை இல் கேள்வி மன்னவனும் தம்பியரும் - குற்றம் இல்லாத கேள்வி அறிவினையுடைய தருமராசனும் அவன் தம்பியர் மூவரும், மாமுனி தன் மொழி கேட்டு - மகாமுனிவராகிய உரோமசருடைய சொல்லைக் கேட்டு, வருத்தம் ஆறி - துன்பந் தணி

யப் பெற்று, காமியம் என்று உரைபெறும் சீர் வனத்தை நீங்கி - (அது வரையும் தாம் வசித்து வந்த) காமியம் என்று சொல்லப்படும் காட்டை விட்டு நீங்கி, கடவுள் முனி தன்னேடும் கணத்தில் ஏகி - தெய்வத்தன்மை பொருந்திய உரோமச முனிவரோடும் விரைந்து சென்று, நாமம் - பெயரானது, கரதீர்த்தம் முதலா உள்ள நல் தீர்த்தம் எவற்றினும் போய் - கரதீர்த்தம் முதலாக உள்ள பலதீர்த்தங்களையும் அடைந்து, நானம் ஆடி - அவற்றில் முழுக்காடுதல் செய்து, தாமம் மதிதவழ் சிகரத்து - ஒளி பொருந்திய சந்திரன் தவழ்கின்ற உச்சியையுடைய, இந்திர நீல சயிலத்தின் - இந்திர நீலம் என்னும் பெயருடைய மலையினது, சுனை கெழு தண் சாரல் சார்ந்தார் - வாவிகள் பொருந்திய குளிர்ச்சி உடைய சாரலை அடைந்தார்கள். எ - று.

வி - கு: வருத்தம் மாறி எனக்கொண்டு நீங்கி என உரைப்பின் பின்னுண்டாதல் இல்லையாய் அதன் இயல்புக்கே மாறுமாதலின் ஆறி என்றே உரைக்க; முன்னும் 'தணியுமாறும்' (6) எனவருதல் காண்க. கணம் என்பது சிறுபொழுதின் அளவு; விரைவினை உணர்த்திற்று. நானம் - ஸ்நானம் - முழுக்கு. மன்னவனும் தம்பியரும் முனிவனொடு சாரல் சார்ந்தார். இந்திர கீலம் எனவும் வழங்கும்.

8. "அக்கிரியின் புதுமை............' ப - ரை: அ கிரியின் புதுமை எ(ல்)லாம் - அவ் விந்திர நீல மலையில் உள்ள விசேடங்கள் எல்லாவற்றையும், அடைவே நோக்கி - ஒழுங்காக (முனிவர் காட்டக்) கண்டு, அங்கு உள்ள அருவி நறும் புனலும் ஆடி - அங்கே உள்ள அருவிகளிலும் நன்மணமுடைய நீர்ச் சுனைகளிலும் ஸ்நானம் செய்து, தவமுனிவன் - தவத்தின் மிக்க உரோசமுனிவர், இது - இம்மலைச்சாரல், தக்க புகழ் விசயன் அரும் தவம் புரிந்த சாரல் என்று சாற்ற - தகுதியான புகழையுடைய அர்ச்சுனன் அரிய தவத்தைச் செய்த இடமாகும் என்று சொல்ல, மிக்க களி உவகை நிகழ் நெஞ்சர் ஆகி - மிகுதியான களிப்பும் உவகையும் உண்டாகும் மனத்தினராகி, விசயனைக் கண்டனர் போல விரும்பி கண்டு - அர்ச்சுனனைக் கண்ணிற் கண்டவர்களைப்போல விருப்பத்தோடும் பார்த்து, தொக்க முனி

கணத்தோடும் போய் - தம்மை வந்தடைந்த முனிவர் கூட்டத்தோடும் சென்று, தசாங்கன் என்னும் தொல்லை முனி தபோவனத்தின் சூழல் சார்ந்தார் - தசாங்கர் என்னும் பெயருடைய பழைய முனிவர் தவஞ் செய்யும் வனத்தின் சூழலை அடைந்தார்கள். எ - று.

வி - கு : நறும் அருவிப் புனல் என ஒன்றாக உரைப்பினும் அமையும். தொகுதல் - கூடுதல். தக்க புகழ் என்பதைப் புகழ் தக்க எனக்கொண்டு புகழுக்குத் தகுதியான என உரைக்க; உலகிற் பரந்துள்ள புகழுக்கு அமைவான செயல் ஆற்றல் உடையவன் என்றபடி.

9. "அங்குள்ள தபோதனர்..............' ப - ரை : அங்கு உள்ள தபோதனர் தம்பாதம் போற்றி - அங்கே உள்ள முனிவர்களுடைய பாதங்களை வணங்கித் துதித்து, அவர் உரைக்கும் ஆசியும் பெற்று - அவர் அருளோடு கூறிய ஆசி மொழிகளையும் பெற்று, ஏகி - அவ்விடத்தினின்று சென்று, அப்பால் - அதன்பின்பு, எங்கு(ம்) உள்ள கடவுள் நெடும் புனலும் யாறும் எப்புனலும் - எல்லா இடங்களிலும் உள்ள தெய்வத் தன்மை பொருந்திய பரந்த சுனைகளும் ஆறுகளும் ஆகிய எல்லாத் தீர்த்தங்களினும், தப்பாமல் இனிதின் ஆடி - தவறாமல் இனிதாக நீராடி (அதன்பின்), வங்கம் எறிகடல் கடைந்து - திரைகள் வீசுகின்ற பாற்கடலைக் கடைந்து, வானோர்க்கு எல்லாம் - தேவர்களுக் கெல்லாம், மருந்து விருந்து அருளிய - அமிர்தத்தை விருந்தாக அளித்த, மந்தரமும் காட்டி - மந்தரமலையையும் காட்டி, கங்கை நதி குதி பாயும் சாரல் - கங்கா நதி துள்ளிப் பாய்கின்ற சாரலையும், சிகரம் - உச்சியையும் உடைய, காந்தர்ப்பம் எனும் வரையும் காட்டினான் - காந்தாப்பம் என்னும் பெயரையுடைய மலையையும் (உரோமசன்) காட்டினான். எ - று.

வி - கு : உண்டாரைச் சாவாதே காக்கும் மருந்து போலவிருத்தலின் அமிர்தம் மருந்து எனப்பட்டது. வங்கம் — கப்பல் எனக்கொண்டு, அது தன்னிடத்தே ஓடாத கடல் என்றுரைக்க.

கடல் கடைந்தது: பாற்கடலிலே ஆமை வடிவு கொண்ட ஸ்ரீ கிருஷ்ணன் மத்தாக, அதன்மேல் மந்தரமலையைக் காம்பாக நிறுத்தி, வாசுகி என்னும் நீண்ட பாம்பைக் கயிறாகப்பூட்டி தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தார்கள்; பெரு முயற்சியின் பயனாகப் பெற்ற அமிர்தத்தைத் தேவர்கள் உண்டார்கள்.

10. "அந்த வுயர் கிரியின்............' ப-ரை: அந்த உயர் கிரியின சாரல் தோறும் அரும் தவம் செய் முனிவரரை - அந்த உயர்ந்த காந்தர்ப்பமலையின் சாரல்களிலே அரிய தவத்தைச் செய்கின்ற முனிவர்களை, அடைவே காட்டி - முறைப்படி காணச்செய்து, எமை ஆள் உடையான் குன்றம் - எம்மை அடிமை கொண்டுள்ளவனான சிவபெருமானது திருக் கைலாயமலையானது, இந்த வனம் தனக்கு ஈர் ஐம்பது யோசனை என்று எடுத்துக்காட்டி - இவ்வனத்திலிருந்து நூறு யோசனை தூரத்திலுள்ளது என்று எடுத்துச் சொல்லி, கந்தன் என எக்கலையும் வல்ல ஞான கடவுள் முனி - முருகக்கடவுளைப்போன்று எல்லாச் சாஸ்திரங்களிலும் மேம்பட்ட ஞான முதிர்வுடைய தெய்வ முனிவராகிய, விசாலயன் ஆலயமும் காட்டி - விசாலயன் என்பவரது ஆசிரமத்தையும் காட்டி, நெறி உந்து செங்கோலாய் - (குடிகளைத்) தரும நெறியிற் செலுத்துகின்ற செங்கோலையுடைய தரும ராசனே, ஓர் ஆண்டு இதனில் இருத்தி என - ஒரு வருஷ காலத்துக்கு இவ்விடத்திலே இருப்பாயாக என்று, உரோமசன் உரைத்திட்டான் - உரோமச முனிவன் சொன்னான். எ-று.

வி-கு: பிரணவத்தின் பொருள் அறியாத பிரமனைச் சிறையில் அடைத்து, சிருஷ்டி முதற் றொழில்களைப் புரிந்து தன் கலைவளங் காட்டிய முருகன்போல விசாலயனும் கருவிலே திருவாய்க்கப் பெற்றவன்; அதனால் கடவுள் முனி என்றார். உரோமசன் உரைத்திட்டான். உரைத்திட்டான்: இடு பகுதிப் பொருள் விகுதி.

11. "அம்முனிவன் மொழி............' ப-ரை: அ முனிவன் மொழிப்படி - அவ்வுரோமச முனிவரது சொற்படி, வரம்பு இல் கேள்வி அறன் மகனும் தம்பியரும் அரிவையோடும் - அளவில்லாத கல்வியறிவினையுடைய தருமனும்

தம்பியர் மூவரும் திரௌபதியுடனே, எம் முகமும் தம் முகமா - காணும் எவர் முகமும் தமர் முகமாக இருக்க, இலையும் காயும் இனிய கனியுடன் அருந்தி இருக்கும் நாளில் - இலைகளும் காய்களும் இனிய கனிகளும் ஆகிய இவற்றை உண்டு வாழும் நாளில் (ஒருநாள்), மை முகில் வாகனன் கனக முடிமேல் அம் பொன் வனச மலர் ஒன்று - கரிய முகிலை வாகனமாக உடைய இந்திரனது பொன்னு லான முடியின் மேலுள்ள அழகிய பொன்னிறமான தாமரை மலர் ஒன்று, தழல் மயில் முன் விழ — (பாஞ்சாலராசன் செய்த) யாகத்து அக்கினியினின்று தோன்றிய மயிலின் சாயலையுடைய திரௌபதியின் முன்னிலையில் விழ, செங் கண் மலர்தன்னால் நோக்கி - (அதனைச்) சிவந்த தன் கண் ணாகிய மலரால் கண்டு, செம்மலரை - சிவந்த அந்தப் பூவை, செய்ய மலர்க்கரத்து ஏந்தி - தன் சிவந்த மலர்போல் மிருதுவானகையில் எடுத்து, சிந்தித்தாள் — அதன் புதுமை யைப்பற்றிச் சிந்திக்கலானாள்: எ - று.

வி - கு : அறன் மகன் — அறக்கடவுள் தந்த மகன்— தருமன். முகம் என்பதற்கு இடம் எனப்பொருள் கூறின், ஆண்டுப் பிறரிலராய், முன் அச்சாரற்பயில் முனிவரைக் காட்டிய பயனும் இல்லையாய் முடியும். அக்கினியினின்று தோன்றினும் அவள் மிருதுத் தன்மையுடையள் என் பதை வலியுறுக்க மயில் என்றும் மலர்க்கண் என்றும், மலர்க்கரம் என்றும் கூறினார்.

தழல் மகள் : பாஞ்சால நாட்டரசனான துருபதன், முன் தன்னால் இகழப்பட்ட துரோணாசாரியரது ஆணையின்படி தன்னைப் போரில் வென்று சிறைகொண்டு, அவர் முன் விட்டுப் பணிந்த அருச்சு னனை மணத்தற்குத் தக்காளான பெண்ணொருத்தியைப் பெறுவேனென்று முயன்று புரிந்த யாகத்தில் அக்கினியினின்றும் திரௌபதி தோன்றினாள்.

12. “இந்த மலருல..............” ப - ரை : இந்த மலர் - இந்தப் பூவானது, உலகு அனைத்தும் ஈன்ற கோல எழில் மலரோ - உலகம் முழுவதையும் ஈன்றெடுத்த வராக மூர்த்தி யாகிய திருமாலின் உந்தியந் தாமரை மலரோ, இரவி திருக் கரத்தில் வைகும் அந்த மலரோ - சூரியனுடைய அழகிய கையில் இருக்கும் அழகிய தாமரை மலரோ, அமுதில்

பிறந்த பாவை அமர்ந்து உறையும் அணி மலரோ - பாற் கடலிலே அமுதத்தோடு கூடப் பிறந்த பாவை போன்ற வளாகிய இலக்குமி விரும்பி வசிக்கும் அழகிய மலரோ, அவனி தன்னில் - பூமியில், இதன் மணம் - இம்மலரின் வாசனையானது, எந்த மலரும் கருக - பிற மலர்களெல்லாம் கருகும்படி, எங்கு எங்கும் - எல்லா இடங்களிலும், கமழா நின்றது - பரந்து மணக்கின்றது, என்று போற்றி - என்று எண்ணி அதனைப் பத்திரப்படுத்தி, கனலோன் நல்கும் கனம்குழை - யாகத்தில் விளங்கிய அக்கினி பகவான் கொடுத்தருளிய கனத்த காதணியையுடையளாகிய திரௌபதி, உவகையுடன் சென்று - மனக்களிப்புடன் போய், கந்தவகன மைந்தனுக்குக் காட்டி சொல்வாள் - வாயு தேவனுடைய புத்திரனை வீமனுக்கு அம்மலரைக் காட்டி இவ்வாறு சொல்லுவாள். எ — று.

வி - கு : கோலம் - பன்றி. உலகனைத்தும் உள்ள அழகெல்லாம் கூட்டிப் பெற்ற அழகிய மலரோ என உரைப்பினும் அமையும். அமுதில் என்பது உடனிகழ்ச்சிப் பொருளில் வந்தது. எனைமலர் கருகுதல், இதன் மணத்துக்கும் செம்மை நிறத்துக்கும் ஆற்றாமையாலாம். கனங்குழை: அன்மொழித்தொகை.

உவமைத்தொகை என்பது இரண்டு முதலிய பல சொற்கள் தொக்க தொகையாற்றலினால் பிறிது பொருள் தோன்ற நிற்பது. கனம் குழை என்பவற்றின் பொருளின்றிப் பெண் என்னும் பொருடோன்ற நின்றமை காண்க.

13. "இம்மலருக் கொரு..............." - ப. ரை : அவனி தன்னில் - பூவுலகத்திலே, இம் மலருக்கு ஒரு மலரும் எதிர் இல்லை - இந்தப் பூவுக்கு வேறொரு பூவும் சமானம் இல்லை; என்று - எனக் கூறி, இதழ் ஆயிரத்தின் மிக்க அம் மலரை - இதழ்கள் ஆயிரத்தினாலே சிறந்த அத் தெய்வ மலரை, கைமலரில் கொடுத்து - (வீமனது) கையாகிய மலரிலே கொடுத்து, ஈது ஒக்கும் அணி மலர் நீ எனக்கு அருளவேண்டும் - இம்மலரை ஒத்த அழகிய மலரை நீ எனக்குத் தந்தருளவேண்டும், என்ன - என்று (அவள்) வேண்ட, செம்மலையில் திகழ் சிகர திண் தோள் வீமன் -

செவ்விய மலையில் விளங்கும் உச்சி போல் உயர்ந்து வலித்த புயங்களையுடைய வீயன், தெய்வ முனி புங்கவன் தன் திரு தாள் போற்றி - தெய்வத்தன்மையுடைய முனி சிரேட்டரான உரோமசருடைய அழகிய பாதங்களை வணங்கி, திரு முன்பு - அவருடைய திரு முன்னிலையில், மெய் மலரை வைத்து நின்று வினவினன் - உண்மைத் தன்மையுடைய அத்தெய்வமலரை வைத்துப்பணிந்து நின்று அம் மலர் பற்றிக் கேட்டான்; அவனும் எதிர் விளம்புவான் - அம் முனிவரும் மறுமொழி சொல்லுவார்.

வி - கு : ஆயிரமிதழின் என்றும், மலர்க்கையின் என் றும் மாறிக் கூட்டிப் பொருள் காண்க. மிக்க என்பதில் மிகுதி எண் மிகுதியையின்றிப் பண்பு மிகுதியை உணர்த் தியது. புங்கம் - உயர்ச்சி; மெய்ம்மலர் : வாடாமலர். கைம் மலர் என்பது உருவகம்.

14. "என்பலவு மியா............" ப - ரை : இந்தப் பூவின் இயல்பினையும் பெருமையையும் - இம்மலரின் தன்மையையும் பெருமையையும் பற்றி, யாம் பலவும் உரைப்பது என் - நாம் பலவாறு சொல்லுதலால் என்ன பயன்?; இயக்கர் தங்கள் மன் பதியில் உளது - இது இயக்கருடைய நிலை பெற்ற நகரமான அழகாபுரியில் உள்ளது; அன்றி — அல் லாமல், வரம்பு இலாத வான் உலகில் உளது என்னில் மற்று உண்டோ - எல்லையில்லாத இடப்பரப்பினையுடைய தேவருலகில் உள்ளது என்று சொன்னால் அங்கேயும் உண்டாமோ; இது கோடற்கு உன் பிறருக்கு எளிதோ- இதனைப் பெற்றுக் கொள்ளுதல் உன்னை ஒழிந்த பிறருக்கு இலகுவாமோ; உம்பர் பதி புகுந்து மாயன் ஒரு பைந் தோகைக்கு ஈந்த பின்பு — தேவர் வாழும் அமராவதி நகரத் திற் போய்ப் பெற்றுவந்து (முன்னொருகால்) ஸ்ரீ கிருஷ் ணன் ஒரு பசிய மயிலின் சாயலையுடையாளுக்கு அளித்த பின்னர், இதனைக் கண்டு அறிவார் இல்லை - இம்மலரை (அங்கே) கண்டவரும் அறிந்தவரும் இல்லை, என்று யாவ ரொடும் பேச்சு இலாதான் பேசினன் — என்றிவ்வாறு யாவ ரொடும் உவமை பேச அரியனாகிய உரோமசன் சொன்னன். எ — று.

Rajaramani

வி - கு : தேவர் பதியில் இம் மலரின்மைக்குக் காரணம் கிருஷ்ணன் சத்தியபாமையின் வேண்டுதலால் அங்கிருந்து கவர்ந்து வந்தமையாகும். மற்று: வினைமாற்றுப் பொருளில் வந்த இடைச்சொல். உரைப்பது : வினைமுற்றுத் தொழிற் பெயர்.

15, "இயக்கர் பதி..............' ப - ரை : இயக்கர் பதி தன்னில் உளது என்று இசைத்த மாற்றம் — (அம்மலரானது) இயக்கர் வாழும் அழகாபுரியில் உள்ளது என (உரோமச முனிவர்) கூறிய சொல்லை, கரடம் உறு தறுகண் சய சயிலம் அன்ன சதாகதி மைந்தன் இன்புறக் கேட்டு — மதம் பொருந்திய அஞ்சாமையுடைய வெற்றி கொள்ளும் மலையாகிய யானையை ஒத்த வாயு புத்திரனான வீமன் மனமகிழ்ச்சியடையும் வண்ணம் கேட்டு, ஒருகாலும் ஈறு இலாத வயம் கொடு வெம் சராசனமும் - எப்போதும் முடிதல் இல்லாத வெற்றியைத் தந்து (நண்ணார்க்கு) கொடுமையும் (நண்ணினர்க்கு) விருப்பமும் விளைவிக்கும் வில்லும், வல்போர் வாகை மற தண்டும் — வலிய போரில் வெற்றிதரும் வீரமுடைய தண்டாயுதமும், கரத்து ஏந்தி-கையின் கண்ணே தாங்கிக் கொண்டு, மடந்தை நெஞ்சில் துயக்கம் அற - திரௌபதியின் மனத்தில் உள்ள சோர்வு நீங்க, இக் கணத்தில் - இப்பொழுதே, தெய்வ போக சுரபி மலர் அளித்திடுவன் என்று சொல்லி - தேவர்களின் நுகர்ச்சிக்குரிய மணம் பொருந்திய பாரிசாத மலரைத் தந்திடுவேன் என்று சொல்லி, இமைப்பில் தனி சென்றான்— இமைப்பொழுதினுள்ளே (அவ்விடத்தினின்றும்) தான் ஒருவனே யாகச் சென்றான்.

வி — கு : ஈறிலா வயம் - கடைபோகா வெற்றி; வயம்-வலியுமாம், மடந்தை துயக்கம் - மலர் அருமையின் பெறுதலும் உண்டுகொல் என்னுமையத்தால் நிகழ்ந்தது, நெஞ்சில் மடந்தை எனமாற்றி தன் மனத்தினிடங் கொண்டபெண் என்றும் உரைக்க, அரிது பெற விரைந்து தனி முயலுதலால். சயிலம் - மலை. 'இன்புறக் கேட்டு' =கேட்டு இன்புற்று எனமாறுக, காரண காரியம் பற்றி. மாற்றம் கேட்டு மைந்தன் தாங்கி சொல்லிச் சென்றான்.

16. "கைக்காற்றும்............' ப - ரை : எண் இல் கோடி இன வளைகள் - எண்ணில்லாத ( - பல ) கோடி கூட்டமான சங்குகள், செய்க்கு ஆற்றும் செழும் தரள நிலவு வீச - வயல்களிலே ஈனுகின்ற வளமுள்ள முத்துக்களின் (வெண்) நிலவு வீசுதலால், சேதாம்பல் பகல் மலரும் செல்வ நாடன் - செம்மை நிறமான அல்லிப் பூக்கள் ( இரவிலன்றிப் ) பகலிலும் மலரும் நீர் நில வளமுடைய குருநாட்டரசனான வீமன், உடன்று எக் காற்றும் எழுந்த உக அந்த காலம் என - தம்முள் மாறுபட்டு ( - மோதி ) எல்லாக் காற்றுக்களும் எழுந்து வீசும் யுக முடிவு நாள் என்னும்படி, கை காற்றும் தொடை காற்றும் மூச்சு காற்றும் - தான் (செல்லும் விரைவில் ) கை அசைதலால் உண்டாகின்ற காற்றும் காலசைவினால் உண்டாம் காற்றும் மூச்சு விடும் காற்றும், கனக மணிவரை போல கவின் சோதி கொள் மெய் காற்றும் - பொன்னாலும் இரத்தினத்தினாலும் இயன்ற மலைபோல அழகும் ஒளியும் கொண்ட உடம்பு அசைதலால் உண்டாம் காற்றும் ( ஆகிய இவை ), எழுந்து பரந்து - தோன்றி எங்கும் பரவி, வனத்தில் உள்ள வெற்பும் நெடும் தரு அனைத்தும் ஒடிந்து வீழ - அக்காட்டிலே உள்ள மலைச்சிகரங்களும் உயர்ந்த மரங்களும் முறிந்து விழ, சென்றான் - (அழகாபுரி நோக்கிச்) சென்றான். எ - று

வி - கு : கனக மணிவரை - இல் பொருளுவமை. உக + அந்தம் = உகாந்தம் : தீர்க்க சந்தி. செய்க்கு : வேற்றுமை மயக்கம்; இடப்பொருளில் வந்தது. செம்மை + ஆம்பல் = சேதாம்பல் : பண்புப் பெயர்ச் சந்தி.

(1) இல் பொருள் உவமை = ஒரு பொருளுக்கு உவமானம் கூறும் போது உலகில் இல்லாத பொருளை உவமானமாகக் கூறும் ஓர் அணியாகும். (2) வடமொழி உயிர் எழுத்துச் சந்தி மூன்றுவகை : தீர்க்க சந்தி :- நெட்டெழுத்து (= ஆ, ஈ, ஊ) த்தோன்றும் சந்தி; குணசந்தி : குணவெழுத்து (= ஏ, ஓ) த்தோன்றும் சந்தி : சந்திரோதயம். விருத்தி சந்தி : விருத்தி எழுத்து (= ஐ, ஔ) த்தோன்றும் சந்தி : சர்வலோகைகன். (3) வேற்றுமை மயக்கம் : ஒரு வேற்றுமைப் பொருள் நிற்றற்குரியஇடத்தில் வேறோர் வேற்றுமை உருபு வந்து நிற்றல்; அது உருபு மயக்கம் பொருள் மயக்கம் என இருவகை.

17. "இலங்கை நகர்............' ப - ரை : விறல் இராம தூதன் - வலிமை பொருந்திய ஸ்ரீ ராம தூதவனாகிய அநுமான், இலங்கை நகர் தன்னில் - இலங்காபுரியிலே, இகல் அரக்கன் சோலை எலாம் இறுத்தவா போல் - (தன்னொடு) மாறுபட்ட அரக்கனான இராவணனது சோலைகளை முறித்தழித்தமை போல, நிலம் குலுங்க வரை குலுங்க - நிலமும் மலையும் பேரசைவு கொள்ளவும் (அதனால்), வனத்தில் உள்ள நெடும் தருக்கள் யாவையும் வேருடன் நேர் ஆக்கி - காட்டிலே உள்ள உயர் மரங்கள் எல்லாம் வேருடன் அழிவடைய, விலங்கினொடு புள் இனமும் அடைய தாக்கி - மிருகங்களும் பறவைக் கூட்டங்களும் சோரத் தாக்குண்டு, மெய் நடுங்கி தடுமாறி உள்ளம் வெம்பி கலங்கி விழ - உடல் நடுங்கி நடை தடுமாறி மனம் வெதும்பிக் கலங்கி விழவும், அதிர்வ கனப்போல ஆர்த்து - முழங்குவன வாகிய மேகம்போல ஆரவாரஞ் செய்து, காஞ்சன பேர் எழில் வனமும் கடந்திட்டான் - காஞ்சனம் என்னும் பெயருடைய அழகிய வனத்தையும் கடந்து சென்றான். எ - று.

வி - கு : வீமன் விரைந்து செல்லுதலாகிய தன் தொழிலைச் செய்ய, அத்தொழிலால் நிலமசைதல் முதலியன நிகழ்கின்றன; அதனை அவன் தொழிலாகச் சொல்லப்பட்டது. இது தொழிற்குறை விசேடம் என்னும் அணியாகும்; அது : காரணமாகிய தொழில்குறைந்து காரியமாகிய தொழில் விசேடித்திருத்தல். ஆக என்னும் 'செய வென் எச்சம் ஆக்கி எனத்திரிந்து நின்றது. யாவையும் என்பதில் ஐ சாரியை.

இராமதூதன் அரக்கன் சோலை இறுத்தது : இராவணன் பஞ்சவடியிற் சீதையை வஞ்சத்தாற் கவர்ந்து சென்று அசோகவனத்தில் சிறை வைத்தான். சீதையைக் காணாத ஸ்ரீ ராமன் சுக்கிரீவனைச் சார்ந்து வானர வீரரைக் கொண்டு அவளைத் தேடினான். அவருள் அநுமான் கடல் கடந்து இலங்கையில் வந்து சீதையைக்கண்டு மணிவிரலாழி கொடுத்துச் சூளாமணி பெற்றான். பின் இராவணன சந்நிதியை அடைய விரும்பியவனாய் அவன் சோலைகளை அழித்துக் காவலாளரைக் கொன்று நின்று, தந்தையின் ஏவலால் வந்த இந்திரசித்தனுடைய பாசத்திற் பிணிப்புண்டு இராவணன் முன்னிலையடைந்து தூது பேசினான்.

18. "அவ் வனத்தை யிகந்............' ப - ரை : அ வனத்தை இகந்து அநந்த காதம் ஏகி - அக் காஞ்சன வனத்தைக்

கடந்து பல காத தூரம் சென்று, அங்கு இடை விட்டு, அதனை நீங்கி, அப்பால் - பின், உத்தரத்தின் ஏகி - வடக்கு நோக்கிச் சென்று, மெய் வனப்பும் அடல் வலியும் மிகுந்த - உடலின் அழகும் போர் வன்மையும் மிகுந்துள்ள, வாகை வீமன் எனும் பேர் - வெற்றியையுடைய வீமன் என்னும் பெயரை, திசையின் விளக்கும் வீரன் - எல்லாத் திசைக ளிலும் (தன் செயலால்) விளங்கச் செய்யும் வீரனை வன், வனப்பினுடன் மை படியும் - அழகுடனே மேகம் படி கின்ற, கை சினை வாச மலர் பொழிலின் ஒரு மருங்கு - பக்கமெல்லாம் பரந்த கொம்பர்களையும் மணம் பொருந்திய மலர்களையுமுடைய சோலையின் ஒரு பக்கத்தில், கை வனப் பும் தழை செவியும் மருப்பும் சேர - கையின் அழகும் பரந்த காதுகளின் அழகும் கொம்பின் அழகும் ஒன்று சேருதலால், மத்த மாவின் கவின் அளிக்கும் - மதம் பொருந்திய யானையின் அழகைத் தருகின்ற, குலைக் கத லிக் காடு கண்டான் - குலைகள் நிரம்பிய கதலி (-வாழை)க் காட்டைத் தன் முன்னே கண்டான். எ - று.

வி - கு ; பேர் - புகழ்; கை - பக்கம். சினைக்கை எனக் கொண்டு கிளைகளாகிய கைகள் எனலும் ஒன்று. கதலி யின் தண்டு கையையும், இலை செவியையும், குலை கொம் பையும் போலக் கவின் தந்து யானைக்கு உவமேயமாயிற்று. வீரன் ஏகி (மருங்கு) கதலிக்காடு கண்டான்.

19. "அக்கதலி வனம்............' ப - ரை : (வீமசேனன்) அ கதலி வனம் தனக்கு காவல் ஆகும் அடல் அரக்கர் அநே கருடன் அடு போர் செய்து - அந்தக் கதலிவனத்துக்குக் காவலராயிருந்த வலிய அரக்கர் பலருடன் கொல்லுகின்ற போரைச் செய்து, தலம் மிக்க குருதியினால் வெள்ளம் ஆக்கி - பூமியை அதிகமான இரத்தத்தினால் வெள்ளமாகச் செய்து, வெகுண்டவர் ஆவியையும் - தன்மேற் கோபங் கொண்டு எதிர்ந்தவருடைய உயிரையும், விண்ணில் ஏற்றி - வீரசுவர்க்கத்துக்கனுப்பி (- கொன்று), திக்கு அதலம் முத லாம் எவ் உலகும் ஏங்க : பூதலமும் அதலமும் முதலா கிய எல்லா உலகில் உள்ள உயிர்களும் ஏக்கமடைய, சிங்க நாதம் செய்தான் - சிங்கத்தின் தொனிபோல ஒலி செய்

தான், செய்த காலை - (சிங்கநாதம்) செய்தபொழுது, உரக ராசர்க்கு தலை மணி உக்க என்றால் - பாம்புகளின் தலைவர்களான ஆதிசேடன் முதலினோர்க்கு (நடுக்கத்தினால்) உச்சியில் உள்ள இரத்தினம் கீழே வீழ்ந்தன எனின், உம்பர் படும் துயரம் எம்மால் உரைக்கல் ஆமோ - தேவர்கள்படும் துன்பத்தை நம்மாற் சொல்லுதல் முடியுமோ? எ - று.

வி - கு: மிக்கதலம் என்பதற்கு நிலத்தின் பெரும் பகுதி எனினுமாம். . சிங்கநாதம் - வெற்றியினால் உண்டான கர்ச்சனை. போர் செய்து வெள்ளமாக்கி விண்ணிலேற்றி உலகேங்கக் கர்ச்சித்தான். உக்க: அஃறிணைப் பலவின் பால் வினைமுற்று. ஈற்று ஓகாரம் எதிர்மறை. காவலாய என்றும் பாடம். உரகராசற்கு எனப்பாடங் கொண்டு ஆதிசேடனுக்கு என்று உரைப்பினுமாம்.

20. "வரை கலங்க..............' இதனால் உலகு உயிர் அனைத்தும் வீமசேனன் வீர ஒலி கேட்டுக் கலங்கியமை கூறப்படுகிறது: ப - ரை: வரை கலங்க - மலைகள் நிலைகுலையவும், வனம் கலங்க - காட்டிலே உள்ளனவெல்லாம் நிலை மாறவும், கலங்குறாத மண் கலங்க - (இனத்திற்) கலங்குதல் இல்லாத மண்ணே நிலைபெயரவும், விண் கலங்க - சுவர்க்கலோகம் கலக்கம் அடையவும், மகரம் திரை முந்நீர் கலங்க - சுறாமீன் வாழும் திரைகளையுடைய சமுத்திரம் கலங்கவும், திசை கலங்க - திசைகளில் உள்ளன கலங்கவும், ஈறு இலாத செகம் கலங்க - (மீட்டும் தோன்றுதலின்) முடிவு இல்லாதஉலகம் கலங்கவும், உகம் கலங்க - பூமி நடுங்கவும், சிந்தை தூயோர் உரை கலங்க - மனம் பரிசுத்தரான மேலோரின் சொற்கள் கலங்கவும், உளம் கலங்க -(அவர்)மனம் கலக்கமடையவும், மெய்யில் ஊன் துளங்கி கலங்க - உடம்பிலுள்ள தசைகள் நடுங்கிக் கலங்கவும், விலங்கொடு புள் இனங்கள் யாவும் - மிருகங்களும் பறவைக் கூட்டங்களும் ஆகிய எல்லாம், நிரை கலங்க - தம்முள்ளே கூட்டத்தின் நிலை மாறவும், (ஆக இவ்வாறு), நிலை கலங்காதன நிகழ்த்தின் - தம் நிலையிற் கலங்காதவற்றைச் சொல்லின், உலகின் உயிர் படைத்த தம்மில் உண்டோ - உலகத்தில் உயிருடையவற்றுள் (ஒன்றேனும்) உண்டோ? இல்லை எ - று.

வி · கு : ஓ : எதிர்மறை; அம்மா : ஆச்சரியம். இடப் பெயர்கள் அவற்றில் உள்ள பொருள்களை உணர்த்தின. இடது நிகழ் பொருளின் தொழில் இடத்தின் மேல் ஏற்றிச் சொல்லப்பட்டது. பொருளுக்கேற்பக் கலங்குதற் றொழி லும் தம்முள் வேறுபாடுடையன.

21. "அந்த ஓதையப்............" ப · ரை : அப் பொழில் இடை தவம் புரிந்து அருளும் · அந்தக் கதலிவனத்திலே தவஞ் செய்கின்ற, மந்தர அசலம் அனைய தோள் மாருதி · மந்தர மலையை ஒத்த தோள்களையுடைய அநுமான், அந்த ஓதை கேட்டு · (வீமன் கர்ச்சித்த) அவ்வொலியைக் கேட்டு, விந்தம் அன்ன திண் புய அசல வீமனுக்கு முந்த எதிர் போய் · விந்தமலையை ஒத்த வலிய தோளாகிய மலையையு டைய வீமனுக்கு முன்பே எதிர் சென்று, அவன் வரும் நெறி அதனிடை · அவன் வரும் வழியிலே, முன்னி · (மேற்செயலைச்) சிந்தித்து. எ · று.

வி · கு : அருளும் என்பது ஆசார வழக்கு. விந்த மன்ன புயம் என்றது தம்முன்னாகிய அநுமன் முன் பணி தல் குறிக்க வந்தது. இது முதல் மூன்று செய்யுளும் ஒரு தொடர்.

22. "வெற்பிரண்டினில்............" ப · ரை : முன் வேலை கடந்ததாள் · (சீதையைத்தேடி இலங்கை சென்ற) முன்னாளில் கடலைக் கடந்த இருபாதங்களையும், வெற்பு இரண்டினில் நீட்டி · மலைகள் இரண்டைப் போல நீட்டி, பொன்புய அச லம் இரண்டையும் இரு வரை போக்கி · அழகிய புயங் களாகிய மலைகள் இரண்டையும் இரண்டு மலைகளைப்போல் உயரப் போக்கி, அற்ப வாழ்வு · உடை அரக்கன் மா நகர் அழல் ஊட்டும் சிற்ப வாலதி · சிலநாள் வாழ்தலையுடைய இராவணனுடைய பெரிய இலங்காபுரியை அக்கினிக்கு உணவாக்கிய சிறியவால், திசை எலாம் சென்று நின்று ஓங்க · எல்லாத்திசையிலும் பரந்து நின்று விளங்க, எ · று.

வி · கு : அநுமன் சிரஞ்சீவியாதலின் அவன் முன் இரா வணன் வாழ்நாள் அற்பமாயிற்று. சிற்பவால் என்றதும்

அத்தெய்வத் தன்மையை விளக்க. வாலதி - வால். சிற்பம் - சிறப்பு - தொழிற்றிறம் என்றுமாம். இதற்கு, கால்களை இரு மலைகளிடையே செலுத்தியும் புயங்களை இருமலைகளிடையே செலுத்தியும் நின்றான் எனவும், புயங்களை இரு பக்கத்தி லும் நிமிர்த்தி எனவும் உரைப்பர்.

23. "எம்பிரான் தனக்............' ப - ரை : எம் பிரான் தனக்கு ஒழிய - எமது தலைவனான ஸ்ரீ இராமனுக் கன்றி, வேறு யாவர்க்கும் தெரியா - மற்றை ஒருவருக்கும் புலப் படாத, செம்பொன் மா மணி குண்டலம் இரு புறம் திகழ - செம்பொன்னாலியன்ற பெரிய ரத்தினம் பதித்த குண்டலங்கள் இரு பக்கத்திலும் விளங்க, விம்ப மால் வரை மீது - ஒளி பொருந்திய பெரிய மலையின்மேலே, மேருவே ஒக்கும் அம் பொன் மால்வரை ஒன்று இருந்தென - மேரு மலையை ஒத்திருக்கும் அழகிய பொன்னாலான பெரியமலை ஒன்று இருந்ததென்று சொல்லும்படி, அநுமன் இருந்த னன் - அநுமான் மாயாவடிவங் கொண்டிருந்தான். எ - று

வி - கு : இல் பொருளுவமை. அநுமன் (23) போய் முன்னி (21) நீட்டி போக்கி ஓங்க (22) திகழ இருந்தனன் எனப் பொருண் முடிபு காண்க.

24. "குகைத் தடங்கிரி............' ப - ரை : குகை தடம் கிரி அனைய தோள் கொட்டி - குகைகளையுடைய விசாலித்த மலை போலும் புயங்களிலே தட்டி, ஆர்த்து உரப்பி - ஆரவாரஞ் செய்து உறுக்கி, நகைத்து - சிரித்து, நாகமும் நடுங்கிட - மலைகளும் நடுக்கமடையும்படி, நடந்தனன் - வீமன் நடந்து சென்றான். (இவ்வாறு), மிகைத்த வாள் அரிபோல் நடந்து வரும் வீமன் - வீறு கொண்ட ஒளியுடைய சிங்கம்போல (ப் பீடுநடை) நடந்து வருகின்ற வீமசேனன், முன் - தனக்கு முன்னே, மறமையும் திறமையும் உடையான் கண்டு - வீரமும் செயல் வகையில் ஆற்றலும் உடையவ னாகிய அநுமனது மாய வடிவைக் கண்டு, திகைத்து நின் றனன் - (செய்வதறியாது) திகைப்படைந்து நின்றான். எ - று.

வி - கு : திகைப்பு, வெற்றிக்களிப்பொடு வருபவன் தன் முன்னே மாய வடிவொன்றைத் திடீரெனக் காணலால்

வந்தது. முதலீரடிகளும் வீமன் வெற்றிக் களிப்பைக் கூறும். கொட்டி ஆர்த்து, உடைப்பி நகைத்து நடந்துவரும் வீமன் (உடையானைக்) கண்டு திகைத்து நின்றனன். 'நாகமும் நாகமும் நடுங்கிட நடந்து என்றும் பாடம். நாகம் - (அட்டதிக்கு) யானை.

25. "அண்டர் தானவர்..............' ப - ரை : சண்ட வாயுவின் தனயனை - வேகம் பொருந்திய வாயு புத்திரனுன வீமசேனனை, அவன் தமையன் - அவ்வீமனது தமையனுன அநுமன், அண்டர் தானவர் அரக்கரும் அணுகுரு வனத்தில் - தேவரும் அசுரரும் இராட்சசரும் அடைய முடியாத இவ் வனத்தில், எண் திசா முகம் - எட்டுத்திசையிலும் உள்ள உயிர்கள், எங்கணும் இரிந்திட ஆர்த்து - எல்லா இடங்களிலும் சிதறுண்டோடும்படி ஆரவாரித்து, மண்டி - நெருங்கி, மேல் வரும் - எதிரே வருகின்ற, மானுடன் - மனிதனே, ஆர் அடா என்ருன் - (நீ) யாவன் அடா என்று கேட்டான் - எ - று,

வி - கு : மற்று : அசைநிலை இடைச்சொல். திசா முகம் ஆகுபெயர். மானுடன் : அண்மை விளி. யார் என்பதன் திரிபு ஆர்.

ஆகுபெயராவது : ஒரு பொருளின் இயற்பெயர் அதனேடு சம்பந்தமுடைய பிறிதொரு பொருளுக்குத் தொன்றுதொட்டு வழங்கி வருவது. அது பதினறு வகை. திசாமுகம் என்னும் இடத்தின் பெயர் அங்குவாழும் பிராணிகளை உணர்த்தியமையின் இடவாகுபெயர்

26. " தம்முனுகிய வானர..............' ப - ரை : தெவ் முன் ஆயினும் - பகைவர் முன்னிலையிலேனும், செவ்வி மெல் போக மா மகளிர் தம் முன் ஆயினும் - இளமை நலமும் மென்மையும் உடைய நுகர்ச்சிக்குரிய சிறந்த பெண்கள் முன்னிலையிலேனும், நா தவரு அடல் வீமன் - சொன்ன சொற்றவருத வலிமையுடைய வீமன், தம்முன் ஆகிய வானரம் சாற்றிய உரை கேட்டு - தமையனுகிய குரங்கு ( - அநுமான்) சொன்ன சொல்லைக் கேட்டு, எம் முன் ஆகி வந்து இருந்த நீ யார் கொல் - எமக்கு முன்னே மாயவடிவு கொண்டு வந்திருந்த நீ யாவனே? என்று இசைத்தான் - என்று கேட்டான். எ - று.

வி - கு : கொல் : இடைச்சொல். நா என்றது நாவா லுரைக்கப்படுஞ் சொல்லை. சொற்றவறும் நிலைக்களமிரண் டினுந் தவறுனெனவே யாண்டும் நாத் தவறாமை பெறலால், அடல் என்பது சொன்னபடி செயல் முடிக்கும் ஆற்றலை உணர்த்திற்று.

27. "துன்னும் வெஞ்சிலை............' ப - ரை : உன்னை நீ அறியா - உன்னியல்பையே நீ அறியாத, நெறி உணர்வு இலா மனிதா - (வினாவிற்கு விடைகூறும்) ஒழுங்கு முறை அறி தல் இல்லாத மனிதனே; இங்கு ஆர் அடா என்பது எவன் - இங்கே யாரடா என்று கேட்பது என்ன (கேள்வி), நீ புகல்வது - நீ இவ்வாறு சொல்லுவது, துன்னும் வெம் சிலை வலி ஒ - உன்னிடத்துப் பொருந்திய கொடிய வில்லின் வலிமையாலேலோ ?, இணை தோள் வலியோ - இருபுயங்களின் வலிமையாலேலோ ?, என்னை - (மற்று) எதனால் ?, வல்லை யேல் - நீ வல்லமை யுடையனாயின், மன்னும் வால் தனைக் கடந்து போ என்றான் - பொருந்திய இவ் வாலைக் கடந்து செல்வாயாக என்று அநுமான் சொன்னான். எ - று.

வி - கு : வினாவிற்கு விடையாக வினா வருமிடமுண்டே னும் ஈண்டுப் பொருந்தாமையானும், மறுத்து வினாதல் ஆணவ மிகுதியை உணர்த்துதலானும் நெறியுணராதவன் என்றும் தன்னை அறியாதவன் என்றும் வீமன் கருதப் பட்டான்.

28. "உரங்கொள் வீமன்..............' ப - ரை : அ மாருதி உரைத்த சொல் - அந்த அநுமன் சொன்ன சொல்லை, உரம் கொள் வீமன் கேளா - வலிமை பொருந்திய வீமன் கேட்டு, வரம் கொள் வார் சிலை இராகவன் மா பெரும் தூதன் - சிறப்புப் பொருந்திய நீண்ட வில்லைத் தாங்கிய ஸ்ரீ இராமபிரானது தூதனும், தரங்க வாரிதி தாவும் என் தம்முன் வால் அன்றி - அலைகள் பொருந்திய சமுத்திரத் தைக் கடந்த எனது தமையனுமாகிய அநுமனது வாலை அல்லாமல், குரங்கின் வால் இது கடப்பது இங்கு அரி யதோ - குரங்கின் வாலாகிய இதனைக் கடத்தல் இங்கே அரிய செயலோ, கூறாய் - சொல்வாயாக. எ - று.

வி - கு : கடப்பது : வினைமுற்றுத் தொழிற்பெயர். வரங்கொள் வார்சிலை - ஸ்ரீ இராமன் கையில் இருத்தலுக்கு அவனிடம் வரம் கொண்ட சிலை என்றுமாம். தூதனாகிய தம்முன் என்க.

29. என்று தன் திருத் துணைவன்............' ப - ரை : என்று நின்று தன் திரு துணைவன் இசைத்தது கேட்டு - இவ்வாறு நின்று தன் அழகிய தம்பியாகிய வீமன் சொன்னதைக் கேட்டு, நன்று! நன்று! —, நீ நவின்றது நன்று என நகையா - நீ சொன்னது மிக நன்று என்று சொல்லிச் சிரித்து, வார் சிலை துன்று மனிதனைச் சுமந்து - நீண்ட வில் ஏந்திய மனிதனான இராமனைச் சுமந்து, தோள் வருந்தும் புன் தொழில் சிறு குரங்கையோ - தோள் வருந்துகின்ற எளிய தொழிலையுடைய சிறுமையான குரங்கினையோ, என்னொடும் புகல்வாய் : என்னோடு மேம்படுத்திப் பேசுகின்றாய் (என்று அநுமான் சொன்னான்) எ - று.

வி - கு : என்றான் என்பது எஞ்சி நின்றது. வீமசேனனுடைய உள்ள நிலையை அநுமான் தெரிந்து கொள்ளும் வழி இது.

30. "குரக்கு நாயகனவ்வுரை............' ப - ரை : அவ்வுரை - அவ்வார்த்தைகளை, குரங்கு நாயகன் கூறலும் கேட்டு - குரங்குகளின் தலைவனான அநுமான் சொல்லக் கேட்டு, தரைக்கு நாயகன் - பூமிக்குத் தலைவனான வீமன், தடம் புயம் குலுங்கிட நகையா - விசாலமான புயங்கள் அசையும்படி சிரித்து, அரக்கர் நாயகன் ஊர் அழல் ஊட்டி - அரக்கருக்குத் தலைவனான (- அரசன்) இராவணனுடைய இலங்காபுரியை அக்கினிக்கு உண்ணக்கொடுத்து, (சீதாராமர் துயர் தீர்த்து அவரைக் கொண்டு), இவ் அகிலம் புரக்கும் நாயகன் தனையோ - இவ்வுலகத்தைப் பாதுகாக்கின்ற தலைவனையோ, நீ இழித்து புகல்வாய் - நீ (இவ்வாறு) குறைவுண்டாகச் சொல்லுகின்றாய் (என்று) ; எ - று.

வி - கு : என்று என்பது சொல்லெச்சம். நகையா: செய்யா வாய்பாட்டு இறந்தகால வினையெச்சம்.

31. "பின்னும் வார்சிலை.............' ப - ரை : பின்னும் - அதன்மேலும், மாருதி - வீமசேனனானவன், வார்சிலை இராகவன் பெருமையும் - நீண்ட வில்லையுடைய ஸ்ரீ ராமபிரானுடைய பெருமையையும், அநுமான் மன்னு இணை தோள் வலிமையும் சாற்ற - அநுமானுடைய நிலைபெற்ற இருபுய வலிமையையும் விதந்து கூற, அன்ன போழ்தினில் - அப்பொழுது, அகம் மகிழ்ந்து அருளுடன் நோக்கி - அநுமான் மனம் மகிழ்ந்து வீமனைக் கருணையுடன் பார்த்து, இங்கு வந்தது என்ன காரியம் - (நீ) இங்கே வருதல் என்ன அலுவலின் பொருட்டு? நீயார் - நீ யாவன்? என்றான் - என்று கேட்டான்.

வி - கு : மாருதி - மருத்தின் புத்திரன், வீமன். மருத்து-காற்று. மகிழ்வும் அருளும் வீமன் கூறிய இராம நுமந்தர் பெருமையைக் கேட்டு உண்டாயின. வந்தது: முற்றுத் தொழிற் பெயர்.

32. "தர்ம மாருதியுரைத்த............' ப - ரை : தாம மாருதி உரைத்த சொல் - ஒழுங்கினையுடைய அநுமான் கூறிய சொல்லை, விறலோன் தம்பியும் கேட்டு - வலிமை பொருந்திய தம்பியாகிய வீமன் கேட்டு, யான் - நான், நேமி மாநிலம் புரக்கும் நல் நீதி வேல் தருமநாயகற்கு இளையவன் - கடல் சூழ்ந்த பெரிய பூமியைக் காக்கின்ற நல் நீதியையுடைய வேலேந்திய தருமராசனுக்குத் தம்பியாவேன்; நரனுக்கு மூத்தோன் - அருச்சுனனுக்கு அண்ணன் ஆவேன். வீமன் - என் பெயர் வீமன்; வாயுவின் புதல்வன் - வாயு தேவனின் புத்திரன் ஆவேன்; என்றான் - என்று சொன்னான். எ - று.

வி - கு : தாமம் - ஒழுங்கு. நேமி - வட்டமுமாம்.

33. "அன்ன வாசக மவனு.............' ப - ரை : அவன் அன்ன வாசகம் உரைத்தலும் - வீமன் அவ் வார்த்தைகளைச் சொல்லுதலும், இகல் அநுமான் - வலிமையையுடைய வீமன், கன்ன பாகமும் சிந்தையும் முந்துறக் களித்து - (கேட்ட) காதும் மனமும் மிகச் சந்தோஷம் அடைந்து, மின்னும் வார் சிலை இராகவன் மெய் பெரும் சீர்த்தி

சொன்னவாறு நன்று - ஒளிருகின்ற நீண்ட வில்லையுடைய ஸ்ரீ ராமபிரானது உண்மைப் பெரும் புகழை நீ சொல்லியவகை நன்றாயிருந்தது; உனக்கு இது சொற்றவர் ஆர் என்றான் - உனக்கு இவ்விராம கதையைச் சொல்லியவர் யாவர் என்று கேட்டான். எ - று.

வி - கு : களிப்பு, ஸ்ரீ ராமன் சீர்த்தியை நன்கு கேட்டதாலும், அதனைச் சொன்னவன் தம்பியாக இருந்ததாலும் ஏற்பட்டது. கேட்டலாலும் உளத்திற் கொள்ளலாலும் அவ்விரிடத்தும் அக்களிப்பு நிகழ்ந்தது.

34. "வரத்தினு லருமறை............' ப - ரை : உரத்தினல் ஒரு வீரரும் ஒப்பு இலா உரவோன் - வலிமையினாலே ஒரு வீரரும் உவமை இல்லாத சிறந்தவனாகிய வீமன், திரத்தினல் உயர் இராகவன் சிலை வலி - மன ஊக்கத்தில் மேம்பட்ட ஸ்ரீ இராமனது வில்லின் வன்மையை, வரத்தினல் அரும மறையினல் - தனக்குக் கிடைத்த கொடையினாலும் அரிய தநுர்வேத விற்பன்னத்தாலும், வார் சிலை பயிற்றும் பரத்துவாசன் - நீண்ட வில்வித்தையை (நமக்குப்) பயிற்றுகின்ற துரோணாசாரியர், முன் பகர்தர - முன் நாளிற் சொல்ல, பலகாற் கேட்டனன் என்றான் - பலமுறை கேட்டேன் என்று சொன்னான். எ - று.

வி - கு : பாரத்துவாசன் என்னும் தத்திதாந்த நாமம் முதல் குறுகி நின்றது, பரத்துவாசன் மகன் என்பது கருத்து. திரம் - உரம் - ஊக்கம் ; ஞானமுமாம். தான் பிராமணனாயினும் அரசவித்தையிற் றேர்ச்சி மிக்கோனாய்ப் பயிற்றும் வன்மை பெற்றமை வரத்தினல் என்க.

35. "குந்தி கான் முளை............' ப - ரை : குந்தி கான் முளை கூறிய வாசகம் கேட்டு - குந்தி புத்திரனாகிய வீமன் சொன்ன சொற்களைக் கேட்டு, புந்தியால் உயர் அஞ்சனை புதல்வனும் புகல்வான் - புத்தியிற் சிறந்த அஞ்சனாதேவியின் புத்திரனான அநுமனும் (இவ்வாறு) கூறுவான்:முன் - முன் நாளில், சீகரம் சிந்து சிந்து கடந்து - திரை வீசுகின்ற கடலைக் கடந்து (இலங்கை புக்கு), உந்து வாள் வலி நிரு

தர் ஊர் - போரில்மேற் செல்லவிடும் வாளில் வல்ல அரக்கருராகிய இலங்காபுரியை, செந்தீயால் ஒருங்கு சுட்டவனும் - (அவர் வாலிற் கொழுவிய) சிவந்த அக்கினியினால் முற்றுஞ் சுட்டவனும், எ - று.

வி - கு : அடுத்த செய்யுளில் முடியும். தாயர் வேறுவராதலைக் காட்ட 'குந்தி கான்முளை' என்றும், 'அஞ்சனை புதல்வன்' என்றும் கூறினர். சீகரம் - நீர்த்திவலையுமாம்.

36. "அந்த வார்சிலை இராம............' ப - ரை : வார் சிலை அந்த இராமனுக்கு அடிமையாய் - நீண்ட வில்லையுடைய அந்த இராமபிரானுக்கு அடியவனாய், அவன் திரு பதம் சிந்தையால் என்றும் சிந்தை செய்பவனும் - அவ் விராமபிரானது அழகிய பாதங்களை மனசினால் எப்போதும் தியானிப்பவனும், உந்தை ஆகிய வாயுவுக்கு உற்பவித்தவனும் - உன் தந்தையாகிய வாயுதேவனுக்கு (அஞ்சனாதேவி) வயிற்றிற் பிறந்தவனும், வாழ்வு உடை இந்த அநுமனே - நித்திய வாழ்வையுடையவனான இவ் வநுமான் ஆகிய நானே, என்றனன் இகலோன் - என்று வலிமையோனாகிய அநுமன் சொன்னான். எ - று.

வி - கு : உன் தந்தை = உந்தை : மரூஉ. அநுமன் அழியாவரம் பெற்றவனாதலின், வாழ்வு நித்தியத்துவம் குறித்தது.

37. "என்ற வாசகமிரு............' ப - ரை : என்ற வாசகம் இரு செவிக்கு அமுது எனக்கேட்டு - இவ்வாறு அநுமன் சொன்ன சொற்களை (வீமன்) இரு செவிகளுக்கும் அமிர்தமாம்படி கேட்டு, நெஞ்சினில் துன்று உவகையன் - மனத்திற் பொருந்திய மகிழ்ச்சி உடையனாய், துள்ளி - ஆநந்தக் கூத்தாடி, துதித்தனன் - அவன்புகழ் பாடினன்; (பின்), என்றும் யாம் முயல் தவப் பயன் இருந்தவா என்னா - எப்பொழுதும் யாம் செய்த தவத்தின் பயன் இருந்தவாறென்னே என விதந்து கூறி, திரை கடல் கடந்த சேவடி மேல் சென்று இறைஞ்சினன் - அலைசேர் கடலைக் கடந்த (அநுமனது) சிவந்த பாதத்திற் சென்று வணங்கினான். எ - று.

வி - கு : உவகையன் : குறிப்பு வினைமுற்று, எச்சப் பொருளில் வந்தது. வீமன் துதித்தனன் எனவும் இறைஞ்ஞன் எனவும் முடிக்க ; அன்றி, துதித்தனன் எச்சமுற்ருகவுமாம்.

38. "தம்பியைத் துணைத் தாழ்..........' ப - ரை : தம்பியை துணை தாழ் தட கைகளால் எடுத்து - (அநுமான்) தம்பியான வீமனைத் தனது இரண்டு நீண்டு விசாலித்த கைகளாலும் தூக்கி எடுத்து, வம்பு சேர் மணி மால்வரை மார்பு உற அணைத்து - புதுமை பொருந்திய இரத்தினங்களையுடைய பெரிய மலைபோலும் மார்பிலே பொருந்தத் தழுவி, எம்பி - தம்பியே, செந்தழல் பம்பு கான் இடை - சிவந்த அக்கினி பரந்த காட்டிலே, மலர்ப் பதம் சிவப்ப நீ தனி நடந்த ஆறு என் - மலர்போலும் பாதங்கள் சிவப்படைய நீ தனியாக வந்த வரலாருயாது ?, என்று இசைத்தான் - என்று கேட்டான்.

வி - கு : தாழ் என்றது முழந்தாள் வரை நீண்ட எ - று. வம்பு - வாசனையுமாம். கானிடை நடந்தவாறு என்றும் தனி நடந்தவாறு என்றும தனித்தனி இயைக்க. எடுத்து அணைத்து இசைத்தான் என முடிபு காண்க.

39. "தாயத்தாரும் வெவ்..............' ப - ரை : சீயத்தால் அரசு இழந்திடும் சிம்புள் ஏறு அனையான் - சிங்கத்தினுலே தன் அரசுரிமையை இழக்கும் ஆண் சரபப் பட்சியை ஒத்தவனுன வீமன், (அநுமனை நோக்கி), தாயத்தாரும் வெம் வஞ்சனைச் சகுனியும் கூடி - சுயோதனன் முதலிய சுற்றத்தாரும் கொடிய சகுனியும் சேர்ந்து, மாயத்தால் ஒரு கவறு கொண்டு - வஞ்சனையினுலே ஒரு சூதாடுதலை மேற்கொண்டு, எங்கள் மண் கொண்டு - (அதனுல்) எங்கள் ( உரிமைப் ) பூமியைக் கவர்ந்து கொண்டு, நேயத்தால் நெடும் கானகம் நேர்ந்தனர் என்ருன் - (பின்பும்) அன்புடையார்போல நீண்ட காட்டில் (சில நாட் கழிக்குமாறு) நியமித்தார்கள் என்று சொன்னுன். எ - று.

வி - கு : சீயமும் சரபமும் இரு சாரார் வலிக்கும் பொருந்தக் காண்க. நேயத்தால் என்பதை முன் நேயத்

தாற் கவறு கொண்டு மாயத்தால் மண் கொண்டனர் எனக் கூட்டியும் கூறலாம். மறுபடி ஆடிய சூதில் தருமன் வெற்றியடைந்தானாயினும் கௌரவர் முன் நியதியையே மேற்கொண்டு அவர் பால் அன்பு கொண்டு கூறுவார் போலப் பன்னீராண்டு வன வாச நேர்ந்தனர் என்பது வரலாறு.

40. "திகந்த மெட்டினும்............' ப - ரை : யாம் உறை வனத்தினில் - நாம் வசித்த (காந்தர்ப்பம் என்னும்) காட்டிலே, (ஒருநாள்), திகந்தம் எட்டினும் தன் மணம் ஒல்லெனச் செல்ல - திசைகள் எட்டிலும் தன் நறு மண மானது விரைந்து பரவும் வண்ணம், சுகந்த புட்பம் ஒன்று தோன்ற - நல்ல மணமுள்ள பூ ஒன்று தோன்ற, (- தேவருலகினின்றும் வீழ்ந்து கிடக்க), தகைந்த அப்புது மலர் தனை - விரிந்துள்ள அப்புதுமையான பூவை, தழல் மகள் காண - (பாஞ்சாலன் செய்த) யாக அக்கினியின்று தோன்றியவளான திரௌபதி கண்டு, வகைந்த இது துணைமலர் எனக்கு அருளுதி என்றான் - சிறந்த வகையில் வந்த இதனை ஒத்த மலரை எனக்குத் தந்தருளிதிர் என்று என்னைக் கேட்டாள். எ - று.

வி - கு : திக் + அந்தம் = திகந்தம். ஒல் : குறிப்புணர்த்தும் இடைச்சொல். சுகந்தம் என்பதில் சு உபசர்க்கம். தகைதல் - தடுத்தல் ; அதனால், அவளுடைய கண்களையும் மனத்தையும் அப்பாற் செல்லாவகை தடுத்தமலர் என்றும் உரைகொள்க. வகை வந்த என்பது மருவி வகைந்த என வந்தது. அகைந்த எனக் கொண்டு எழுந்த - தோன்றிய - எனஉரைப்பினுமாம்.

41- "ஆதலாலிவண்............' ப - ரை : ஆதலால் -, யானும் இன்று இவண் அணுகினன் என்று - அடியேனும் இப்பொழுது இங்கே அடைந்தேன் என்று சொல்லி, நெடுந்தகை - பெருந்தன்மையனான வீமன், நீதியால் உயர் தம்முனை போற்ற - நீதிநெறியாற் பெரிய தமையனான அநுமனைத் துதிக்க, கோது இலாத அ குரிசிலும் - குற்றமற்றவனாகிய அவ் வாண்மையிற் சிறந்த அநுமனும், குமரனை நோக்கி - இளையோனாகிய வீமனைப் பார்த்து, தீது இலாய் - குற்றம்

அற்றவனே, இது கேட்க - இதனைக் கேட்பாயாக, என செப்புவன் - என்று சொல்லுவான். எ - று.

வி - கு : மாது, ஓ என்பன அசைநிலை இடைச் சொற்கள். இலன் என்பது இல் என்னும் எதிர்மறைய யடிப் பிறந்த பெயர். விளியுருபேற்றது. அணுகினன் - தன்மை ஒருமை வினைமுற்று.

42. "அரு நிதிக்கிழவன்............" ப - ரை : அரு நிதி கிழ வன் தனது அளகை மா நகரில் - அரிய செல்வங்கட்கெல் லாம் உரியோனாகிய குபேரனது அளகாபுரியில் (உள்ள), மரு மிகுத்த மஞ்சன நீள் வாவியின் கரையின் - வாசனை மிகுந்துள்ள நீராடும் நீர் நிறைந்த வாவியின் அயலில், மலர் தரு பெரும் சோலையில் - மலர்கள் நிறைந்த மரங்க ளையுடைய பெரிய சோலையிலே அம் மலர் தங்கும் - அந் தப் பூ இருக்கிறது; சென்று உரிமை உற்று அது கோடல் - அவ்விடஞ் சென்று (பெற்றுக் கொள்ளும்) உரிமையோடு அதனைக் கொள்ளுதல், உம்பர்க்கும் அரிது - தேவர்களுக் கும் அரியதாகும். எ - று.

வி - கு : மற்று, ஆல் அசை. சோலையில் உள்ளவா வியின் கரையில் மலர் தங்கும் எனக் கூறலும் ஒன்று.

43. "ஈற்றிலா விகலரக்கர்............" ப - ரை : இகல் அரக்க ரோடு இயக்கர் தம் காவல் ஈறு இல் - வலிய அரக்கரும் இயக்கரும் ஆகிய அவர்களது காவலுக்கு அங்கே முடிவு இல்லை; (அன்றி), கூறும் வாசகம் பொய்ப்பவர் - சொன்ன சொல்விற் றவறுவோர், கூர் தவம் முயலும் பேறு இலா தவர் - மிக்க தவத்தைச் செய்யும் பெரும்பயன் இல்லாத வர், பேர் அருள் இலாதவர் - மிக்க அருள் இல்லாதவர், பிறிதும் ஆறு இலாதவர் தமக்கும் - ஒழிந்த பிற நன்னெறி களில்லாதவர் ஆகிய இவர்களுக்கும், அங்கு அணுகுதல் அரிது - அங்கே சென்றடைதல் அரிதாகும். எ - று.

வி - கு : ஆல் - அசை. ஆ என்பது வேண்டாவழிச் சாரியை வந்தது; பலவின்பால் முற்றாகவும் உரைக்கலாம். எழுவாய் 1. ஈறு 2. அணுகுதல். பயனிலை : 1. இல்;

2. அரிது. இல் : எதிர்மறைக் குறிப்புவினைமுற்று; அரிது: குறிப்புவினைமுற்று. ஈறிலா என்பதை இகலுக்கடையாக்கி காவலையுடைய அங்கே அணுகுதல் அரிது என ஒன்றாக உரைத்தும் கொள்க.

44. "அறிவும் வாய்மையும்............" ப - ரை : அறிவும் - மெய்யறிவும் வாய்மையும் - சத்தியமும், தூய்மையும் - மனப் பரிசுத்தமும், அன்பும் - , இன் அருளும் - உயிர்கட்கினிய அருளும், பொறையும் - பொறுமையும், ஞானமும் - தானாக உணரும் அறிவும், கல்வியும் - நூலறிவும், புரி பெரும் தவமும் - செய்யப்படும் பெரிய தவமும், நெறியும் - தரும நெறி ஒழுகலும், மானமும் - நிலையினிழிந்துழித்தாங்காமை யும், வீரமும் - ஆண்மையும் (ஆகிய இச் சீரிய குணங்கள் எல்லாம்), நின்ன - உன்னுடையன; ஆதலினால் - , உனக்கு பெற அரிதாயது எது - உன்னால் பெற்றுக் கொள்ள முடி யாதது யாது உளது?, என்றனன் பெரியோன் - என்று சிறந்தவனாகிய அநுமான் கூறினான். எ - று,

வி - கு : மிக உடையனாதல் பற்றிக் குணங்களை அவ னுக்கு உரிமையாக்கிக் கூறினார். அறிவு ஞானம் கல்வி என்பன தம்முள் வேறுபாடுடையன.

45. "முன்னவன் புகலுறுதி............" ப - ரை : முன்னவன் புகல் உறுதி கூர் மொழி எலாம் - முன் பிறந்தவனாகிய அநுமன் கூறிய நன்மை மிக்க வார்த்தைகளை எல்லாம், பின்னவன் கேட்டு - தம்பியாகிய வீமன் கேட்டு, தொழுது பின்னும் இவை இவை பேசினன் - வணங்கி மேலும் பின் வருவன வற்றைச் சொன்னான்; (அடியேனுக்குத் துணை யாக), மன்னர் மன்னவன் அறம் உண்டு - இராசராசனாகிய தருமனது தருமம் உள்ளது; மறம் உண்டு - (அடியேன் பால்) வீரம் உள்ளது; வழக்கே உன்னில் - முறையாற் சிந் திப்பின், உன் அருள் உண்டு - உமது கருணையும் உள்ளது; திண் தோள் உரம் உண்டு - அடியேனது திண்ணிய தோளின் வலியும் உண்டு; எ - று.

வி - கு: ஆல்-அசை. மன்னர் மன்னவன் என்றது உரிமை பற்றி வந்தது.

46. "தேவர் காக்கினும்..............' ப - ரை : காவின்மேல் பயில் கடி மலர் - (அழகேசனது) சோலையில் இருக்கும் நறுமண மலரை, தேவர் காக்கினும் - தேவர்கள் காவல் செய்தாலும், தயித்தியர் - அசுரர், காக்கினும் - , சிறந்த மூவர் - இவரனைவரினும் மேம்பட்ட திரி மூர்த்திகள், காக்கினும் - , முறை முறை மொழிந்த மூ உலகில் யாவர் - ஒழுங்காகச் சொல்லப் பெற்ற மூன்று உலகங்களிலும் உள்ள மற்றை எவர்கள், காக்கினும் - , இயக்கர் ஊர் இக் கணத்து எய்தி - அளகாபுரியை இப்பொழுதே சென்றடைந்து, கவருவேன் என்றான் - (அதனைக்) கவர்ந்து கொண்டு வருவேன் என்று சொன்னான். எ - று.

வி - கு : தயித்தியர் : மொழி முதற் கண் வந்த போலி. மூவர் - பிரமா விஷ்ணு உருத்திரன். கடி - வாசனை; உரிச்சொல். காவலுமாம்.

போலி என்பது ஒரு சொல்லின் முதலிலாயினும் இடையிலாயினும் கடையிலாயினும் ஓரெழுத்து நிற்கவேண்டிய இடத்தில் மற்றோர் எழுத்து வந்து பொருள் வேறுபாடின்றி ஒத்து நிற்பது. ஐயர் அய்யர்; அரசன் அரைசன்; மரம் மரன் எனவரும். இனி, அ+ய்=அ+இ=அ+இ+ய்=ஐ என வருதலும் போலி.

47. "ஆண்டவன் புகல்..............' ப - ரை : நீண்ட தோள் வய மாருதி - உயர்ந்த புயங்களால் வெற்றி படைத்த அநுமான், ஆண்டு - அங்கே, அவன் புகல் உறுதியும் ஆண்மையும் கேட்டு - அவ் வீமன் சொல்லிய கட்டுரையினையும் வீரத்தையும் கேட்டு, நெடிது உவந்து அருளி - மிக மகிழ்ச்சி அடைந்து, பாண்டவன் தனை பரிவினால் பண்பு உற நோக்கி - பாண்டு புத்திரனாகிய வீமனை அன்போடு கேண்மை பொருந்தப் பார்த்து, ஈண்டை - இப்பொழுது, நீ வேண்டும் நல் வரம் வேண்டுக என்றான் - நீ விரும்புகின்ற நல் வரத்தினை வேண்டுவாயாக என்று சொன்னான். எ - று.

வி - கு : ஆண்டு, ஈண்டு என்பன காலம் இடம் என்பவற்றை உணர்த்தும் இடைச் சொற்கள். ஈண்டை : ஐ சாரியை.

48. "நெடிய கானக............' ப - ரை : யாம் - நாம், நெடிய கானகம் நீங்கி - (கடவ நாட்கழித்த பின்) நீண்ட காட்டினின்றும் நீங்கிச் சென்று, நெறி இல் நேரலரை - நன்னெறியில்லாதவரான பகைவரை (- துரியோதனனாதியரை), கடிய வெம் செரு புரி பெரும் குருதி வெம் களத்தில் - மிகக் கொடிய போரினைச் செய்யும் மிகுதியான இரத்தம் சோரும் கொடிய போர்க்களத்தில், அடிகள் 'எழுந்தருளி வந்து - தேவரீர் பிரசன்னமாய் வந்து, அருச்சுனன் தடம் தேர் கொடியின் மீது நின்று - அருச்சுனனுடைய விசாலித்த தேரிற் கட்டிய கொடியில் நின்று, உவந்து கூத்து ஆடுதிர் என்றான் - மகிழ்ந்து ஆநந்தக் கூத்து ஆடுவீராக என்று (வீமன்) வேண்டினான். எ - று.

வி - கு : தாங்கொணாமை பற்றி வெம்மை மறித்தும் கூறப்பட்டது. பெரியோரை அடிகள் என்றல் மரபு.

49. "நீட்டு மவ்வரம்............' ப - ரை : அநுமான் - , நீட்டும் அ வரம் அவனுக்கு நேர்ந்தனன் - (தான் விரும்பிக்) கொடுக்கும் அந்த வரத்தை அவ்வீமனுக்கு ஈந்தான்; வீமன் - , மீட்டும் நல் வரம் ஒன்று முன் வேண்டினன் - மீளவும் நல்ல வரமொன்றை முதலில் வேண்டினான்; ஈட்டும் மா நிதி இலங்கை தீ இட்ட நாள் - குவிக்கப் பெற்ற பெருஞ் செல்வத்தையுடைய இலங்கா புரியிலே (தேவரீர்) தீக் கொழுவிய நாளில், இசைந்த மோடு உரு தனை காட்டுக என்று - (அத்தொழிலுக்கு) வாய்த்த பெரிய வடிவத்தினைக் (- விசுவரூபம்) காட்டுவீராக என்று வேண்டி, முதல்வன் இறைஞ்சினன் - முன்னவனான அநுமனை வணங்கினான். எ - று.

வி - கு : நேர்தல் - இசைதல்; ஈட்டு மாநிதி : திக் விஜயம் செய்து, ஆற்றாராய் நட்டாரிடத்தும் பகை கொண்டு புறம் தந்தார் கண்ணும் கொண்ட நிதி. இசைந்த உரு என்பது செயலுக்குப் பொருத்தமாகத் தானே வந்தடையும் உரு. காட்டுக என்னும் வியங்கோள் முற்றின் இறுதி 'அ' தொகுத்தல் என்னும் செய்யுள் விகாரம். மோடு + உரு = மோட்டுரு : அவ்வழியில் டகரம் இரட்டித்தது.

செய்யுள் விகாரம் : செய்யுளில் தொடை முதலியன பற்றிச் சொற்களின் உருவம் விகாரப்பட்டு வரும். அது ஆறு வகை : 1. மெல்லொற்றை வல்லொற்றாக்கல் - வலித்தல் ; (குறுந்தாள் : குறுத்தாள்). 2. மெலித்தல்; (தட்டை : தண்டை). 3. குற்றெழுத்தை நெட்டெழுத்தாக்கல் - நீட்டல்; (அ இடை : ஆயிடை). 4. குறுக்கல்; 5. விரித்தல்; (வினையுமே : வினையும்மே). 6. தொகுத்தல்.

50. என்றடல் வீமன்............' ப - ரை : என்று அடல் வீமன் இசைத்திடும் முன்னம் - என்றிவ்வாறு வலிய வீமன் சொன்ன உடனே, நித்தமும் உள்ளான் - அழிவில்லாதவனான அநுமான், மன்று - (மாபலிச் சக்கர வர்த்தியின்) ராச சபையிலே, இ ஏழு உலகங்களும் ஒன்றி ஒன்று உள தாள் புனை வாமனனைப் போல் -இந்த ஏழுலகங்களும் சேர்ந்து ஒன்றாய் அடங்க அளந்த பாதத்தை உடைய வாமனனான ஸ்ரீ கிருஷ்ணனைப் போல, நின்று நிமிர்ந்தனன் - நிலைபெற்று உயர்ந்தான். எ - று.

வி - கு : முன்னம் - முன்: இடத்தையும் காலத்தையும் உணர்த்தும் இடைச்சொல்; அம் - சாரியை. ஒன்றாக என்பது தொக்கு நின்றது. நின்று நிமிர்ந்தனன் என்பதை விகுதி பிரித்துக் கூட்டி நிமிர்ந்து நின்றனன் என்று கொண்டும் பொருள் கூறுப. தார் என்றும் பாடம். மன்று உள தார் - வாசனை பொருந்திய மாலை.

வாமனன் : குறள் வடிவினை உடையவன். மூவுலக சக்கரவர்த்தியாய்த் தேவர்க்கிடுக்கண் புரிந்த மாபலி என்னும் அசுரனை, தேவர் வேண்டுகோளால் அழிக்கக் கருதிய விஷ்ணு மூர்த்தி வாமன வடிவு கொண்டு சென்று மாபலியிடம் மூன்றடி நிலம் இரந்து பெற்று, விசுவரூபம் கொண்டு மண்ணையும் விண்ணையும் ஈரடியினளந்து, மற்றோரடியை அவன் தலையில் வைத்து அவனைப் பாதாளத்திற் புகச் செய்தனர். இது திருமாலின் வாமனாவதாரக் கதை.

51. "படியின தெல்லை............' ப - ரை : பதத்தினது எல்லை படியினது எல்லை - (விசுவரூபங் கொண்ட அநுமானுடைய) பாதத்தின் அளவு பூமியின் அளவாகும் ; மடியினது எல்லை அ வானினது எல்லை - வயிற்றின் அளவு அந்த ஆகாயப் பரப்பின் அளவாகும்; அடியினது எல்லை - (இவ்வாறு) உடலின் கீழ்ப்புறத்து அளவு, அளப்பு அரிது

என்றால்-அளத்தல் அரிதாயின், முடியினது எல்லே மொழிந் திடல் ஆமோ-(உடலின்) மேற்புற அளவைச் சொல் லுதல் நம்மால் ஆகுமா?

வி-கு: மடி, பாதமேல் மடிந்துள்ள கணுக்கால் எனக்கொண்டு உரைத்தலும் உண்டு. அரிது இன்மை குறித் தது. ஓ எதிர்மறை.

52. "அந்தர மெங்கும்..............' ப-ரை: அந்தரம் எங் கும் அடக்கிய மெய்யில்-ஆகாயம் முழுவதையும் அடக்கிய (அநுமனுடைய) உடம்பிலே, சுந்தர வாலதி சுற்றிய தோற்றம்-அழகிய வால் சுற்றிக் கிடந்த காட்சியானது, முன நாள்-(பாற்கடல் கடைந்த)முன் காலத்தில், மந்தர வெற்பை-(மத்தாக நாட்டிய) மந்தரமலையை, நீள் உடல் முந்திய வாசுகி வளேத்தது மானும்-நீண்ட உடலேயுடைய பழமை யான வாசுகி என்னும் பாம்பானது சுற்றிக்கிடந்ததை ஒக்கும். எ-று.

வி-கு: மானும்: உவம உருபிடைச் சொல்லடியாகப் பிறந்த செய்யுமென் முற்று. மந்தரத்தை முன் 9 ஆம் செய்யுளிற் காண்க.

53. "நீளகல் வான மருங்கே..............' ப-ரை: மருங்கு நீள் அகல் வானம் நெருங்க-(தன் இரு) பக்கங்களிலும் உயர்ந்து அகன்ற ஆகாயமானது சூழவும்,-தோள் புறம் வாலதி சூழ்தர-தோளின் புறமாக வாலானது சூழவும், நிற்போன்-விசுவரூபம் கொண்டு நிற்பவனுகிய அநுமன், நாள் ஒடு தாரகை ஞாயிறு முதலாம் கோள்-அச்சுவினி முதலாய இருபத்தேழு நக்ஷத்திரங்களும் பிற நக்ஷத்திரங் களும் சூரியனே முதலாகவுடைய கிரகங்களும், அணி சூழ் வரும் குன்றமும் ஒத்தான்-வரிசையாகச் சுற்றி வருகின்ற மகாமேருமலையையும் போல இருந்தான். எ-று.

வி-கு: தோள் மருங்கு வான நெருங்க அது மலே யும் வானும் போலவும், புறம் வால் சூழ்வது அதன் சார்பில் நாளும் கோளும் இயங்குதல் போலவும் இருந்த தெனக் கொள்க.

54. "இவ்வகை முன்னம்............' ப - ரை : முன்னம் இலங்கை எரித்தான் - முன் நாளில் இலங்காபுரியை எரித்தவனான அநுமன், பை வரும் நாகர் பணம் சுளிய - அழகு பொருந்திய (நாகலோகத்து) நாகர்களின் படம் வருந்துமாறும், இவ்வகை திண் மெய் வகை கொண்டது - இவ்வாறு வலிய உடலை முறைமையாக ( - விசுவரூபமாக - )க் கொண்டு நிற்றலை, மை வகை சேர் அகல் வானவர் எல்லாம் கண்டு வியந்தார் - முகிலினங்கள் கூடும் அகன்ற வானிலுள்ளார் ( - தேவர்கள் - ) கண்டு ஆச்சரியம் அடைந்தார்கள். எ - று.

வி - கு : எரித்தவன் மெய்வகை கொண்டது வானவர் கண்டு வியந்தார். எரித்தான் : வினையால் அணையும் பெயர்.

55. "மேலளவாது விளங்கிய............' ப - ரை : விளங்கிய சொல் மெய் நூல் - உண்மைப் பொருளைத் தெரிக்கும் சொற்களால் அமைந்த தத்துவ நூல்களை, மேல் அளவாது - ஆழ்ந்து (சிந்தித்துத்) தெரிந்து, அளவாகிய - அவற்றையே தம் பிரமாணமாகக் கொண்ட, நுண் அறிவோர் போல் - நுட்பமான அறிஞரைப் போல, வீமன் - , மால் அளவு அன்றி வணங்குதல் இல்லான் - திருமாலாகிய ஸ்ரீ ராமபிரானை மாத்திரமன்றி மற்றோரை வணங்காதவனாகிய அநுமனுடைய, கால் அளவு அல்லது கண்டிலன் - பாதங்களை மாத்திரம் கண்டான் பிறவற்றைக் கண்டிலன். எ - று.

வி - கு : மேல் அளவாது : மேல் எழுந்த வகையாலே அளவிடாமல். நுண்ணறிவோர் , திருவடிக்காட்சியன்றிப் பிற காணாத நுண்ணறிவோர்.

56. "அருக்கனின் மும்மடி............' ப - ரை : அருக்கனின் மும்மடி ஆர் ஒளி வீசும் உரு கிளர் மேனியை சூரியனிலும் மூன்று மடங்கு நிறைந்த ஒளியை வீசுகின்ற நிறம் விளங்குகின்ற ( அநுமனது விசுவ ரூபத்) திருமேனியை, வீமன் - , ஊடு உற நோக்கா - உள்ளே பொருந்தப் பார்த்து, வெரு கொடு - அச்சங் கொண்டு, தாள் மிசை வீழ்ந்தனன் - (அவ்வநுமன்) பாதங்களில் வீழ்ந்தான்; மீண்டு சுருக்குக என்று துதித்தனன் இவ்விசுவரூபத்தை மறுபடி சுருக்குவீராக என்று சொல்லித் துதித்தான். எ - று.

வி, கு: ஊடு, உள், மனம். வெருவுதல் அவன் பெருமையும் தன் சிறுமையும் குறித்து. மீண்டு: பழைமை குறித்தது. அருக்கனின்: இன் உவமப் பொருளில் வந்த ஐந்தாமுருபு.

57. "இந்திர சாலம்............' ப, ரை: இந்திர சாலம் இயற்றினரைப் போல் - அற்புதங் காட்டும் மாயவித்தை செய்தவர்களைப் போல, தொல்லையில் வடிவு மைந்தொடு கொள் பொழுதத்து, பழைமையான வடிவினை அவ்வலி மையாலே (அநுமன்) கொண்டபொழுது, (வீமன்), அந்தம் இலாய் - ஒருபோதும் இறத்தல் இல்லாதவனே, அடியேன் பிழை எல்லாம் - அடியேன் செய்த பிழைகள் எல்லாவற்றையும், புந்தி உறாது பொறுத்தருள் என்றான் - மனசிலே கொள்ளாமற் பொறுத்தருளுக என்று வேண்டினான்.

வி, கு: பொழுதத்து - பொழுது; அத்து: சாரியை. புந்தி, புத்தி, மனம்.

58. "திருவடி தன்னிரு.............' ப, ரை: மரு அடி தார் புனை மாருதி - வாசனை வீசுகின்ற மாலையை அணிந்த வீமன், திருவடி தன் இரு சே அடியில் போய்த் தொழ - அநுமானுடைய இரண்டு சிவந்த பாதங்களிலும் சென்று வணங்க, அரு வடிவாகி அகண்டமும் எங்கும் - அரிய விசுவரூபங் கொண்டு பூமியிலும் மற்றெல்லா இடங்களிலும், ஒரு வடிவு ஆனவன் - ஒப்பற்ற வடிவத்தைக் கொண்டவனை அநுமான், உற்றுரை செய்வான் - உறுதி பயக்கும் வார்த்தைகள் (சில) சொல்லுவான்: எ' று.

வி, கு: ஒரு வடிவென்றது அவன் தெய்வத்தன்மையை விளக்கியது. அருவடிவு: தூலக் கண்ணுக்குப் புலப்படா வடிவு எனலும் ஒன்று. 'அருள் வடிவு' என்றும் பாடம்.

59. "உன்னருகே பயில்.............' ப, ரை: தன் அருகு என்றும் ஏதம் உறாத தவத்தோன் - தன்னிடத்தே ஒரு பொழுதும் குற்றம் வந்தடையாத தபோபலனை உடையவ

ஞன அநுமன், உன் அருகே பயில் உம்பியரோடும், உன் னயலிற் பழகும் உன் தம்பியர் மூவரோடும், அருகே மின் பயில் வேந்தொடும், அயலிலே மின்னலை ஒத்த திரௌபதி பழகுகின்ற தருமராசனோடும், வாழ்வு உற்று, அரச போக வாழ்வு அடைந்து, (பின்), என் அருகே வருக என்றனன், என் பக்கலில் வருவாயாக என்று சொன்னான்.

வி, கு: வாழ்வு: நிகழும் போரில் வெற்றி பெறுவதால் வரும் இராச வாழ்க்கை.

60. "அங்கவனம்மொழி............' ப, ரை: அங்கு அவன் அம் மொழி கூறலும், அங்கே அநுமன் அந்த நல் வார்த்தைகளைச் சொன்னபோது, (வீமன்), ஐயா, நின் உயர் இன் அருள் எங்கணும் உண்டே, நினது உயர்ந்த இனிய அருளானது எல்லாவிடத்திலும் உண்டல்லவா?, அதனால், பங்கய மாநிதி வாழ் பதி எய்த, (தாமரை போல் வடிவினதாகிய) பதுமநிதி வாழ்விக்கும் இயக்காது நகரை அடைவதற்கு, சங்கை இல் நல் நெறி சாற்றுக என்றான், சந்தேகம் இல்லாத நல்ல வழியைச் சொல்லுக என்று வேண்டினான் எ, று.

வி, கு: அருளைச் செய்யு மிடமெல்லாம் அவனு முறைதல் உண்மையாதலின் நெறி வினவினன். நின்னருள் எனக்குமுண்டே என்றுமுரைக்க. ஏ தேற்றம். சங்க நிதி பதுமநிதி இரண்டும் உடையான் குபேரன். வாழுதலைத் தன் வினையாகவும் உரைப்ப.

61. "என்றலு மிந்த............' ப, ரை: என்றலும், என்று வீமன் கேட்ட அளவில், [அநுமன் வழி முதலியன சொல்லுவான்:] இந்த வனத்தினது எல்லை ஒன்றிய ஓர் இரு நூறு யோசனை சென்ற பின், இவ்வனத்தின் எல்லையாகப் பொருந்திய இருநூறு யோசனைதூர வழியையும் சென்ற பின்பு, சில் சில யோசனை சென்றால், மேலும் சில யோசனை தூரம் போனால், (இவ்வழி) மன்றல் மலர்ப் பொழில் வாவியில் மன்னும், நறுமண முள்ள பூக்கள் நிறைந்த சோலை சூழ்ந்த வாவியை அடையும்; எ, று.

வி - கு : இது முதனூன்கு செய்யுள் ஒரு தொடர். ஓர் என்னும் அடைமொழி அவனூக்கத்தை நோக்க மிகச் சிறு தூரம் என்பதுணர்த்திற்று.

62. "அப்பொழில் காவல்..........." ப - ரை : அ பொழில் காவல் அரக்கர் அநேகர் - அந்தச் சோலையைக் காவல் செய்கின்ற அரக்கர் மிகப் பலராவர்: (அவர்கள்), எப் பொழிலும் திறை கொள்ளும் எயிற்றர் - (தம் பல் வலியி னலே) எந்த உலகினையும் வென்று திறை கொளத் தக்க பற்களையுடையவர்; (ஆதலின்) துப்பு உடனே அவர் ஆவி தொலைத்தால் - வலிமை கொண்டு அவர்கள் உயிரைக் கொன் றொழித்தால், செப்பிய மா மலர் - உன்னுற் சொல்லப்பட்ட பெருமை பொருந்திய பூவை, சென்று உறல் ஆகும் - சென்று பெறுதல் முடியும். எ - று.

வி - கு : அவர் பல்லின் வலி கூறி, அவரை வெல்ல வேண்டிய வலியளவும் கூறினன். பொழில் - பூமி.

63. "அல்லது நீடளகாபதி...........". அல்லது - அவ்வா றல்லாமல், நீடு அளகாபதி தானும் மெல்லியலும் - பெரு மையையுடைய அளகாபுரிக்குத் தலைவனை குபேரனும் அவனுடைய மென்மைத் தன்மையுடைய மனைவியாகிய சித்திரரேகையும், பொழில் மேவிய போது - அச் சோலை யில் (வெம்மை தணிக்க) வந்த பொழுதில், நயத்தொடு நல் உறவாகி சென்றால் - மேன்மையோடும் நல்லுறவு கொண்டு (அவன் முன்) சென்றால், மல்லல் மலர் தருவோடு வழங்கும் - வளம் நிறைந்த அம் மலரை மரத் தோடே வழங்குவன். எ - று.

வி - கு : நல்லுறவு - நண்பு. நயம் - பணிவுமாம். அளகை+பதி=அளகாபதி. வீமன் விரும்பிய வன சமலர் தரலால் தருவைக் கற்பக விருட்சம் என்றும் கூறுப.

64. "உறுதியு மொன்னலர்..........." ப - ரை : உறுதியும் - (ஊறு வந்துழி) மனம் தளராமையும், ஒன்னலர் ஊக்கமும் - எதிரும் பகைவர்களின் மன வெழுச்சியும், ஏகும் நெறி யினது எல்லையின் நீர்மையும் - செல்லும் வழி அளவின் இயல்பும், நெறியில் குறிகளும் - அவ் வழியில் உள்ள

அடையாளங்களும், யாவையும் - பிறவு மெல்லாம், அறிவுடையான் அன்பொடு கூறி - அறிவு உடையவனாகிய அநுமன் அன்போடு சொல்லி, அன்பொடு விடை அளித்தான் - (பிரிதலாற்று) அன்பொடு (சென்று வருக என) விடை தந்தான். எ - று.

வி - கு : ஊக்கம் என்பது ஆகுபெயராய், போரை உணர்த்தும. ஒன்னலர் போர் நேர்ந்துழி மன உறுதி வேண்டுமென்ப. பிரிதலருமை பேண இரு முறை அன்பு ஆளப்பட்டது. விடை : தொழிற் பெயர்.

65. "மொய்ம்புடை மாருதி..............." ப - ரை : நம்பியும் - ஆண்களிற் சிறந்தோனாய வீமனும், மொய்ம்பு உடை மாருதி இணைதாள் முன்னா - வலிமை மிகக அநுமானின் இரு பாதங்களையும் தியானித்துக் கொண்டு, வெமபிய கான் இடை மேவிய பயன் - (உஷ்ணத்தால்) வெந்த காட்டிலே வந்தடைந்ததன் பயனாக, எம பெருமான் - எமது தலைவனே, இங்கு உனை எய்தினன் என்னா - இங்கே உன்னை அடைந்தேன் என்று சொல்லி, நாழிகை ஒன்றில் நடந்தான் - ஒரு நாழிகைப் பொழுதினுள் (அவ்விடத்தை விட்டு) சென்றான. எ - று.

வி - கு : முன்னா, என்னா என்பன செய்யா என்னும் வாய்பாட்டு இறந்தகால வினை எச்சம். முன்னா என்பதற்கு அடைந்து என்றும், தனக்கு (-துணையாக)க்கொண்டு என்றும் பொருள் கூறலாம்.

66. "அக்கணமாசுவின்..............." ப - ரை : அக்கணம் - அப்பொழுது, ஆசுகன் மைந்தன் - வாயு புத்திரனான வீமன், ஆசுவின் - விரைவாக, மிக்கு உயர் விஞ்சையர் நாடு இடை விட்டு - மிக மேம்பட்ட வித்தியாதாருடைய நாட்டைக் கடந்து சென்று, திக்கு உறை நாகர் திரண்டு துதிக்கும் - எல்லாத்திசைகளிலும் வாழுந் தேவர்கள் கூடிப் போற்றுகின்ற, சக்கர நாகம் அதன் புடை சார்ந்தான் - சக்கர மலையின் சாரலை அடைந்தான். எ - று.

வி - கு : இடை - இடம். புடை - பக்கம்.

67. "தவர்மறை வாணர்............' ப - ரை : (அப்பால்), தவர் மறை வாணர் தவம்புரியும் தண் கவான் உடை - கெடுதல் இல்லாத வேத நெறியின்படி வாழுவோரான முனிவர்கள் தவஞ் செய்கின்ற குளிர்ச்சி பொருந்திய சாரல்களை உடையதாய், நீள் குகாத்து உயர் - நீண்ட குகைகளோடு உயர்ந்து, கலைசேர் உவர்மதி சூழ்வரும் ஓங்கலோடு ஒக்கும் - சோடசகலைகளோடும் கூடிய பூரணசந்திரன் சுற்றிவரும் மேருமலையை ஒத்து விளங்குகின்ற, திவாகர மால்வரை சேர்ந்திடும் எல்லை - திவாகரம் என்னும் பெயரிற் பெரிய மலையை (வீமன்) அடையும் பொழுது, எ - று,

வி - கு : முதல் மூன்று அடிகளும் திவாகரத்துக்கு அடைமொழி. நீள் குகை எனவே அகலமும் கூறியவாறு. இச் செய்யுள் கட்டுரை செய்வான் (72) என்பதனோடு முடியும். அதுவரை ஒருதொடர்; புண்டரீகன் என்னும் அரக்கனின் தோற்றமும் வருகையும். சூழ்வரும் என்பது ஒரு சொல் ; சூழ்வா பகுதி ; உம் பெயரச்ச விகுதி.

68. அஞ்சன மேக............' ப - ரை : அஞ்சன மேகமொடு ஆலம் அளாவி - கருமை நிறமான மேகத்துடன் நஞ்சைக் கலந்து, வஞ்சனை கொண்டு வகுத்து அன மெய்யான் - வஞ்சகத்தை உள்ளே கொண்டு ஆக்கினாற் போன்ற உடம்பினை உடையவனும், வானின் இடை குஞ்சிகள் சொடி ஓடி - ஆகாயத்திலே செம்பட்டை மயிர்கள் நீளச் சென்று, செம் சுடர் கால்தருகின்ற சிரத்தான் - சிவந்த ஒளிக்கிரணங்களைக் கக்குகின்ற தலையையுடையவனும், எ - று.

69. "குளிர் வரை............' ப - ரை : குளிர் வரை ஒன்றிய நீள் குகரம் போல் - குளிர்ச்சி பொருந்திய மலையிற் பொருந்திய நீண்ட குகையைப் போல, அளவில் பெரும் பகு வாய் அதில் - அளவினாலே பெரிய பிளந்த வாயிலே, மதியின் பிளவு எனலா - சந்திரனுடைய பாதி என்று சொல்லும்படி, வளையும் பிறழும் தண் இள நிலவு என்ன - வளைந்து விளங்குகின்ற குளிர்ந்த இளமையான சந்திரிகையைப் போல, இலங்கும் எயிற்றன் - ஒளி செய்கின்ற (கடைவாய்ப்) பல்லை உடையவனும், எ - று.

70. "ஆறிரு காதம்............' ப - ரை : ஆறு இரு காதம் அகன்றிடு தோளான் - பன்னிரண்டு காததூரம் விசாலித்த புயங்களையுடையவனும், நொடிக்குள் நூறு இரு காதம் நடப்பான் - நொடிப் பொழுதினுள்ளே இருநூறு காததூரம் நடக்கும் நடை வலியுடையவனும், ஏறுடையான் முதலானவரேனும், (எதிர்ந்தவர்) இடப வாகனத்தையுடைய சிவன் முதலிய யாவரேனும், மாறுபடு காதி மலைந்திட வல்லான் - மாறு கொண்டு கொன்று போரிட வல்ல போர் வலிமையுடையவனும், எ - று,

71. "எண்டிசையும்............' ப - ரை : இகலோடும் எண்திசையும் திறை கொண்டு - போர் வன்மையினாலே எட்டுத திக்கிலுமுள்ள நாட்டரசர்களை வென்று திறைப் பொருள் பெற்று, நாடு புண்டரிக பெயர் பொறித்தோன் - அந் நாடுகளிலே (தன் பெயராகிய) புண்டரீகன் என்றும் பெயரை எழுதி வைத்தவனும் (ஆகிய அரக்கன்), வருவான் திண் திறல் மாருதி சேயைக் கண்டனன் - (தன்னெதிரே) வருகின்ற வாயு புத்திரனான வீமனைக் கண்டான்; அங்கு - உடனே, அழல் கான்றிடு கண்ணன் -அக்கினியைக் கக்குகின்ற கண்ணனாயினான். எ - று.

72. "உருத்து முகிற்குலம்............' அரக்கன் - புண்டரீகன், உருதது - கோபங் கொண்டு, முகில் குலம் உட்கு உடன் மட்க சிரித்து - முகிற் கூட்டங்கள் அச்சத்தோடு மயக்கமடையும்படி (உரத்துச்) சிரித்து, இதழ் கவ்வி இணை எயிறு தின்று - (மேல்வாய்ப் பல்லாற் கீழ்) உதட்டைக் கடித்து இரண்டு கடைவாய்ப் பற்களையும் சப்பி, அரிதுவசன் தனை நோக்கி - சிங்கக் கொடியை யுடையவனாய வீமனைப்பார்த்து, கருத்துடன் நின்று - ஒன்றித்த மனத்தனாய் நின்று, இவை கட்டுரை செய்வான் - இவற்றை உறுதியோடு சொல்வானாயினான். எ - று.

வி - கு : மெய்யான், சிரத்தான் (69) தோளான், நடப்பான், வல்லான் (70) பொறித்தோன், (வருவானைக்) கண்டு கண்ணனாய் (71) உருத்து, சிரித்து, கவ்வி, தின்று, நோக்கி, செய்வான் (72) என முடிபு காண்க. கண்டனன் கண்ணன் என்பன எச்சமுற்றுக்கள். சேய் வருவானை: உருபு பிரித்

துக் கூட்டப்பட்டது. கால்தருகின்ற (68) : ஒரு சொல்; நிகழ்காலப் பெயரெச்சம்; கால்தா + கின்று + அ. முன் மதியின் பிளவெனலால் இளநிலவு பிறையாகாது சந்திரிகையாகும். (69). எண்டிசை (71) இருமடியாகு பெயர், 72, ஆவது செய்யுள் வெகுண்டோன் அபிநயம் கூறிற்று.

73. ": யானுறை கானகம்..............' ப - ரை : யான் உறை கானகம் என்று - நான் வாசம் பண்ணும் காடு என்றஞ்சி, இதற்கு இடை - இந்த இடத்தில், இமையோரும் தானவர்தாமும் சாரார் - தேவர்களும் அசுரர்களும் அடையமாட்டார்கள்; (அவ்வாறாக) மானுடன் நீ இவண் வந்தது - மனிதனாகிய நீ இங்கே வந்த செயலானது. சுவையாம் ஊன் இடவோ - சுவை பொருந்திய (உனது) தசையை (எனக்கு உணவாக) இடுதற்கோ, இஃது உரைத்திடுக என்றான் - இவ்வினாவிற்கு விடை கூறுவாயாக என்று சொன்னான். எ - று.

வி - கு : நல்லோரும் அடையார்; தீயோரும் அடையார்; அதனால் நீ உணவாகவே வந்தாய் என முடிபு செய்தான். வந்தது: அஃறிணை ஒன்றன் பால் இறந்தகாலவினைமுற்றுத் தொழிற் பெயர்.

74. "வென்றி யரக்கன்..............' ப - ரை : வென்றி அரக்கன் விளம்புதல் கேளா - வெற்றி பொருந்திய புண்டரீகன் என்னும் அரக்கன் சொல்லுதலைக் கேட்டு, முன்னம் இடிம்பனை வென்றோன் - முன்நாளில் இடிம்பன் என்னும் அரக்கனை (போரிற் கொன்று) வெற்றி பெற்றவனாகிய வீமன், குன்று அன தோள்கள் குலுங்க நகைத்து - மலையை ஒத்த புயங்கள் குலுங்கச் சிரித்து, உன் தனது ஆவியும் உண்டிட வந்தேன் என்றனன் - உனது உயிரையும் உண்பதற்காகவே வந்தேன் என்று சொன்னான். எ - று.

வி - கு : ஆவியும் என்றதனால் வலியும் என்பதும் முன்னும் பல அரக்கர் ஆவி யுண்டனன் என்பதும் பெறப்பட்டன.

இடிம்பன் வதம் : பாண்டவர்களை வஞ்சனையாற் கொல்லச் சூழ்ச்சி செய்த துரியோதனன் முதலானோர் வாரணவதத்தில் அரக்கினால் ஒரு மாளிகை கட்டி அதில் ஐவரையும் வசிக்கச் செய்தனர். பின்

முன் செய்த சங்கேதப்படி கௌரவர், அம் மாளிகைக்குத் தீயிட முயல்வதை, விதுரன் மூலமாக முன்னரே அறிந்து நிலவழி வகுத்து, தீயிட்டபோது அந் நிலவழி மூலம் ஐவரும் தாயும் தப்பி, அயலில் உள்ள காட்டை அடைந்தனர். அக் காட்டில் வசித்த இடிம்பன், மனித வாடை வீசுதலை அறிந்து அவரைப் பிடித்துவரத் தன் தங்கையான இடிம்பியை அனுப்பினன். வந்தவளும் வீமன் கட்டழகில் ஈடுபட்டு, அவள் வாராமையால் இடிமபன் தானே வந்து வீமனைக் கண்டு அவனொடு முட்டினன். இருவருக்கும் பெரும்போர் நிகழ்ந்தது. ஈற்றில் வீமன் இடிம்பனைக் கொன்றொழித்தான்.

75. "மற்றது கூற..............' ப ரை : அது கூற - வீம சேனன் அதனைச் சொல்ல, அரக்கன் - புண்டரீகன், மறத் தொடு எதிர் உற்று ஓடி - வீரத்தோடு வீமனுக்கு எதி ரேற்று ஓடிச் சென்று, உறுக்கியபோது - வீரகர்ச்சனை செய்தபொழுது, அ கொற்றவனும் - அந்த வெற்றியையு டைய வீமனும், கதை கொண்டு - தண்டாயுதத்தைக் கையில் ஏந்திக் கொண்டு, உடன் மண்டி - அவ் வரக்கனு டன் நெருங்கி, வந்தனன் ஆவி பறிப்பான் - வந்தவனாகிய அவ் வரக்கனுடைய உயிரைக் கவரும்படி, பற்றினன் - அவ னைப் பிடித்தனன். (போர் தொடங்கினன்.) எ - று.

வி - கு : அரக்கன் எதிரேற்று வந்தபோது வீமனும் எதிர் மண்டிப் பொரத் தொடங்கினன் என்பது கருத்து. வந்தனன் - வினையாலணையும் பெயர். வந்தவன் என்றும் பாடம்.

76 "குன்றொடு குன்று..............' ப - ரை : ஒத்த உரத் தர் - (ஒருவருக்கொருவர்) சமமான வலிமை படைத்தவ ரான வீமனும் புண்டரீகனும், குன்றொடு குன்று அமர் கூருவதே போல - மலையோடு மலை போரில் (மேலும் மேலும்) மிகுவதைப் போல, நெடும் பொழுது நின்று ஆகம் மலைந் தும் - நீண்ட நேரம் நிலைத்து நின்று போர் புரிந்தும், தம - தம் முடைய, வன் திறலும் வாகு வலியும் ஒன்றும் இளைத்தி லர் - வலிய ஆற்றலிலும் புய வலிமையிலும் சிறிதும் (ஒரு வர்க்கொருவர்) தாழ்ந்திலர். எ - று.

வி - கு : கூர் : மிகுதிப் பொருள் தரும் உரிச்சொல். அமர் கூருதல் என்பது நீண்டபோர். 'கூடுவதே' என்றும்

பாடம். தாம்+அ=தம : தாம் என்பது படர்க்கைப் பன்மைப் பொதுப்பெயர்; 'அ' : ஆறும் வேற்றுமைப் பன்மை உருபு.

77, "எல்லையிலா வமர்............' ப - ரை: இங்கு இவர் இவ்வாறு - இங்கே இவ்விருவரும் இங்ஙனமாக, எல்லை இலா அமர் ஒல்லையில் மோதி உடன்றிடு போழ்தில் - முடிவு காணாத போரை (ஒருவரை ஒருவர்) விரைந்து தாக்கிப் பொருதுகின்ற பொழுது. மல்லல் அரூபி - (வானில்) வலிமையுடைய அசரீரியானது, தொல்லையில் ஓர் முனி சொல்லிய சாபம் வழங்கியது - முன் நாளில் ஒரு முனிவர் கூறிய சாப வார்த்தைகளைச் சொல்லியது. எ - று.

வி - கு : அன்று, ஏ அசைகள். மல்லல் வளமுமாம். அரூபிக்கு வலியும் வளமுமாவது சொன்னது பயத்தலாகிய பொருணிறைவு. ந+ரூபி=அரூபி : வடிவம் இல்லாதது.

78. "ஒன்றினு மாவி.............' ப - ரை: வானின் இடத்து அசரீரி - ஆகாயத்திலே அசரீரியானது. வாயு குமாரா - வாயு புத்திரனே, உனக்கு இவன் ஒன்றினும் ஆவி ஒல்கான் - உனக்கு இவன் ஒருவாற்றானும் உயிர்வலி குறையமாட்டான்; இனி - (ஆதலால்) இனி, துன்றிடு தோள் மிசை தோமரம் ஏவி - நெருங்கிய இவனது தோளிலே தண்டாயுதத்தை விட்டு, கொன்றிடுவாய் என்றது - இவனைக் கொல்லுவாயாக என்று சொன்னது. எ - று.

79. "அங்கசரீரி.............' ப - ரை : அசரீரி அறைந்த சாபம் - வானில் அசரீரி சொல்லிய சாபவார்த்தையை, அங்கு—, சமீரணி சங்கை உறாது கேட்டு - வாயு புத்திரனை வீமன் சந்தேக மில்லாமற் கேட்டு, பங்கய நாம நிசாசரபதிதன் துங்க வய புய மேல் - புண்டரீகன் என்னும் இராட்சதர் தலைவனுடைய உயர்ச்சி பொருந்திய வலிய தோளிலே, கதை தொட்டாள் - தண்டாயுதத்தால் மோதினான். எ - று.

வி - கு : பங்கய நாமன் - தாமரையின் பெயரையுடையவன்; பங்கயம்=புண்டரிகம். நிசாசரர் : நிசி+சரர் - இரவிற்

சஞ்சரிப்பவர். சமீரணி : தத்திதாந்தநாமம் : சமீரணனுடைய புத்திரன்; சமீரணன் - காற்று.

80. "தொட்ட கொடுங்கதை............' ப - ரை : தொட்ட கொடும் கதை தோள் உறும் முன்னர் - வீமன் எடுத்த கொடியகதாயுதமானது தோளையடைந்த அளவில், அடல் வஞ்சன் - வலிய வஞ்சனான புண்டரீகன், உளம் நொந்து பதைத்து பட்டு - மனம் வருந்தித் துடித்து உயிர் இறந்து, அன்று - முன் நாளில், மருத்து வட்ட நெடும் கடல் ஊடு இட்ட பெரும் கிரி என்ன - வாயு தேவன் வளைந்த நெடிய கடலிலே தள்ளிய பெரிய மேருமலையைப் போல, வீழ்ந்தான் - நிலத்திலே வீழ்ந்தான். எ - று.

வி - கு : தொழில் பற்றி வந்த உவமை. (மருத்து மலையொடு பொருது கடலுட் டள்ளினன்.)

கடலுட் கிரி தள்ளியது: ஒரு முறை வாயுதேவனுக்கும் ஆதிசேடனுக்கும் தம் பெலத்தில் வாதம் நிகழ்ந்தது. அப்போது ஆதிசேடன் மேருமலையின் சிகரத்தை வாயுவின் வலிமையினின்று காப்பேன் எனக் கூறி, தன் ஆயிரம் படங்களாலும் பாதுகாத்தான். ஆயின் வாயுன் பெலமெல்லாம் கொண்டு மோதி அச் சிகரத்தைக் கடலுட் டள்ளினன்.

81. "ஏற்றத் தோடிகலி............' ப - ரை : அ கொற்ற வேல் குரிசில் - அந்த வெற்றி தரும் வேலை ஏந்திய வீமன், இவ்வாறு -, இடை வழி அதனில் - தான் செல்லும் வழி நடுவில், ஏற்றத்தோடு இகலி வந்து - பெருமையோடும் வலிமையோடும் வந்து, சீற்றத்தோடு எதிர்ந்த வெம் போர் திண் திறல் அரக்கன் தன்னை - கோபங்கொண்டு தன்னை எதிர்த்த கொடிய போரில் மிக்க வலிமை பொருந்திய புண்டரீகனை, பாற்றுக்கும் பகுவாய்ப் பேய்க்கும் பருந்துக்கும் - கழுகுகளுக்கும் பிளந்த வாயையுடைய பேய்களுக்கும் பருந்துகளுக்கும், வருந்துகின்ற கூற்றுக்கும் - (இதுவரை அவனுயிரை உண்ணமாட்டாமல்) வருந்துகின்ற யமனுக்கும், விருந்து செய்து போனான் - (முறையே உடலையும் உயிரையும்) விருந்தாக உண்ணக் கொடுத்து மேற் சென்றான். எ - று.

வி - கு: தன்னிலும் கொடுமை மிக்கோனாதலின் கூற்றுவன் அணுக அஞ்சினன் என அவன் வலி மிகுதி கூறி வீமன் ஆற்றலை மீக்கிளந்தார்.

82. "எண்டிசை யமரர்............' ப - ரை: எண் திசை அமரர் போற்றும் மால் இந்துவரை சென்று எய்தி - எட்டுத் திசைகளிலும் உள்ள தேவர்கள் புகழும் பெரிய சந்திரமலைக்குச் சென்றடைந்து, பொருக்கென புண்டரீகன் தன் நாடு நெருக்கி - விரைவிலே புண்டரீகனுடைய நாட்டின் எல்லையைக் கிட்டி, அப்பால் - அதன் பின்பு, தெள் திரை அளித்த தெய்வ செல்வ மா நிதிகள் ஓங்கும் - தெளிந்த அலைகளையுடைய பாற்கடலானது தந்த தெய்வத் தன்மை பொருந்திய மிக்க செல்வக் குவியல்கள் விளங்குகின்ற, அண்டர் மாநகரும் ஒவ்வா - தேவர்களின் பெரிய நகரான அமராபதியும் ஒப்பாகாத, அளகை மா நகரம் கண்டான் - அளகாபுரியைக் கண்டான். எ - று.

வி - கு: இந்து மால் வரை - சந்திர சைலம் என வழங்கும். இந்து - சந்திரன்; சைலம் - மலை. தெண்டிரை அளித்த செல்வம் என்பது அமராவதிக்கு அடைமொழி. அவை சில குறைதலும் நிறைதலும் உடைமையின், குறையா நிதிகளாய சங்க நிதி பதும நிதிகளை உடைய அளகாபுரி சிறந்ததாயிற்று.

தேவாசுரர் அமிர்தம் வேண்டிப் பாற்கடலைக் கடைந்தபோது முகடி, திருமகள், சந்திரன், தந்வந்திரி, அப்சரசுகள், உச்சைச்சிரவம், ஐராவதம, பாரிசாதம், கற்பகதரு, காமதேனு, கவுஸ்துபமணி என்பன தோன்றின. அவற்றைத் திருமால் முதலியோர் தத்தம் பிரீதப்படி பேற்றனர்.

83. "அந்தமா நகரின்............' ப - ரை: அகல் விசும்பு உற நின்று ஓங்கும் விந்தம் ஆம் என்ன நின்று விளங்கு தோள் வீமசேனன் - அகன்ற ஆகாயத்திற் பொருந்த நிமிர்ந்து உயரும் விந்தமலையாகும் என்று சொல்லும் வண்ணம் நிலைபெற்று விளங்குகின்ற தோள்களையுடைய வீமன், மாருதி நண்போடு முந்தை மொழி வழி எய்தி - அநுமான் அன்புடன் முன்பு சொல்லிய வழியிலே சென்று, அந்த மா நகரின் தென்பால் - அந்த பெரிய அளகாபுரியின்

தெற்குப் பக்கத்திலே, அந்த கந்த வான் பொழிலும் - (தான் விரும்பிய பூக்கள் நிறைந்த) அந்த வாசனை பொருந்திய சிறந்த சோலையும், நல் நீர் கடி மலர் தடமும் கண்டான் - நல்ல நீர் நிறைந்த வாசனையுள்ள பூக்களையுடைய வாவியும் (ஆகிய வற்றைக்) கண்டான். எ - று.

வி - கு: முந்தை=முந்து,முன். அது: 'சங்கையில் நன்நெறி சாற்றுக' (60) என வீமன் கேட்ட கால முணர்த்திற்று. ஐ சாரியை. கடி காவலுமாம், நன்னீருடைமையின்.

84. "ஆயிடைக் குறுகும்............' ப - ரை: அ இடை குறுகும் எல்லை - அந்த இடத்தை அடைந்தபொழுது, அ பொழில் துப்பில் காப்போர் - அந்தச் சோலையைத் தமது வலிமையினாலே காப்பவர்கள், சேய் இடை பரந்த மார்பர் - நெடுந்தூரம் பரந்த மார்பினை உடையவர்கள்; சேண் இடை கடந்த தோளர் - ஆகாயமாகிய இடத்தையும் கடந்துயர்ந்த தோளினை உடையவர்கள்; வாய் இடை பிறைகள் என்ன வளைந்த வாள் எயிற்றர் - வாயிலே பிறைகளைப் போல வளைந்த ஒளி பொருந்திய பற்களை உடையவர்கள்; வஞ்ச தீ இடை சோரி தோய்ந்து திரண்டென சுழல் செம் கண்ணர் - வஞ்சகமாகிய தீயிலே இரத்தம் தோய்ந்து திரண்டாற் (- உருண்டை) போன்ற சுழலுகின்ற சிவந்த கண்களை உடையவர்கள்; எ - று.

வி - கு: 88, ஆவது செய்யுள் முடிய ஒரு தொடர். காப்போர் என்னும் எழுவாய் தனித்தனி மார்பர், தோளர் முதலிய இருபத்து மூன்று குறிப்பு வினைமுற்றுக்களையும் கொண்டு முடியும். காப்போர்: வினைப்பெயர். அ+இடை= ஆயிடை: நீட்டல் விகாரம்; 'ய' உடம்படு மெய்.

உடம்படு மெய் என்பது நிலைமொழி ஈற்றிலும் வருமொழி முதலிலும் உள்ள உயிர் எழுத்துக்களை உடம்படுத்தும் மெய்யாகும். அவை 'ய்' 'வ்' என்னும் இரண்டுமாம். உயிர் எழுத்துக்கும் இடை எழுத்துக்கும் பிறப்பிடம் கழுத்தாதலின், அவ்வினம் பற்றி ய, வ வந்தன. வருமொழி உயிர்க்கு உடம்பாக அடுக்கும் மெய் எனினும் ஆம். நிலைமொழி

ஈற்றில் இ, ஈ, ஐ நின்றால் 'ய' வும், ஏனை உயிர் நின்றால் 'வ' வும் உடம்படுமெய்யாக வரும். பனை + ஓலை = பனையோலை; பலா + இலை = பலாவிலை.

85. "சூழிருட் பிழம்பு நஞ்சு..............." ப, ரை: சூழ் இருள் பிழம்பு நஞ்சு தோய்ந்து அன்ன துவக்கர், உலகினைச் சூழ்ந்து மூடிய இருளின் கூட்டம் நஞ்சிலே தோய்ந்தாலன்ன தோலை (, உடம்பு) உடையவர்கள்; நாழிகை ஒன்றின் எல்லா உலகையும் உன்னின் நலியும் ஈட்டார், ஒரு நாழிகைப் பொழுதிலே எல்லா உலகங்களையும் நினைத்த மாத்திரத்தே வருத்துங் கூட்டம் (, தொகை) மிக்கவர்கள்; மந்தரம் மத்து ஆக, மந்தரமலையை மத்தாகவும், வாசுகி கயிறு ஆ, வாசுகி என்னும் பாம்பைக் கயிறு ஆகவும் (கொண்டு), மாயோன், ஸ்ரீ கிருஷ்ணன், ஆழி நீர் கடைந்த நாளும், பாற் கடல் நீரைக் கடைந்த நாளிலும், அமுது எழ கடைந்த வீரர், அமிர்தம் எழும் வண்ணம் (இளையாது) கடைந்த வீரர்கள். எ, று.

வி, கு: ஈட்டம், கூட்டம், திரள். ஆக என்பது 'ஆ' எனத் தொகுத்தல் விகாரம் பெற்றது. வீரர் என்றது முன்னிய கருமம் முடியும் வரைச் சலியா துழைத்தமையை உணர்த்திற்று. துவக்கு, தோல்; உடம்பைக் குறிக்கும். ஈட்டார், வலிமை, தகுதி உடையவர் என்றுமாம்; ஈடு பகுதி.

86. "மறத்தொடு வஞ்சம்..............." ப, ரை: மறத்தொடு வஞ்சம் ஆன நண்பு என வளர்த்து, பாவத்தையும் வஞ்சனையையும் (தமக்குப்) பொருந்திய நட்பாக வளர்த்து, அதனால், நாளும் அறத்தொடு பகைக்கும் நெஞ்சர், ஒவ்வொரு நாளும் தருமத்தைக் கோபிக்கின்ற மனத்தினை யுடையவர்கள்; பிலத்தினும் அகன்ற வாயர், பாதாள துவாரத்தினும் விரிந்த வாயையுடையவர்கள்; புறத்தினில் முகத்தர், (முன்னன்றி) முதுகிலும் முகத்தையுடையவர்கள்; மார்பில் புழை முழை மூக்கர், மார்பிலே உட்டுளை பொருந்திய குகை போன்ற மூக்கினை உடையவர்கள்; இன்ன திறத்தினர், இவை போன்ற (அமானுஷிகமான) திறமைகளை உடையவர்கள்; செந்தீ குஞ்சி சிரத்தினர், சிவந்த

அக்கினி போலும் (செம்பட்டை) மயிர் நிறைந்த தலையினை உடையவர்; வரத்தின் மிக்கோர் - சிறப்புக்களில் மேம்பட்டவர்கள். எ - று.

வி - கு : 'மறத்தொடு வஞ்சமான நண்பு' என்பதற்கு (1) மறத்தொடு வஞ்சத்தை முறையே வீரமாகவும் நண்பாகவும் என்றும் (2) மறத்தையும் வஞ்சத்தையும் அகங்காரத்தையும் நண்பாக என்றும் உரை கொள்ளலாம். புறத்தில் மார்பில் முகம் மூக்கென்றது அவர்தம் பார்வைத் திறனையும் மணத்தற்றிறனையும் கூறியவாறு. குஞ்சி - ஆண் மயிர்.

87. "காங்களாயிரத்தர்............' ப - ரை : காங்கள் ஆயிரத்தர் - கைகள் ஆயிரமுடையர்; நண்ணும் கால்கள் - பொருந்திய கால்கள், ஆயிரத்தர் -; குஞ்சி சிரங்கள் - மயிர் நிறைந்த தலைகள், ஆயிரத்தர் -; பூழைச் செவிகள் - துவாரம் பொருந்திய காதுகள், ஆயிரத்தர் -; வென்றி உரங்கள் - வெற்றிதரும் மார்புகள், ஆயிரத்தர் -; ஊழி தவம் முயன்று உரிமை பெற்ற வரங்கள் - ஊழிக் காலம் வரை தவஞ் செய்து அவ் வுரிமையினாலே பெற்றுள்ள வரங்கள், ஆயிரத்தர் -; மிக்க மறைகள் - மேம்பட்ட மந்திரங்கள், ஆயிரத்தர் -; எ - று.

வி - கு : மன், ஓ அசை. ஆயிரம் என்னும் எண் அவற்றின் திறல் வகைப் பன்மை குறித்து வந்தது. உரம் - வலியுமாம்.

88. "வைத்தாரை வாளம்............' ப - ரை : வை தாரை வாளம் - மிகக் கூரிய வாள், வில் -, வேல் -, மழு -, எழு - வளைதடி, திகிரி - சக்கரம், சூலம் -, (என்னும் இவ் வாயுதங்களை), கை தாரை பட கொண்டு - கையிலே ஒழுங்கு பட ஏந்திக் கொண்டு, கண் இமையாது என்றும் காப்போர் கண் இமைத்தலின்றி எப்பொழுது காக்கின்ற காவலையுடையவர்கள்; மை மாரி தாரை ஒப்பார் - கரிய முகில் பொழியும் நீர் ஒழுக்குப் போலும் மிகுதியை உடையவர்கள்; (அவர்கள் அச சோலையிலே), மானுட நாற்றம் கேட்டு - மனித வாசனையை உணர்ந்து, கடவுள் வாச

மொய் - மலர் அசோலை எல்லாம் மொய்த்தார் - தெய்வத் தன்மை பொருந்திய மணம் வீசும் சோலைகளாய மைந்த பூக்கள் நிறைந்த அந்தச் சோலை முழுவதிலும் நெருங்கித் திரண்டார்கள். எ - று.

வி - கு : முன் வந்த இருபான் மூன்று குறிப்பு வினை முற்றுக்களும், பெயர்களாய் எழுவாய் உருபேற்று மொய்த்தார் என்னும் பலர்பால் முற்றுடன் முடிந்தன. அறிதல் ஒப்புமைபற்றி மாத்தலைக் கேட்டெனக் கூறினர். மாரி ஒப்பார் என்றது இன மிகுதி உணர்த்திற்று; 86- ஆவது செய்யுள் 2- ஆம் அடி வலிமிகுதி உணர்த்தியது.

89. "மண்டி யெங் கெங்கும்..............' ப - ரை : எங்கு எங்கும் மேல் மேல் மண்டி - எல்லாவிடங்களிலும் மேலும் மேலும் மொய்த்து, மறி கடல் முகக்கும் நீல கொண்டலின் குமுறி ஆர்த்து - திரைகள் மறிகின்ற கடலை உண்ணும் நீல நிறமான மேகத்தைப் போலச் சப்தம் செய்து ஆரவாரித்து, குறுகிய கொடிய நீசர் - (அங்கே) வந்தடைந்த கொடியரான அவ் வரக்கர், சண்ட வேகத்தின் எய்தும் சதாகதி தனயன் தன்னை - மிக்க வேகத்தோடும் அங்கே அடைகின்ற வாயு புத்திரனை வீமனை, சூல பாச காலனை கண்டது அன்னர் - சூலமும் பாசக்கயிறும் கொண்ட யமனைக் கண்டவர் போல்பவராய், கண்டனர் - கண்டார்கள், எ - று.

வி - கு : குறுகிய் நீசர் சதாகதிதனயனை யமனைக் கண்டவர் போற் கண்டனர். கண்டதன்னர் என்னும் உவமை அவருயிரை அவன் பின் கொள்ளுதலைக் குறித்து நின்றது. நீசர் - இழி தொழிலுடையவர் - கீழோர்.

90. "எற்ற வென்பாரும்..............' ப - ரை : எற்ற என்பாரும் - தூக்கி எறியுங்கள் என்று சொல்வோரும், சூலத்து எறிய என்பாரும் - சூலத்தினல் எறியுங்கள் என்று சொல்வோரும், எய்தி பற்ற என்பாரும் - கிட்டச் சென்று பிடியுங்கள் என்று சொல்வோரும், ஆவி பறிக்க என்பாரும் - உயிரைக் கவருங்கள் என்போரும், யாக்கை சுற்ற என்பாரும் - உடலை எடுத்துச் சுற்றுங்கள் என்போரும், சென்னி

துணிக்க, என்பாரும் ஆகி - தலையை வெட்டுங்கள் என்று சொல்லுவோருமாய், உற்றனர் நூறுயிரர் அரக்கர் - அடைந்தவர்களான லட்சத் தரக்கரும், உருத்து உரைக்கல் உற்றார் - கோபித்துச் சொன்னார்கள். எ - று.

வி - கு : அவருரைத்தன அடுத்த செய்யுளில் வரும். எற்ற முதலிய ஆறும் வியங்கோள் வினைமுற்று. உற்றனர் என்பது வினைமுற்று லணையும் பெயர். நூறுயிரர் உற்றனர் என முடித்து, அவர் என ஒரு எழுவாய் தோற்றி உரைக்கலுற்றார் என முடித்தலும் ஒக்கும்.

91. " இந்திரன் முதலாவுள்ள............' ப - ரை : இந்திரன் முதலர் உள்ள இமையவர் தாமும் - இந்திரனைத் தலைவனாக உடைய தேவர்களும், கந்தம் வான் இந்த சோலை - மணம் பொருந்திய சிறந்த இச் சோலையை, கண்ணால் நோக்கவும் கருதி நைவார் - கண்ணாற் பார்த்தலையும் நினைத்து (முடியாமையால்) வருந்துவர், (அவ்வாறாக) மதி இலாத மானுடா - புத்தி இல்லாத மனிதனே, வந்தது என் - நீ வருதலுக்குக் காரணம் யாது?, உன் தன் ஆவி சிந்து முன் செப்புக என்னா - உன்னுயிரைக் கொன்றொழிக்குமுன்பே சொல்லுவாயாக என்று கூறி, தீயோர் எல்லாம் - கூடிநின்ற துஷ்டர்களான அரக்கர் எல்லாரும், தெழித்தனர் - உரப்பினார்கள். எ - று.

வி - கு : தங்காவலருமை கூறி அதட்டினர். வந்தது முற்றுத் தொழிற்பெயர். தெழித்தல் - உரப்பிக் கேட்டல் - சினக்குறி காட்டல்.

92. " அருளிலா வரக்கர்............" ப - ரை : அருள் இலா அரக்கர் - அருட்பண்பு இல்லாதவர்களான அரக்கர்கள், இவ்வாறு அகங்கரித்து அரற்றும் பொருள் இலா இந்த உரைகட்கு எல்லாம் - இவ்வாறு கர்வங்கொண்டு புலம்புகின்ற பயன் இல்லாத இச் சொற்களுக்கு எல்லாம், உத்தரம் புகலான் ஆகி - மறுமொழி கூறாதவனாய், முன்னம் தெருள் இலா மதனை எரித்திடும் சிவனை போல்வான் - முன் நாளில் அறிவுத் தெளிவில்லாத மன்மதனை (தமது நெற்றிக் கண் பார்வையினாலே) எரித்தருளிய சிவபெருமானை ஒத்தவனா

கிய வீமன், இருள் இலா முத்தம் அன்ன எயிறு அரும்பு இலங்க நக்கான் - ஒளி மொருந்திய முத்துப் போன்ற பற்கள் சிறிது ஒளி வீசும்படி சிரித்தான். எ - று.

வி - கு : வீமன் முன் அவருரை பயனில வாதலின் 'அரற்றும் பொருளிலா உரை' என்றார். சிவனை உவமை கூறியதால் நகை கோபநகை என அறிக.

மதனன் எரிந்தது: சூரன் முதலிய அசுரர் புரியும் இன்னல் தாங்காத தேவர்கள், தங்குறையை முறையிடச் சிவனிடம் போந்தனர். அப்போது தியான மூர்த்தியாயிருந்த சிவனுடைய மனத்திலே இச்சை யுண்டாக்க வேண்டி, மன்மதனை ஏவினர். அவன் தன் கரும்பு வில்லில் மலர்ப்பாணம் தொடுத்தான். அதனால் வெகுண்ட சிவன் தமது நெற்றிக் கண்ணால் அவனை நோக்கி அவனுடலை எரித்து, அவன் ஆன்மாவுக்கு அருள் செய்தார்.

93. "தனித மேகம் போல்............' ப - ரை : மேகம் தனிதம் போல் ஆர்க்கும் நமது உயிர் - மேகத்திலுள்ள இடியேற்றைப் போல ஆரவாரஞ் செய்கின்ற உங்கள் உயிரை, சரத்தின் சாய்த்து - எனது அம்பினாலே அழித்து, இ புனித வான் பொழிலில் - இந்தப் புனிதமான சிறந்த சோலையில், வாச புதுமலர் கொய்ய வந்தேன் - நறுமணமுடைய புதிய பூக்களைக் கொய்வதற்கு நான் வந்தேன்; குனி தவர் கொண்டு - வளைத்த வில்லை ஏந்திக் கொண்டு; முன் - முன் நாளில், நும் குலம் கரிசு அறுத்த வீரன் - உங்கள் அரக்கர் குலத்தை நும் பாவத்தோடே ஒழித்த வீரனான இராமன், மனிதனோ வான் உளானோ - மனிதன் தானோ? அன்றித தேவனோ?, மறத்திரோ என்றான் - (இதற்கிடையில்) மறந்து விட்டீர்களோ? என்று வீமன் சொன்னான். எ - று,

வி - கு : பட்ட வடுப் பெரிதாகலின் மறவாமை யுண்டே, அதனால் 'மறத்திரோ' என்றான்.

அநுமான் அசோகவனத்தில் சீதையைக்கண்டு, இராவணனுடன் தூது பேசி இலங்கை தீயிட்டு மீண்டபின், ஸ்ரீ இராமன் வானரச் சேனையுடன் இலங்கையிற் புக்கு இராவணனாதியோரைக் கொன்று அவர் பழியும் தொலைத்தான். முன் கரதூஷணாதியரைக் கொன்றமையுங் கருதுக.

94. ‘‘மாவிந்த மனைய............’ ப - ரை : மா விந்தம் அனைய பொன் தோள் மாருதி வாய்மை கேட்டு - பெரிய விந்தய மலைபோலும் அழகிய தோளையுடைய வீமன் சொல்லிய வற்றைக் கேட்டு, நீயோ இந்த வனத்தில் பூ பறித்தி என்று - நீதானோ இச் சோலையில் மலர் கொய்வாய் என்று சொல்லி, அழன்று பொங்கி - (அவ் வரக்கர்) கோபித்துக் கிளர்ந்து, இந்த உரை தந்த நரனுக்கு இன்னும் நா இருப்பதோ என்னு - இவ் வார்த்தைகளைச் சொல்லிய மனிதனுக்கு இன்னும் (சொல்லிய) நாக்கு இருப்பது தகுதியோ என்று, கோவிந்தன் எடுத்த குன்றில் கொண்டலின் - ஸ்ரீ கிருஷ்ணன் குடையாகத் தூக்கிய (கோவர்த்தனம் என்னும்) மலையிற் சூழ்ந்த முகில்களைப் போல, குழாத்தில் மொய்த்தார் - ஒன்று கூடி (வீமனை) மொய்த்தார்கள். எ - று.

வி - கு : இந்த உரை தந்த நா இன்னும் நரனுக்கு இருப்பதோ என்றும் உரைக்க. பறித்தி - முன்னிலை ஒருமை எதிர்கால வினைமுற்று; இகர விகுதி காலங்காட்டிற்று. சொல்லியவாறே முடிக்கும் அவன் ஆற்றலை விளக்க அவன் சொல்லை ‘வாய்மை’ என்றார்.

போகிப் பண்டிகையில் இந்திரனைக்குறித்து ஆயர் நிவேதித்தவற்றை, அவ் வாயர் சேரியில் தலைவனான நந்தகோபன் மனையில் வளர்ந்த கண்ணன் தடுத்துத் தான் உண்டான்; அதனால் வெகுண்ட இந்திரன் அவர் சேரியில் சப்த மேகங்களையும் நிரைத்து நின்று மழை பொழிய ஏவி விட்டான். அப்போது கண்ணன் கோவர்த்தன மலையைத் தூக்கிக் குடையாகப் பிடித்து ஆயரையும் ஆனிரைகளையும் காப்பாற்றினான்.

95. ‘‘வானக மறைய வீசி............’ ப - ரை : வால சேனனே முதலா உள்ள சேனையின் தலைவர் - வால சேனனை முதலாக உடைய சேனைத் தலைவர்கள், வான் படைக்கலங்கள் வான் அகம் மறைய வீசி ஆர்த்தார் - சிறந்த ஆயுதங்களினால் ஆகாயம் மறையும்படி (அவற்றை) வீசி ஆரவாரித்தார்கள்; (அப்பொழுது), கான் உடை தொடையலானும் - வாசனையுடைய மாலையை அணிந்தவனும், சலிப்பு இலாதான் - போரில் இளைத்தல் இல்லாதவனும் ஆகிய வீமன், காலனுக்கு ஆவி அன்ன தான் உடை தண்டம்

ஏந்தி, யமனுக்கு அவனுயிரை ஒத்த தன்னுடைய தண்டாயுதத்தை ஏந்திக் கொண்டு, புகுந்தனன், அவ் வரக்கர் குழாத்துட் புகுந்தான். எ - று.

96. "தண்டினலவர்கள் விட்ட............' ப - ரை : அவர்கள் விட்ட படை எலாம் தண்டினல் தகர்த்து, அவ் வரக்கர் குழாம் ஏவிய படைக்கலங்களை எல்லாம் தனது கதாயுதத்தினலே நிர் மூலஞ் செய்து, உழுவை கண்ட வாள் உகிர் மடங்கல் ஒப்பான, புலிகளைக் கண்ட கூரிய நகங்களை உடைய சிங்கத்தை ஒத்தவனுன வீமன், மீள மண்டினன், மறுபடியும் அவர்களை நெருங்கினன்; (அப்போது), மிண்டினர் உடலம் யாவும், தன்னை நெருங்கியவர்களின் உடம்புகளை எல்லாம், தலை தம்மின் மெய் ஒன்றக் கிண்டினன், தலைகளிலே உடம்புகள் பொருந்து மாறு கிளறினன்; (அதனல்), மூளைச் சேற்றில் படுத்து கிடத்தினன், மூளையாகிய சேற்றிலே (அவ் வுடம்புகளை) வீழ்ந்து கிடக்கச் செய்தான். எ - று.

வி - கு : மன், ஓ அசை,

97. "தாககினன் சிலரை............' ப - ரை : வீமன், சிலரைத் தண்டால் தாக்கினன், (எதிர்ந்த அரக்கருட்) சிலரைத் தனது கதாயுதத்தால் மோதினன்; சிலரை, தடகையால் வானில் தூக்கினன், விசாலித்த கைகளினல் வாரி ஆகாயத்தில் வீசினன், சிலரை, நின்று கறங்கின் சுழற்றினன், நிலைத்து நின்று காற்றாடிபோலச் சுழற்றினன்; சிலரை, எற்றி நூக்கினன், தூக்கி எறிந்து கொன்றான்; சிலரை, தாளால் நொறுக்கினன், பாதங்களால் மிதித்துத் துகளாக்கினன்; சிலரை, வாளால் வீக்கினன், வாளால் வெட்டிக் கொன்றான்; சிலரை, ஆவி வேறு இட்டான், உயிர் வேறாகும்படி பிரித்தான். எ - று.

98. "பிடித்தனன் சிலரை............' ப - ரை : சிலரைப் பிடித்தனன், சிலரை, அள்ளி பிசைந்தனன், இருகைகளாலும் அள்ளிப் பிசைந்தான்; சிலரை மண்ணில் அடித்தனன், சிலரை, அங்கம் அசைந்தனன், உறுப்புக்களைக் குறைவு படுத்தினன்; சிலரை, எண்ணம் முடித்தனன்,

(அவர்களுடைய) எண்ணங்களை இல்லாமற் செய்தான், சிலரை, போக முகிழ்த்தனன் - உயிர் போம்படி (கை முஷ்டியால்) மொத்தினுன்; சிலரை, கண்டம் ஒடித்தனன் - கழுத்தை முறித்தான்; சிலரை, அஞ்ச உறுக்கினன் - அஞ்சும்படி உரப்பினுன், எ - று.

99. "கரக் கழுந்ததனினுனும்............' ப - ரை: கர கழுந்து அதனினும் - கையாகிய மரவைரத்தாலும், கனம் வரை தோளினும் - முகில் படிந்த மலை போன்ற தோளினும், வர கொடும் கதையினும் - சிறந்த கொடிய கதாயுதத்தினுலும், மரா மரம் பணையினும் - திரண்ட மராமரத்தினுலும், உரகடும் காலினும் - வலிய கடிய காலினும், ஒருக்கினுன் - (வீமன் அரக்கரை) அழிவு செய்தான்; உரைப்பது என் - சிறந்து சொல்ல வேண்டியது என்ன?, அநுமன் பின்னேன் - அநுமானுடைய தம்பியாகிய வீமன், அரக்கர் என்றால் பின்னை விடுங்கொல் - எதிர்ந்தவர் அரக்கராயிற் பின் உயிர் எஞ்ச விடுவானே? எ - று.

வி - கு: வினு இன்மை குறித்து அரக்கரை என்பதில் ஐ சாரியை. அரக்கர் குல நாசகாரியான அநுமனுக்குத் தம்பியாதலின் அவன் பகைமையும் பெரிதெனக் கொண்டு கூறியவாறு. பணை மராமரம் எனமாற்றுக. பணை - கொம்பருமாம்.

100. "இப்படிக் கெதிர்ந்த............' ப - ரை: இப்படிக்கு - இவ்வாறு, எதிர்ந்த சேனை யாவையும் - தன்னை எதிர்த்து வந்த அரக்கர் சேனை முழுவதையும், இமைக்கும் முன்னம் - ஒரு கண்ணிமைப் பொழுதினுள், துப்புடன் தொலைத்து - அவர் உயிரையும் அவர் வலியோடே சேர்த்தழித்து, வாயு சுதன் நின்ற உறுதி நோக்கி - வாயு புத்திரனுகிய வீமன் நின்ற மனவுறுதியைப் பார்த்து, பின்னும், மை படி வரைகள் போல்வார் வாள் எயிற்று அரக்கர் நூருயிரவர் - மேகம் படிந்த மலைகளை ஒத்தவரான ஒளிவிடும் (கடைவாய்ப்) பல்லினையுடைய அரக்கர்கள் ஒரு லட்சம் பேர், கை படை கொண்டு ஒரு கணத்தில் சூழ்ந்தார் - கைகளிலே ஆயுத மேந்திக் கொண்டு ஒரு கணப் பொழுதினுள்ளே வீமனைச் சூழ்ந்தார்கள். எ - று.'

வி . கு : இமை, கணம் என்பன சிறு கால அளவு காட்ட வந்தன. உறுதி, மனங் கலங்காமை. இப்படிக்கு, 'கு' சாரியை.

101. "அவர் வெகுண்டழன்று............' ப . ரை : அவர், அவ் வரக்கர் குழாம், வெகுண்டு அழன்று, கோபித்துச் சீறி, அலை கடல் போல மேல் மேல் ஆர்த்து, அலையெறியும் கடலைப்போல மேலும் மேலும் ஆரவாரித்து, பவர் கொண்ட பல் நகம் என்ன, நெருங்கி வருகின்ற பல மலைகளைப்போல, சூழ்வரும் பரிசு, தன்னை மொய்க்கின்ற தன்மையை, கவர் கொண்ட தொடையலான் பாரா, மனம் கவருகின்ற மாலையை யணிந்த வீமன் பார்த்து, கதை ஒழிந்து, தன் கதாயுதத்தை விட்டு, இலங்கு செம் கை தவர் கொண்டு, விளங்குகின்ற சிவந்த கையிலே வில்லை ஏந்தி, அண்டம் தகர்தர தழங்க, உலகமெல்லாம் அதிரும்படி ஒலிக்க, நெடு நாண் ஆர்த்தான், அவ் வில்லின் நீண்ட நாணினின்று ஒலி செய்தான். எ . று.

வி . கு : பவர், நெருங்குதல்; பல்+நகம்=பனகம்=பல மலை. மலை அரக்கர் தோற்றத்துக் குவமை. பாரா, செய்யா என்னும் வாய்பாட்டு இறந்த கால வினையெச்சம்.

102. "அன்ன நாணோதை.............' ப . ரை : அன்ன நாண் ஓதை, அந்த நாணொலியானது, எங்கும் அண்டமும் பொதுள தாக்க, எங்குமுள்ள உலகங்களையும் நெருக்கித் தாக்க, (அதனால்), மன்னும் நாகங்கள் எட்டும் மதம் புலர்ந்து உயங்கி வீழ, (எட்டுத் திக்குகளிலும்) பொருந்திய யானைகள் எட்டும் தம் மதநீர் காய்ந்து மயங்கி விழ, மண் சுமக்கும் கொற்றம் பன்னக அதிபனும், பூமியைத் தாங்குகின்ற வெற்றி பொருந்திய நாகாதிபனாய ஆதி சேடனும், வாய் துன்னும் நஞ்சு கக்கி சுழன்று உள்ளம் பதைத்து, வாயிற் பொருந்திய நஞ்சினைக் கக்கித் தலைசுற்றி மனம் பதைத்து, வெம் படங்கள் சோர்ந்தான், கொடிய படங்கள் சோர்வு அடைந்தான். எ . று.

103. "உரம்படச் சரங்கள்.............' ப . ரை : வேல் வீமன், வேற்போரில் வல்ல வீமன், உறுக்கி, உரப்பிக்

கொண்டு, உரம் பட சரங்கள் மேல் மேல் உந்த, தன் வலிமை தோன்றுமாறு அம்புகளை மேலும் மேலும் செலுத்த, (அவ் வம்புகள்), சிரங்களில் தோளில் மார்பில் கண்களில் சென்று செருக, (அரக்கர்களின்) தலைகளிலும் புயங்களிலும் மார்பிலும் கண்களிலும் போய் மாட்டிக் கொள்ள, முன்னம், முன் நாளில், காகுத்தன் கதிர்கொள் கூர் வாய் சரம் பட - ஸ்ரீ ராமனுடைய' ஒளிபொருந்திய கூரிய நுதியையுடைய அம்பு தைக்க, கரன் படைக் குழாம் (அத்து) தளர்ந்தது என்ன, கரன் என்னும் அரக்கனுடைய சேனையின் தொகுதி பின்னடைந்தமைபோல, அ தளர்வு இல் சேனை தளர்ந்தது - அந்தத் தளர்ச்சி யுறாத சேனையும் உறுதி குலைந்தது. எ - று.

வி - கு: வீமன் உந்திய சரம் சிர முதலிய வற்றிற் செருக சேனை தளர்ந்தது என்க. ககுத்தன் மரபிலே வந்தவன் காகுத்தன்.

தண்ட காரணியத்தில் ஸ்ரீ ராமனைக் கண்டு காமுற்ற சூர்ப்பணகை என்னும் அரக்கி, தன் கருத்தை வெளியிட, ராமன் அவளைத தடுத்து இலட்சுமணனிடம் அனுப்பினான். அவன் அவளுடைய முறையற்ற செயலையும் சீதையைக் கவர எண்ணுதலையும் அறிந்து அவள் மூக்கை அரிந்து விட்டான். அவள் தன் தம்பியராகிய கரன் தூஷணன் ஆதியோரை ஏவி இராமலட்சுமணருடன் போர் புரிவித்தாள். அப் போரில அரக்கர் அனைவரும் ராமபாணத்தா லழிந்தனர்.

104. "சக்கரம் சூலம்............' ப - ரை: அக் கணம் தன்னில் - அப்பொழுதே, யாவரும் மீண்டும் அகங்கரித்து, அவ் வரக்கர் எல்லாரும் மறுபடியும் ஊக்கங் கொண்டு, எக் கரங்களினும் - எல்லாக் கைகளிலும், சக்கரம்........குந்தம் ஏந்தி, சக்கர முதல் குந்தம் ஈறுகிய படைகளை ஏந்தி, இவன் மேல் ஏவி ஆர்த்த காலை, (அவற்றை) இவ் வீமன் மேல் ஏவி விட்டுச் சப்தித்த பொழுது, எ - று.

வி - கு: குளகம்; அடுத்த செய்யுளில் முடியும். சக்கரம் முதலியன ஆயுத விசேடம். கப்பணம் - இரும்பினால் செய்த நெரிஞ்சி முள் போன்ற ஆயுதம். முற்கரம் - இருப்புலக்கை. கணையம் - வளைதடி. விட்டேறு - எறிஈட்டி. குந்தம் - எறிவாள்.

105. "அப்படைத் தொகைகள்..........' ப / ரை : சிங்கம் போல்வான் / சிங்கத்தை ஒத்தவனான வீமன், அ படை தொகைகள் எல்லாம் அறுத்து அறுத்து / அவ் வரக்கர் ஏவிய படைக்கலங்களை எல்லாம் தடுத்து அழித்து, அவர்கள் தம் தம் மெய்ப் பட சரங்கள் சிந்தி / அவர்கள் எல்ல வரினதும் உடம்பிலே தைக்கும்படி அம்புகளைச் சிதறி, சிரங்கள் வெவ்வேறு (அது) ஆக்கி / தலைகளைத் தனித் தனி துண்டித்து, இப்படிக்கு அரக்கர் சேனை யாவையும் மீண்டும் துணித்து / இவ்வாறு அரக்கர் சேனை முழுவதையும் மறுபடியும் கட்டழித்து, செப்படிப்பவரின் நின்று சிரித்தனன் / செப்படி வித்தை செய்பவரைப் போல நின்று சிரித்தான். எ / று.

வி / கு : விநோதமாகச் செய்யும் விளையாட்டாகவே அப்போரை வீமன் முடித்தான் என்பது. அது: சாரியை. சிங்கம், ஆனைக் கூட்டத்து நடுவணுள்ள சிங்கம் என்க.

106. "அந்த வயப்படை..........' ப / ரை : கந்த மலர் பொழில் காக்கும் காவலாளர் / வாசனை பொருந்திய மலர் நிறைந்த அச் சோலையைக் காக்கின்ற காவலர், அந்த வய படை அவ்வாறு ஆதல் கண்டு / அந்த வலிய அரக்கர் படையானது அங்ஙனம் அழிதலைக் கண்டு, புந்தி மயக்கு உற நொந்து / அறிவு மயக்கம் அடைய வருந்தி, முந்தி ஓடி / விரைந்து ஓடிப்போய், நிகழ்ந்த எல்லாம் இயக்கர் பிரானுக்கு மொழிந்தார் / சோலையில் நடைபெற்ற சம்பவங்களை எல்லாம் இயக்கர் தலைவனான குபேரனுக்குச் சொன்னார்கள். எ / று.

107. "எம்பெருமானிது..........' ப / ரை : எம் பெருமான் இதுகேட்டி என்று இறைஞ்சி / எமது தலைவனே இதனைக் கேட்பாயாக என்று சொல்லி வணங்கி, வம்பு அவிழ் சோலையிடத்து / வாசனை விரிகின்ற சோலையிலே, ஓர் மனிதன் வந்து /, பம்பிய சேனை இடத்து / பரந்து நெருங்கிய எமது சேனையினுள்ளே, ஏழ் மதமும் பாயும் வாவி உம்பலின் புகுந்து / ஏழுவகை மத நீரும் பெருக வாவி (புக்குக் கலக்கும்) ஆண்யானை போலப் புகுந்து, உழக்குகின்றான் / (அதனைக்) கலக்குகின்றான். எ / று.

வி ‚ கு : என்று என மேற்றொடரும். மதம் பாயும் ஏழு இடம் : கன்னமிரண்டு, கண்ணிரண்டு, கைத்துவாரமிரண்டு, கோசமொன்று ஆக ஏழு.

108. "என்றவர் வாய்கை..............' ப ‚ ரை : என்று அவர் வாய் கை புதைத்து இசைத்தல் கேட்டு ‚ என்றிவ்வாறு அக் காவலர் தம் வாயைக் கையால் மறைத்துக் கொண்டு சொல்லுதலை (அளகேசன்) கேட்டு, குன்றுடன் ஒன்று புயம் குலுங்க நக்கு ‚ மலையோடொத்த தன் புயங்கள் அசையும்படி சிரித்து, கன்றிய சிந்தையன் ‚ கோபங் கொண்ட மனத்தினனாய், அங்கி கால் செங்கண்ணன் ‚ நெருப்பைக் கக்குகின்ற சிவந்த கண்களையுடையவனாய், ஒன்றிய மங்குலின் நீடு உருத்து உரைத்தான் ‚ இடி பொருந்திய மேகத்தைப்போல மிகக் கோபித்து (‚ உரப்பி) இவ்வாறு கூறினான். எ ‚ று.

வி ‚ கு : வாய் கை புதைத் திசைத்தல் பெரியோர் முன் மரபு. சிந்தையன், கண்ணன் என்பன எச்சமுற்றுக்கள்.

109. "தன்றுணை நின்ற...............' ப ‚ ரை ; தன் துணை நின்ற சங்கோடணனை நோக்கி ‚ (குபேரன்) தன் பக்கலில் நின்ற சங்கோடணன் என்னும் சேனைத் தலைவனைப் பார்த்து, சென்று ‚ நீ போய், வன் திறல் கூர் அடல் வேக மனிதன் தன்னை ‚ வலிய ஆற்றல் மிக்க கொலைத்தொழிலில் வேகம் பொருந்திய அம் மனிதனை, அவன் ஆவி செகுத்தல் செய்யாது ‚ அவனுடைய உயிரை அழிவு செய்யாமல், துன்று புயங்கள் துவைக்கி ‚ நெருங்கிய கைகளைக் கட்டி, இன்னே எய்த சொன்னான் ‚ இப்பொழுதே கொண்டு வருக என்று சொன்னான். எ ‚ று.

110. "அந்த வியக்கர்...............' ப ‚ ரை : அந்த இயக்கர் பிரானும் அக் கணத்தில் வந்து ‚ அந்த இயக்கர் தலைவனை சங்கோடணனும் அப்பொழுதே வந்து, நிதிக் கிழவன் தன் பாதம் மன்னி ‚ குபேரனுடைய பாதங்களை அடைந்து வணங்கி, துந்துபி கொட்ட ‚ துந்துபி வாத்தியங்கள் ஒலிக்கவும், அளப்பு இல் சேனை சூழ ‚ அளவில்லாத சேனை சூழவும், உந்தி ‚ அவற்றைச் செலுத்திக்

கொண்டு, தண் மலர் சோலை இமைப்பில் உற்றான் / குளிர்ச்சி பொருந்திய மலர்கள் நிறைந்த சோலையை இமைப் பொழுதினுள்ளே சென்றடைந்தான். எ / று.

வி / கு : நிதிக்கிழவன் / குபேரன் : சங்கநிதி பதும நிதியிரண்டுக்கும் உரிமையுடையவன்.

111. "மன்னு குருகுல............' ப / ரை : இயக்கர் குலத்தில் எண்ணும் தலைவர் / இயக்கர் சாதியில் சிறந்தவராக மதிக்கப்படும் சேனைத்தலைவர்களான, மின்னி முழக்கி இடிக்கும் மேகம் போல்வார் / மின்னலைச் செய்து ஒலித்து இடியேற்றை இடிக்கும் மேகத்தைப் போன்ற வீரர்கள் துன்னு படை கடலோடும் / தம்மை நெருங்கி வருகின்ற சேனை வெள்ளத்தோடு, மன்னுகுரு குலத்து மன்னர் மன்னன் தன்னை பொங்கி சூழ்ந்தார் / நிலைபெற்ற குருகுலத்தில் வந்த ராசாதிராசனான வீமனை கிளர்ந்து வளைத்தார்கள். எ / று.

வி / கு : குரு என்பவன் வீமனது முன் மரபிற் சிறந்த ஓர் அரசன். அதனால் அக்குலம் குருகுலம் என வழங்கும். படைக்கடல் : உருவகம்.

உருவகம் என்பது ஓர் அணி. அது உவமேயத்தை உவமானமாகவும் உவமானத்தை உவமேயமாகவும் கூறுவது. முகமதி என்பது போல.

112. "மான வரக்கர்............' ப / ரை : மான அரக்கர் குலத்தை வானில் ஏற்றி / (முன்னே) வீரம் பொருந்திய அரக்கரை அவர் குலத்தோடே வீரசுவர்க்கத்துக்கனுப்பி, ஊனொடு இரத்தம் உகுக்கும் சோலை ஊடு / (இறந்தவரின்) தசையும் இரத்தமும் சொரிந்து கிடக்கின்ற சோலையிலே, தானை வளைத்திட நின்ற சாப வீரன் / அரக்கர் சேனை சூழத் தனித்து நின்ற வில் வீரனாகிய வீமன, யானை இனங்கள் வளைக்கும் யாளி போன்றான் / யானைக்கூட்டங்கள் சூழத் தனித்து நிற்கின்ற யாளியைப் போல நின்றான். எ / று.

113. "விண்ணி லியக்கர்............' ப / ரை : எண்ணிலர் இயக்கர் / அளவில்லாதவர்களான இயக்கர்கள, படைக்கலங்கள் விண்ணில் வீசி / ஆயுதங்களை (வீமனைக்குறித்து) ஆகா

யத்தில் எறிந்து, சுற்றும் வளைத்து எதிர்ந்தபோதில் - நாற்புறமும் மொய்த்து எதிர்த்தபோது, வாயு மைந்தன் - வீமன், வண்ண வரி சிலை கோலி - அழகிய வரிந்து கட்டிய வில்லை வளைத்து, துண் என உட்க - துண்ணென்றஞ்சும்படி, வடி சரங்கள் தொட்டான் - கூரிய அம்புகளைத் தொடுத்து விட்டான், எ - று.

வி - கு : துண்ணென என்பது அச்சப் பொருளைத் தரும் ஒரு குறிப்பு இடைச்சொல்.

114. "தொட்ட சரங்கள்............" ப - ரை : தொட்ட சரங்கள் - வீமன் வில்விற் றொடுத்த அம்புகள், மார்பும் தோளும் துளைத்து - (இயக்கரின்) நெஞ்சையும் தோளையும் துளைத்து, விசும்பினது எல்லை எங்கும் முட்ட மூட - ஆகாயமாகிய இடம் எங்கும் நிறைந்து மூடுதலால், பட்டது ஒழிந்து - அழிந்த சேனை தவிர, படாத சேனை எல்லாம் கெட்டன - அழியாது நின்ற சேனைகள் எல்லாம் தங்நிலை கெட்டோடின; பட்டது கேட்கின் உரைக்க உண்டோ - இறந்த சேனைகளின் அளவு கேட்கின் சொல்லுவதற்கு எண்ணும் உளதோ ? எ - று.

வி - கு : பட்டது உரைக்க என்பதற்கு பட்ட( - அநுபவித்த) துன்பத்தைச சொல்ல என்றும் உரைக்க. ஒழிய என்னும் செய என்னும் வாய்பாட்டு வினையெச்சம் ஒழிந்து எனச் செய்து வாய்பாட்டு எச்சமாகத் திரிந்து நின்றது.

115. "மன்னளகாபதி............" ப - ரை : மன் அளகாபதி சேனை நாதன் மார்பில் - தலைவனான குபேரனது சேனைத் தலைவனாகிய சங்கோடணனுடைய மார்பிலே, தன் அடையாளம் உற - வீமன் தனது அடையாளம் பதியும்படி, தண்டாலே தாக்க - கதாயுதத்தாலே அடிக்க, தன் எதிர் வீரர் இலாத சங்கோடணன் - தனக்குச் சமானமான வீரர் பிறர் இல்லாத சங்கோடணன், மின் இடை நாகம் வெருகொண்டென்ன மீண்டான் - மின்னலின் பொழுது நாகமானது அஞ்சினாற்போல அஞ்சிப் பின் திரும்பினான். எ - று.

வி - கு : தான் : வேண்டாவழிச் சாரியை வந்தது.

116. "கருத்தொடு சென்று..............' ப , ரை : கருத்தொடு சென்று , (சங்கோடணன்) புண்பட்ட மனத்தோடு மீண்டு சென்று, அளகேசன் பாத கமலம் சிரத்தினில் வைத்து - குபேரனுடைய பாததாமரைகளைத் தன் தலையிற் கொண்டு வணங்கி, நின்று -, இவை செப்பல் உற்றான் - இவற்றைச் சொன்னான்; மன்ன - அரசனே, உருத்திரன் மானுட உருவம் கொண்டது அன்றேல் - (சர்வ சங்கார மூர்த்தியாகிய) உருத்திரன் மனித உருவம் கொண்டமை அல்லாமல், வரத்து இவன் மானுடன் அல்லன் - வரத்தினையுடைய இவன் மனிதனே அல்லன்; என்று - என்று கூறி, (மேலும் சொல்லுவான்.) எ - று.

வி - கு : அழிக்குந் தொழில் கொண்டு உருத்திரனைக் கூறினர். அன்றேல் : எதிர்மறைப் பெயரெச்சம்.

117. "பண்புடனிக்கணம்..............' ப - ரை : மெய்யில் புண் புக உட்கி உழைக்கும் வேழம் போல்வான் - உடம்பிலே புண் உண்டாக அதனால் மனம் துணுக்குற்று வருந்தும் யானை போன்றவனான சங்கோடணன், வேந்த - அரசனே, இக்கணம் பண்புடன் அவற்கு எதிர் சென்று - இப்பொழுதே சமாதான குணத்துடன் அவனுக்கு முன்னே சென்று, வேண்டும் நிதிகள் பலவும் நண்பொடு நல்காய் என்னில் - அவன் விரும்பும் செல்வம் பலவற்றையும் நட்புரிமையுடன் அவனுக்குக் கொடாய் ஆயின், இப் புரம் விண் புகும் என்றான் - இவ் வளகாபுரியானது சுவர்க்கத்தையடையும் என்றான். எ - று.

வி - கு : புரம் என்பது இடவாகுபெயராய் மக்களையும் உணர்த்தும்; அதனால் விண் வீரசுவர்க்கம் என்றுரைக்க.

118 "கோதிலியக்கன்..............' ப - ரை : கோதுஇல் இயக்கன் கூற யாவும் கேட்டு - குற்றமில்லாதவனான சங்கோடணன் சொல்ல அவை முழுவதையும் கேட்டறிந்து, உருத்திரசேனன் தன்னை தாதை நோக்கி - உருத்திரசேனனை அவன் தந்தையாகிய குபேரன் பார்த்து, மாதர் மலர் பொழில் ஊடு வந்த மனித்தன் - அழகிய மலர்கள் நிறைந்த சோலையிலே வந்த மனிதன், எதில் அருத்தியன் என்ன

கேட்டி என்றான், எப்பொருளில் ஆசையுடையன் என்பதைக் கேள் என்று சொன்னான். எ, று.

வி, கு: ஊடு என்பது இடை என்னும் பொருளில் ஏழனுருபு.

119. "தந்தை யுரைத்தருள்............' ப, ரை: தந்தை உரைத்தருள் வாய்மை, தன் தந்தை (-குபேரன்) சொல்லிய ஆணையை, மைந்தனும் தலைமேற் கொள்ளா, மைந்தனை உருத்திரசேனன் தன் தலைமேற் கொண்டு, அபொழில் ஊடு சென்று மன்னி, அச் சோலையின் கண்ணே சென்றடைந்து, அரக்கர் சிரங்கள் சிந்தி குன்றம் செய்து, தன்னை எதிர்த்த அரக்கரின் தலைகளை வீழ்த்தி மலைபோற் குவித்து, கந்தனின் நிற்கும் மறத்தினானை கண்டான், முருகக் கடவுளைப்போலத் தனி நிற்கின்ற மற (-கொலை)த் தொழிலுடையவனாகிய வீமனைக் கண்டான். எ, று.

வி, கு: தம் மறக் கருணையால் அவுணர் குலமழித்துச் சூரனுதியர்க் கருளிய முருகனைத் தொழில் பற்றி உவமை கூறினார். மறம், வலி, வீரமுமாம். அறத்தினான் எனக்கொண்டு தீயோரை யழித்தலாய அறத்தினை உடையவன் எனவுங் கூறுப.

120. "கண்டு மருத்தருள்............' ப, ரை: மருத்து அருள் காளை தன்னை கண்டு, வாயுதேவன் (குந்தி தேவியிடத்துப்) பெற்ற காளையாகிய வீமனை உருத்திரசேனன் கண்ணாற் கண்டு, நோக்கி, அவனைப் பார்த்து, வண்டு மிடைப் பயிலாத காவில் வந்து, வண்டுகளும் நெருங்கிப் பழகுதல் இல்லாத இச் சோலையில் வந்து, மிண்டும் அரக்கர் குலத்தை வீணே ஆவி கொண்டு படுத்தனை, காவலில் எதிர்ந்த அரக்கர் கூட்டத்தை வீணாக உயிரைக் கவர்ந்து கொண்டு அவருடலை நிலத்தில் வீழ்த்தியவனே, நீ யார், கூறுக என்றான், சொல் என்று வினவினான். எ, று.

வி, கு: காணலும் நோக்கலும் பொருள் வேறுபாடுடையன. வண்டும் இடை எனப் பிரித்தும் கூறுப. படுத்தனை, வினையாலணையும் பெயர்; விளியுருபேற்றது; முற்றாகவும் உரைப்பர்.

121. "நின்னளகாபதி............" ப - ரை : நின் அளகாபதி மைந்தர் சாபம் நீக்க - உனது அளகேசனான குபேரனின் புத்திரர் இருவருடைய சாபத்தை நீக்குவதற்கு, முன் - முன் நாளில், மருது ஊடு தவழ்ந்த வாகை மொய்ம்பற்கு - இரு மருதமரங்களின் நடுவே (உரலுடன்) தவழ்ந்தருளிய வெற்றி பொருந்திய புயங்களையுடைய ஸ்ரீ கிருஷ்ணனுக்கு, இன் அருள் மைத்துனன் - (அவனது) இனிய அருளைப் பெறும் மைத்துனனுமேவன்; மண்ணில் யாரும் போற்றும் மன்னவன் - பூமியில் எல்லாரும் புகழ்ந்து சொல்லும் அரசனுமேவன்; வீமன் - (என் பெயர்) வீமன்: மருத்தின் மைந்தன் - (யான்) வாயு தேவனின் புத்திரன்; என்றான் - எ - று.

வி - கு : தன்னை யறியாரிடைத் தற்புகழ்தல் குற்றமாகாமையின் இவ்வாறு தன் துணைவலியும் தன்வலியும் குலவலியும் கூறினான்.

நளகூபரன் மணிக்கிரீவன் என்னுமிருவர் குபேரனுடைய மைந்தர்; அவர் ஒருநாள் ஒரு தடாகத்தில் கிர்வாணிகளாகச் சலக்கிரீடை செய்யக் கண்ட நாரத முனிவர் சினந்து மருதமரங்களாகக் கடவிர் எனச் சபித்தனர். அதனால் அவ்விருவரும் இரட்டை மருதுகளாக, கண்ணன் வளர்ந்த நந்தகோபன் மனைக்கருகே நின்றனர். அந்நாளில், கண்ணன் செய் குறும்பு பொறாத யசோதை அவனை ஓர் உரலுடன் சேர்த்துக் கட்டிவைத்தாள். கண்ணன் அவ்வுரலையும் இழுத்துக் கொண்டு அவ் விரட்டை மருதினூடு தவழ்ந்தான்; அப்போது அம் மருது சாய்ந்து குபேரபுத்திரர் சாப நீங்கிக் கண்ணனருள் பெற்றனர்.

122. "மாயவனற் புதன்............" ப - ரை : ஐய -, நீ -, மாயவன் அற்புதன் நாதன் கண்ணன் வையந்தாயவன் மைத்துனன் ஆகின் - கிருஷ்ணனும் பல அற்புதங்களைச் செய்தவனும் தலைவனும் கண்ணனும் பூமியை (ஓரடியால்) அளந்தவனுமாகிய ஸ்ரீ கிருஷ்ணனுக்கு மைத்துனனாயின் ஏய வனத்தினில் - (காவல்) பொருந்திய இச் சோலையிலே, தனி வந்தது என்கொல் என்றான் - தனியே வந்தமைக்குக் காரணம் யாது என்று கேட்டான்; (அப்பொழுது); தூயவன் - மனப் பரிசுத்தனான வீமன், உற்றன யாவும் தோன்ற சொன்னான் - நிகழ்ந்தன எல்லாவற்றையும் விளங்கச் சொன்னான். எ - று.

வி - கு : தங்குலத்துக் கவன் செய்த பயன் கொண்டு பல பெயர் கூறினன். மாயம் - கறுப்பு வையந்தாயது, மாபலிச் சக்கரவர்த்தியிடம் மூன்றடி மண் இரந்து பெற்ற போது. உற்றன: வினையாலணையும் பெயர்.

123. "மற்றவ னவ்வுரை..............' ப - ரை : அவன் அவ் உரை கூற - வீமன் அவ் வரலாறுகளைச் சொல்ல, வெற்றி உருத்திரசேனன் - வெற்றியுடைய உருத்திரசேனன் என்பவன், மகிழ்வோடு - மன மகிழ்ச்சியோடு, அம் தண் பொன் தரு நண்பின் வழங்கி - பூக்களாற் பொலிந்த குளிர்ச்சி பொருந்திய அழகிய (- அவன் விரும்பிய பூக்கள் நிறைந்த) மரத்தை நண்புரிமையோடு கொடுத்து, போக என்று அருளி - சென்று வருவாயாக என்று விடை தந்து, மீண்டு வந்து - திரும்பித் தந்தையிடம் வந்து, ஆங்கு உற்றது தாதை தனக்கு உரைத்து இருந்தான் - அங்கே நிகழ்ந்தவற்றைத் தந்தையாகிய குபேரனுக்குச் சொல்லி அவனோடு இருந்தான். எ - று.

வி - கு : திரௌபதி கண்டது வனசமலராகவும், விரும்பியது அம்மலர் போன்ற மலராகவும், அது பெற விரும்பிய வீமனுக்கு உரோமசரும் அநுமானும் கூறியன அளகாபுரிச் சோலையில் பெறும் தரு மலராகவும் முன் கூறப்பட்டனவும் இங்கு சிந்திக்கத் தக்கன; மற்று வனச மலர் ஒன்றையே கருதிச் சிலர் பல இடங்களிலும் பொருள் வலிந்து கொள்வர். ஈண்டும் தரு வழங்கினன் என்பதற்கு மலர்தரு வழங்கினனெனவே வனசமலர் வழங்கினன் என்பது தானே பெறப்பட்டது எனவும் கூறுப. 'போக' வியங்கோள் வினைமுற்று; ஈற்று அகரம் தொக்கது.

124. "அண்ணற் றருப் பெற்ற..............' ப - ரை : அந்த வய மீளி - அவ் வெற்றி வீரனாகிய வீமன், அண்ணல் தரு பெற்ற பின் - சிறந்த (பூக்கள் நிறைந்த) விருட்சத்தைப் பெற்ற பின்பு, அக் காவினில் - அச் சோலையில், தண் நித்தில பொய்கை படிவுற்று - குளிர்ந்த முத்துப் போற் றெளிந்த (நீரையுடைய) தடாகத்திலே நீராடி, இன் அமுது அன்ன தண்ணீர் குடித்து - இனிய அமிர்தம் போன்ற தண்ணீரைப் பருகி, மண்ணுக்கும் விண்ணுக்கும்

மறலிக்கும் உறவான வடி வாளினான் - மனிதருக்கும் தேவருக்கும் யமனுக்கும் துணை செய்வதான கூரிய வாளையுடைய வீமன், அங்கு எண் அற்ற கழுது ஆடல் அது கண்டு - அந்த யுத்த பூமியில் அளவில்லாத பேய்களின் கூத்தைப் பார்த்துக் கொண்டு, இருந்து இளைப்பாறினான் -, தன் சோர்வு தீர இருந்தான் எ - று.

வி - கு : நல்லோர்க்குத் துணை செய்யும் வாள் என்பது குறிப்பு. பரணி பாடும் பெரும் போர் நிகழ்ந்த இடத்திலே ஊனும் உதிரமும் உண்ண வந்த பேய்கள் கூத்தாடுதல் மரபு. அதனால் வீமன் போரின் பெருமையும், அவ் வாடல் கண்டு சோர்வு தீரலால் யாண்டும் அவன் அரசனே என்பதும் கூறியவாறு.

125. "இவ்வாறிவன் செய்கை............' ப - ரை : இவன் செய்கை இவ்வாறு - இவ் வீமன் செயல் இவ்வாறாக, இவன் வந்தது அறியாமல் - வீமன் இங்கே வந்தமையை அறியாமல், எழில் கூர் வனத்து - அழகுமிக்க (சாந்தர்ப்ப மலைக்) காட்டிலே, அ ஆறு பயில்கின்ற அருள் வாரி தான் உற்ற அது கூறுவாம் - அழகிய தரும நெறியில் ஒழுகுகின்ற அருட் கடலாகிய தருமராசன் அடைந்த நிலைமையை இனிச் சொல்லுவோம்: வார் கை கதை காளையை சூழல் கண்ணுற காணாது - நீண்ட கையிலே கதாயுத மேந்திய காளைபோன்ற வீமனை அயலிலே கண்ணிற் படக் காணாமல், முன் நின்றாள் செவ்வாய் மட பாவையை - தன் முன்னே நின்றவளான சிவந்த வாயும் இளமையும் உடைய பாவை போன்ற திரௌபதியை, நீ கூறு என செப்பினான் - (வீமன் யாண்டுளன் என்பதை) நீ சொல்லுவாயாக என்று கேட்டான். எ - று.

வி - கு : அருள்வாரி காளையைக் காணாது முன் நின்றாளை நீ கூறு எனச் செப்பினான் எனப் பொருள் முடிபு. அவள் முகக் குறிப்புக் கொண்டு அவளை வினவினான். அவ்வாறு : 'எம் முகமும் தம் முகமா விலையும் காயும் இனிய கனியுடனருந்தி' (11) யிருந்தவாறுமாம்.

126. "வானின்று மலரொன்று............' ப - ரை : கான் நின்ற குழலாள் - வாசனை பொருந்திய கூந்தலையுடைய

வளான திரௌபதி, மன்னற்கு முன் - தருமராசனுக்கு முன்னிலையில், மலர் ஒன்று வான் நின்று மின்போல தன் முன்பு வந்துற்றதும் - ஒரு மலரானது ஆகாயத்திலிருந்து மின்னலைப் போலத் தன் முன் வந்து வீழ்ந்தமையும், தான் நின்று, தான் வீமன் முன் போய் நின்று, இம் மலர் போல மலர் தேடி இன்று நீ தருக என்றதும் - இம் மலரைப் போல உள்ள மலரைத் தேடிக் கொண்டு வந்து இன்றைக்கு நீ தருக என அவனுக்குச் சொன்னமையும், தேன் நின்ற தொடையானும் - தேன் தங்கிய மாலையை யணிந்த வீமனும் (உடனே), அளகேசன் நகர் மீது தனி சென்றதும் - குபேரனது நகரமாகிய அளகாபுரிக்குத் தனியே சென்றமையும், (ஆகிய எல்லாவற்றையும்), கட்டுரைத்தாள் - உறுதியாகச் சொன்னாள். எ - று.

வி - கு: உற்றது, என்றது, சென்றது ,என்பன முற்றுத் தொழிற் பெயர்கள். அரோ - அசையிடைச் சொல்.

127. "கருமத்தின் வடிவான..............' ப - ரை: கருமத்தின் வடிவான மட மங்கை இவ்வாறு கழறுத முன் - (மலர் பெறுதலாகிய தன்) கருமத்தினையே (புறத்திற் றோன்றும்) வடிவாக உடைய இளம் பெண்ணாகிய திரௌபதி இவ் வரலாறு கூறி முடியா முன்னே, தருமத்தின் உருவாகிய - தருமமே வடிவு கொண்டவனைய், எழுபாரும் நிலையிட்ட தனி ஆண்மையான் - ஏழு தீவுகளிலும் நிலை நிறுத்திய ஒப்பற்ற வீரத்தை யுடையவனான தருமன், உருமுதுவசன் மைந்தன் முன் போக - இடியேற்றின் கொடியை யுடைய இந்திரனுடைய புதல்வனான அருச்சுனன் முதலிற் றவஞ் செய்யப் போதலால், அன்போடும் உளம் நொந்துளான் - அன்பினால் மனம் வருந்தியிருந்தான் (ஆதலின்), மருமத்து வேல் தைத்த புண்மீது - நெஞ்சிலே வேல் தைத்து உண்டாகிய புண்ணிலே, கனல் உற்றது என மாழ்கினான் - நெருப்பு நுழைந்ததுபோல மிக வருந்தினான். எ - று

வி - கு: அருச்சுனன் பிரிவினால் வந்த துன்பமாறு முன் வீமன் பிரிவு நிகழ்ந்தமையின் துயர் மிகுதி பற்றி 'வேல் தைத்த புண்ணிற் கனல் நுழைந்தாற்போல' என்னும் உலகமொழி கூறப்பட்டது. எழுபார் - பூமி.

128. "வாளிப் பரித் தேர்மன்............' ப - ரை : வாளிப் பரித் தேர் மன் இவ்வாறு துயர் எய்தி, (வில்லிற் றெறிக்கும்) அம்புபோற் செல்லும் குதிரைகள் பூட்டிய தேரை யுடைய தருமராசன் இங்ஙனம் துன்பமடைந்து, மனஞ் செய - (கடோற்கசன் பெயரைப்) பன்முறை உச்சரிக்க, வீமன் தரும் காளை - வீமன் (இடிம்பி வயிற்றில்) பெற்ற காளை போன்ற கடோற்கசன், கொடித் தேரின் மேல் - கொடிகட்டிய தேரின் மீதேறி. கூளிக் குழாம் வானின் மிசை உய்த்தது என்ன - பேய்களின் கூட்டம் ஆகாயத் திலே அத் தேரைக்கொண்டு செலுத்தியதென்னும்படி, காளக் கரும் கொண்டல் போல முன் வந்து - மிகக் கரிய முகில் போலத் தருமன் முன் வந்தடைந்து, ஆளி பெரும் கொற்றம் வெற்றி திரு தாதை அடி மன்னினன் - சிங் கேற்றின் பெரிய வெற்றிபோலும் வெற்றியையுடைய அழகிய (பெரிய) தந்தையாரின் பாதங்களை வணங்கினன். எ - று.

வீமன் இடிம்ப வதத்தின் பின் அவன் தங்கையை மணந்து கடோற்கசனைப் பெற்றான். பின் அவளுடன் அவனை விட்டுச் செல்லுகையில், அவன் தருமனாதியோர் தன்னை நினைத்த மாத்திரத்தே வந்து அவர் பணி செய்வேன் என வாக்களித்தான்.

129. "மின்றாரை பட............' ப - ரை : மின் தாரை பட வெண் நிலா வீசும் மேகம் கொல் என - மின்னலின் ஒழுங்கு ( - வரிசை) உண்டாக வெள்ளிய நிலவை வீசுகின்ற மேகத்தைப் போல், வந்து முன் நின்றானை முகம் நோக்கி - அங்கே வந்து தன் முன் நிற்பவனான கடோற்கசனை எதிரே பார்த்து, நீதிக்கு ஓர் வடிவா நிருபன் கூறுவான் - நீதிக்கு ஒப்பற்ற உறைவிடமாகிய தருமராசன் சொல்லுவான் : உன் தாதை தமியேனொடு உயவாமல் - உன் தந்தையாகிய வீமன் என்னோடு விசாரியாமல், ஒரு வாச மலர் கொண்டிட சென்றான் - ஒரு வாசனையுள்ள பூவைப் பெற்றுக்கொள்வதற்கு (அளகா புரிக்குப்) போயினன்; என சிந்தை நொந்து - என்று கூறி மனம் வருந்தி, பின்னும் அன்புடன் இவை செப்பும் - மேலும் அன்பினால் இவற்றைச் சொல்லுவான் : எ - று.

வி - கு : தாதை பணி செய நேர்ந்த மகிழ்வினால் நகை முகத்தனாய் நின்றான் என்பது முதலுவமைக்

கருத்து. அன்றிச் செங்குஞ்சி மின்னல் போலவும் வெண் பல் நிலவு வீசவும் அமைந்த மேகம் போல எனக் கூறி னுமாம். உயவுதல் - ஆராய்தல். இதனில் அவலச் சுவை புலப்படக் காண்க.

130. "எம்பிக் கொரிடை யூறு............' ப - ரை : எம் பிக்கு ஓர் இடையூறு வந்து எய்துமுன் - என் தம்பியான வீமனுக்கு ஒரு துன்பமும் வந்தடையு முன்பே, யாம் -, இயக்கேசன் ஊர் வம்பு உற்ற மலர் வாவி விரைவோடு சென்று எய்தி - இயக்கர் தலைவனான குபேரனது அளகாபுரியிலுள்ள மணம் பொருந்திய மலர் நிறைந்த வாவியை விரைவிற் சென்றடைந்து, வருவோம் என - (வீமனை அழைத்துக் கொண்டு திரும்பி) வருவோம் என்று கூறி, வெம்புற்ற பைங் கானின் இடை - (தாம்) துன்பமடைந்த பசிய காட்டிலே, மின்னும் இளையோரும் உடன் மேவ - மின்னலையொத்த திரௌபதியும் தம்பியராகிய நகுல சகாதேவரும் தங்கி இருக்க விட்டு, (தான்), கம்பிக்கும் நெஞ்சோடு, நடுங்குகின்ற மனசோடு, அக்கணத்து அவன் தேரின் மீது ஏறினான் - அப்பொழுதே அக் கடோற்கசன் தேரில் (தருமன்) ஏறினான். எ - று.

131. "கரக்கும்ப கம்ப............' ப - ரை : கர கும்ப கம்ப கடாம் யானை மன்னன் - துதிக்கையையும் மத்தகத்தையும் கட்டுத்தறியை முறிக்கும் மதத்தையும் கொண்ட யானைச் சேனையையுடைய தருமராசன், அரக்கன் தடம் தேரில் கருத்தோடு சென்று - கடோற்கசனுடைய விசாலித்த தேரிலே (வீமனை மீட்கும்) உள்ளத்துடனே சென்று ஏறி, பரக்கும் பெரும் புண்ணியமும் பாவமும் - ஒன்று பல வாகப் பரக்கின்ற பெரிய புண்ணியமும் பாவமும் (போலவும்), தா இல் பகிர் அண்டமும் புரக்கும் பரஞ்சோதியும் பொங்கும் மா மாயையும் போல - குற்றமற்ற உலகவெளியெல்லாம் பாதுகாக்கும் சிறந்த ஒளிவடிவான கடவுளும் அவ்வுலகைப் பொங்கி மூடும் பெரிய மாயையும் போலவும், அவனோடு நீடு அந்தரத்து ஏகினான் - கடோற்கசனோடு நீண்ட ஆகாய வழியிற் சென்றான். எ - று.

வி - கு : உவமை இருவர் தோற்றமும் பற்றி வந்தது. பகிர் - வெளி.

132. "கானெல்லை செல்லாது..............' ப - ரை : வயம் மன்னுதேர் , கடோற்கசனது வலிமை பொருந்திய தேரானது, கான் எல்லை செல்லாது - காட்டு வழியிலே செல்லாமல், கதிரோன் நெடும் தேர் என - சூரியனுடைய பெரிய தேரைப் போல, கங்கை சேர் வான் எல்லை உற ஓடி - கங்கா நதி பொருந்திய ஆகாய வழி பொருந்தும்படி ஓடி. ஒரு நாலு கடிகைக்குள் - நாலு நாழிகை நேரத்தில், எல்லை இல்லாது ஊன் மண்டி புக - அளவின்றித் தசையானது மிக நெருங்க (அதனினின்று), மிக மண்டும் உதிரத்துடன் - மிகச் சேருகின்ற இரத்தத்தோடு, தேன் எல்லை இல்லாது உகுக்கும் - தேனை அளவின்றிச் சொரிகின்ற, பெரும் சூழல் சென்று உற்றது - பெரிய (சோலையின்) பக்கத்தைச் சென்றடைந்தது. எ - று.

133. "ஆனைக் குழா நூறும்..............' ப - ரை : ஆனை குழாம் நூறும் அரி ஏறு என பொங்கி - யானைக் கூட்டங்களைக் கொன்றழிக்கும் ஆண் சிங்கம் போற் கிளர்ந்து, அளகேசன் வெம் சேனைக் குழாம் நூறி - குபேரனது கொடிய சேனைக் கூட்டங்களைக் கொன்று, அதன் ஊடு பயில் வாயு சிறுவன் தனை - அச் சேனை நடுவே இருக்கின்ற வாயுபுத்திரனான வீமனை, தானை பெரும் கொற்றமன் கண்டு - சேனையையுடைய பெரிய வெற்றி பொருந்திய தருமராசன் கண்டு, தான் உற்ற தளர்வு ஆறினன் - தான் அடைந்த மனத் தளர்ச்சி நீங்கப் பெற்றான்; வனை - மற்று (கடோற்கசன்), திரு தாதையை கண்டு - தன் அழகிய தந்தையைக் கண்டு, இன்புறு - சந்தோஷம் அடைந்து, தேர் நின்று இழிந்து - தேரினின்றும் இறங்கி. எ - று.

வி - கு : பெரும்போர் முடித்துப் பூவும் பெற்று வீமன் இருத்தலின் தருமன் தளர்வாறினன். இச் செய்யுள் குளகம்.

134. "மைக்காள முகிலன்ன..............' ப - ரை : மை காள முகில் அன்ன மகனும் தன அடி மன்ன - மிகக் கரிய முகிலை ஒத்த மகனான கடோற்கசன் தன் பாதங்களைப் பொருந்தி வணங்க, வீமனும், கை கானில் நறைவாச மலர் கொண்டு அறன் காளை கழல் நல்கி - கையில் உள்

ளதும் காட்டிற் பெற்றதுமாகிய தேனும் மணமும் பொருந்திய பூவைக் கொண்டு அறக்கடவுள் தந்த காளைபோன்ற தருமராசன் பாதங்களில் வைத்து, முக் காலும் வலம் வந்து முறையோடு தொழுவானை , மும் முறை வலமாக வந்து முறைப்படி தன்னை வணங்குபவனுகிய வீமனை, முகம் நோக்கி நின்று - எதிர் நோக்கிப் பார்த்து, எக் காலும் நா வந்தது இசையாத இசையோனும் இவை கூறவான் - ஒருபொழுதும் வாயில் வந்தன வற்றை யெல்லாம் கூருத புகழையுடைய தருமனும் இவற்றைச் சொல்லுவான் : எ - று.

135. "என்னேவலாலன்றி............' ப - ரை : இமையோரும் எய்தாத இ காவில் - தேவர்களும் வந்தடையாத இச் சோலையில், நீ - என் ஏவலால் அன்றி - எனது ஏவுதலில்லாமல், மின் ஏவலால் வந்து - பெண்ணுகிய திரௌபதியின் ஏவலால் வந்து, விரகாக வினை செய்த இது மேன்மையோ - சூழ்ச்சியினுல் மலர் பறித்த இச் செயல் உனக்குச் சிறப்புடையதோ ? , உன் ஏவல் புரிவாரும் உம்பிமார் உளர் - உனது ஏவலைச் செய்பவர் உன் தம்பிமாரும் இருக்கிறுர்கள் ? , என்று - எனச் சொல்லி, தன் ஏவலால் இந்த உலகு ஏழும் வலம் வந்த தனி ஆழியான் - தன் கட்டளைப்படி தீவுகள் ஏழு அடங்கிய இப் பூமி முழுவதிலும் வெற்றி நாட்டி வந்த ஆஞ்ஞா சக்கரத்தை உடையவனுன தருமன், உருத்தான் - கோபித்தான். எ - று.

வி - கு : உன்னேவல் செய்வார் உளராக, என் ஏவலின்றி நீ இது செய்தமை தகாதெனக் கூறினுன். உலகேழும் வலம் வந்தது ராசசூய யாகத்தின்போது, "குணபாலெலம் முன்னும் வடபால் யானும் காற்றிசைக்கும், நிருதித் திசைக்கு நடு எம்பி இவனும் சிலைவேள் நிரைமணித் தேர், வருதிக் கினிலிவ்விளையோனும் மலைவான் எழுக வருக வெனு" (39) என அர்ச்சுனன் கூற்ருல் நிகழ் செயலின் பயன்.

136. "என்றிந்த உரை கூறி............' ப - ரை : என்று இந்த உரை கூறி முனிவு ஆறி - என்று இவ் வார்த்தைகளைச் சொல்லித் தன் கோபந் தீர்ந்து, இறை யோனும் -

தருமராசனும், இகலோனுடன் சென்று - வலிய வீமனு டன் போய், அம் தண் மலர் வாவி படிவுற்று - அழகிய குளிர்ந்த பூக்கள் நிறைந்த தடாகத்தில் நீராடி, வாச தரு தார் புனைந்து - மணம் உள்ள அழகிய மாலையை அணிந்து, அன்று - அப்பொழுதே, அத் தேரின் மிசை ஏறி - கடோற்கசனுடைய அத் தேரின்மேலேறி, இமைப் போதில் அந்த இடம் விட்டு - க்ஷண நேரத்தில் அவ் விடத்தை விட்டு நீங்கி, மின் தந்த இடையாளும் இளை யோரும் உறை கானின் இடைமேவினன், மின்னற் கொடி போன்ற இடையை உடையவளாகிய திரௌபதியும் தம்பி மாரான நகுல சகாதேவரும் இருக்கின்ற காட்டை அடைந் தான். எ - று.

137. "மேவிப் பெருந் தெய்வ............' ப - ரை : மேவி - அக் காட்டை அடைந்து, பெரும் தெய்வ முனி பாத மலர் சென்னி மிசை வைத்து - பெருமை பொருந்திய கட வுட்டன்மையுடைய உரோமச முனிவரது பாத மலர்களைச் சிரசிற் சூடி (வணங்கி), மென் காவி கயல் இணைக் கண் சேய் இதழ் பாவை களி கூர - மெல்லியல்பினையும் குவளை மலரும் கயல் மீனுமாகிய இரு கண்களையும் சிவந்த இதழ் களையும் உடைய பாவை போலும் திரௌபதி மனம் மகிழ்ச்சிமிக, வாவி செழும் தாம மலர் நல்கி - வாவியி லுள்ளது போன்ற செழுமையும் ஒளியும் உடைய ( - அவள் வேண்டிய) பூவைக் கொடுத்து, ஒல்காது வலி கூரும் நல் ஆவிக்கு இன் அமுது ஆன நிருதற்கு - குறைவின்றி வலிமை மிகுபவனும் நல்ல உயிர்க்கு இனிய அமிர்தம் போன்றவனும் ஆகிய கடோற்கசனுக்கு, அன்று விடை அளித்தான் - அப்பொழுது செல்ல அனுமதி கொடுத் தான். எ - று.

வி - கு : அரோ : அசை. தலைமை பற்றித் தருமன் செயலாகக் கூறினும் வீமனுதியர்க்கும் கொள்க.

138. "மின்புரை மருங்குல்............' மின் புரை மருங் குல் மின்னும் வேந்தரும் - மின்னற் கொடியை ஒத்த இடையையுடைய திரௌபதியும் தருமன் முதலிய ஐவ ரும், அந்தக் கானில் - அக் காந்தர்ப்பமலைக் காட்டிலே,

அன்பு உடை முனிவன் - தம் மாட்டன்புடைய உரோமச முனிவர், நாள் தொறும் -, தோகை பாகன் தன் பெரும் கதையும் கூற கேட்டு - உமாதேவி பாகராகிய சிவபிரானது பெருமை பொருந்திய ( - புராண) கதைகளையும் (தரும நெறி களையும்) சொல்லக் கேட்டு, அவன் மலர் பதம் போற்றி- அம் முனிவரின் மலர் போலும் பாதங்களை வணங்கி, துன் பமும் துனியும் மாறி தங்கினர் - தாமடைந்த துயரமும் அதனாலுண்டான வெறுப்பும் நீங்கிச் சந்தோஷமாக இருந் தார்கள். எ - று.

வி - கு : என்ப, மாது, ஓ : அசைகள். முனிவன் கதை கூற ஐவர் கேட்டு மாறித் தங்கினர் எனப் பொருண் முடிபு காண்க.

059008

# Under Publication

## Question and Model Answers

*(By the same author)*

*for*

*Tamil Text Books.*

*Prescribed for*

Ceylon Govt. S. S. C. Exam.

1950-1951.

**SRI BHARATHI BOOK DEPOT**

**CHAVAKACHCHERI.**

Sri Lanka Book Depot

**ஸ்ரீ லங்கா புத்தகசாலை**

யாழ்ப்பாணம்.

தமிழ் ஆங்கிலப் பாடசாலைகளுக்கு வேண்டிய புத்தகம் கொப்பிகளும், பேனை பென்சில் முதலிய உபகரணங்களும், பிறவும், அரசியல் பொருளாதார சாஸ்திர நூல்களும், காலப் போக்குக்குரிய நூல்களும், அச்சியந்தரசாலைக்கு வேண்டிய கடதாசிகளும் விற்கும் இடம்.

வியாபாரிகளுக்கு விசேஷ கமிஷன் உண்டு.

## ஸ்ரீ பாரதி புத்தகசாலை,

சாவகச்சேரி.
(Ceylon.)

தமிழ் ஆங்கிலப் பாடசாலைகளுக்கு வேண்டிய புத்தகங்கள், கொப்பிகள் முதலியனவும், கடதாசி, பென்சில் முதலிய உபகரணங்களும், பிறவும் நியாயமான விலைக்கு இங்கே கொடுக்கிறோம்.

## SRI BHARATHI BOOK DEPOT

Book Sellers & Stationers.

*CHAVAKACHCHERI.*

Ceylon.

---

**Sole Distributors:**

SRI LANKA BOOK DEPOT
K. K. S. Road,
Jaffna.

THE LITTLE FLOWER TRADING Co.
102, Main Street,
Jaffna.

ANSARI BOOK DEPOT
Armour Street,
Colombo.

RATNA STORES
Slave Island,
Colombo.